

மனக் கதவைத்
திறந்துவிடு
காஞ்சனா ஜெயதிலகர்

# மனக் கதவைத் திறந்து விடு

## மனக்கதவைத் திறந்து விடு

## 1

மும்பையின் மின் ரயில்களில் பயணிப்பது ஒரு கலை.

அத்தனைக் கூட்டத்திலும் நெரிசலிலும் அலுங்காதது போல வந்து இறங்குபவர்கள் அக்கலையில் தேறியவர்கள்!

சில வருடங்களாக மும்பையில் இருந்ததில் ரம்யாவுக்கு அவசர வாழ்க்கையின் பல கலைகளில் தேறியிருந்தாள்.

தேர்ச்சி இருந்தாலும் மனம் அதில் தோய்ந்திருந்தது என்பதற்கில்லை. அமைதியான ஒரிடத்தில் விச்ராந்தியாய் நிற்க முடியாத ஏக்கம் இருந்தது.

மாலை ஐந்திற்கு 'விக்டோரியா டெர்மினல்' பொங்கல் பானை போல ஜனத்திரளால் பொங்கித் ததும்பியது. வாசல் வழியே மனிதர்கள் வழிய வழிய, ரயில்கள் சளையாமல் மேலும் மனிதர்களைக் கொண்டு வந்து கக்கின.

படியேறி சாலைக்கு வந்தாள். 'ஃப்ளோரா ஃபவுண்டன்' முழுக்க சாலையோரக் கடைகள். பத்து ரூபாய்க்கு சாக்ஸும், ஐம்பதுக்கு பழைய ஸ்வெட்டர்களும் விற்கும் இளைஞர்கள்.

சேணமிட்ட குதிரை போல இலக்கு நோக்கி இயந்திரமாய் நடந்தாள்.

பத்து நிமிட நடையில் 'மெரின் ட்ரைவ்' வந்து விடலாம்.

ஒருபுறம் ஆர்ப்பரிக்கும் கடலும், மறுபுறம் பழைய அடுக்கு மாடி வீடுகளுமான பகுதியின் 'கங்கா விஹாரின்' இருபது குடித்தனங்களில் அவளதும் ஒன்று.

'அவளது' என்று துணிந்து சொல்ல முடியாது. அது சித்தியின் வீடு. கல்லூரி வாழ்வின் மூன்றாண்டுகளை இங்கிருந்து படித்ததால் இதுதான் வீடு. பெற்றவர்கள், தங்கள் ஒரே மகளுக்கென்று எதுவும் கட்டி வைக்காததால் இதுதான் புகல்.

சித்தி பல வருடங்களாய் இங்கேதான் வசிக்கிறாள். கல்யாணம் செய்து கொள்ளாத கணக்குப் பேராசிரியை அவள். கல்லூரியில் நிறைந்த வருமானம். சிரிப்பதற்கும், பேசுவதற்கும் கூட சற்று கணக்கு பார்க்கும் சுபாவம் சித்திக்கு. ஆனால் நல்ல மனசுதான். இல்லையென்றால் அக்கா மகளைக் கூட வைத்துப் படிக்க வைக்க வேண்டிய அவசியமென்ன?

அம்மா உயிரோடு இருந்த காலத்திலும் விடுமுறை சமயங்களில் ரம்யா மும்பை வந்ததுண்டு. அம்மாவிற்கு வேறு போக்கிடம் கிடையாது. அண்ணன் குடும்பம் பெரியது. அண்ணி மனம் சிறியது. ஆக தங்கை வீடுதான் தேடி வருவாள்.

அப்போது புயல் மாதிரி அலைக்கழியும் பட்டணமும் கடலைப் பார்த்த வீடும் பார்த்த இடமெல்லாம் மஞ்சள் விளக்கின் ஜொலிப்பும் ரம்யாவை அசத்தியிருக்கின்றன. முக்கியமாய் இப்பட்டணத்துப் பெண்கள்..!

அதீத நாகரீக உடையும் அதற்குப் பொருத்தமான அலட்டலில் அவர்களது பேச்சும் சிரிப்பும்.. வாய் திறந்து பார்த்திருக்கிறாள்!

ஆனால் இங்கு வாழ ஆரம்பித்த சில மாதங்களில் அத்தனையும் பழகி இப்போது அலுத்து விட்டது.



அம்மாவிற்கு நுரையீரல் புற்று.

எத்தனைக் காலமாய் உள்ளே அரித்துப் பரவியதோ? ஆனால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரே வாரத்தில் அவளை அடித்து சாய்த்து விட்டது.

சித்தி உடனேயே வந்தாள். உடன் நின்று காரியங்களை முடித்தவள் ரம்யாவைப் பிடித்தபடி ரயிலேறினாள்.

இல்லையென்றால் தன் நிலை... யோசிக்கவே அஞ்சியதுண்டு. அப்பா வீட்டிலும் அதிகப் பேரில்லை. ஒரே அண்ணன்தான். பெயர் ராஜதுரை.

கேப்டன் ராஜதுரை என்ற பெயரில் வருஷத்திற்கு இரு முறை வாழ்த்தட்டைகள் ரம்யாவைத் தேடி வரும். ஒன்று வருடப் பிறப்பிற்கு மற்றது இவள் பிறந்த நாளுக்கு..

அப்பா இல்லாமலே வளர்ந்த பெண்ணிற்கு, பெரியப்பாவைப் பார்க்க ரொம்பவே ஆசை.

'எம்மா கொங்குவார்பட்டி எங்கேயிருக்குது?'

'மதுரை மாவட்டம்.. இல்ல திண்டுக்கல்லோ?'

'அங்க நாம ஒரு தடவ போவமா?'

'பெரியப்பா அழைக்காம நாம போக முடியாதேடி.'

'எம்பிறந்த நாளை நினைவு வச்சிருந்து கார்ட் அனுப்பறாங்க?'

'அது ஒரு சம்பிரதாயம். ஆனா வாங்கன்னோ, ரம்யாவைப் பார்க்க ஆசைன்னோ ஒரு வார்த்தை அதில எழுதலியே அவர்?'

'பெரியப்பா பாக்க எப்படியிருப்பாங்க?'

'ஆர்மில இருந்தவர். மிடுக்கா உடுத்துவார். 'பைப்' பிடிப்பார். எங்க கல்யாணத்தப்ப ஃபுல் சூட்டில் இருந்தார். அவருக்குத் தனியா மேசை போட்டு கல்யாண விருந்து பரிமாறினோம்.'

'அப்பா ஜாடையா?'

மகளின் தலையைக் கோதிய தாய் புன்னகைத்தாள்.

'இல்ல கண்ணு. உங்கப்பா அதிர்ந்து பேசமாட்டாங்க. அதுக்கேத்த சாது முகம். பெரியப்பா முரட்டுத்தனமாத் தெரிவார். யார்கிட்டேயும் அதிகமாகப் பழகறதுமில்லை... நீ உங்கப்பாவைக் கொண்டிருக்கே..'

'நல்லவேளை முரட்டு குட்டியாப் பிறக்கலை!'

சிரித்துக் கொள்வார்கள்.

சித்தி அம்மா போல அரட்டையடிக்கும் ரகமில்லை. ஆனால் தேவைகளை நேர்த்தியாய் கவனிப்பாள்.

"தினம் 'ஸாலட்' சாப்பிடணும் ரம்யா. ஏன் அப்படியே இருக்கு... பாக்கலியே?"

"உச்சியிலே ஒரு கை நல்லெண்ணெய் வைக்காம தலைக்கு ஊத்தாதே நீ. இத்தனை தலைமுடியை நல்லபடி பராமரிக்க வேணாம்?"

"இன்னைக்கு ஷாப்பிங் போறோம். நாலு ஸல்வாருக்கு துணி எடுத்துடலாம்."

"எதுக்கு சித்தி நாலு?"

"துணியா எடுத்தா இருநூறுதான். நீயே தச்சுக்கறே... பிறகென்ன. விதவிதமா உடுத்தற பருவம் இதானே?"

சித்தியின் கல்லூரி மாலை மூன்றோடு சரி. ஆக வீடு வருபவள் டிபனுக்கு ஏதேனும் செய்து வைத்திருப்பாள்.

மற்றபடி பரீட்சைத் தாள்களைத் திருத்துவது. ஆங்கில செய்தித்தாளின் ஒரு பக்கம் விடாது படிப்பது. பி.பி.சி. என்று சித்தியின் உலகம் தனி.

வலுக்கட்டாயமாய் சுருங்கப்பட்ட உலகம் எனத் தோன்றும்.



நடைபாதையில் சில இளைஞர்கள் காலில் ரோலர் ஸ்கேடனுடன் வழுக்கிப் பாய்ந்தனர். ஒதுங்கி நின்றாள்.

மரத்திலிருந்து தலையில் ஏதோ 'சொட்'டென விழ, தொட்டுப் பார்த்தாள் 'விழுவிழு'வென்றது.

எதிரே வந்த ஒரு பருத்த பெண்மணி சிரிப்புடன்.

"குட் லக் பேபி" என்றபடி ஒரு காகிதத் துண்டெடுத்து ரம்யாவின் தலையைத் துடைத்தாள்.

"தாங்க்ஸ்.."

புறாக்கள் தலையை அசிங்கம் செய்துவிட்டன. இதிலென்ன 'குட் லக்?' போனதும் தலைக்கு ஊற்ற வேண்டும்.

ஓரளவு கூந்தல் உலர அரைமணி நேரமாகும். அத்தனைக்கும் நீளமும் அகலமுமான கூந்தல். நாளை கம்ப்யூட்டர் தேர்வு வேறு..

விடுவிடுவென மாடி ஏறினாள்.

"சித்தி..." குரல் தந்தபடி நுழைந்தாள்.

வழக்கமாய் "வா" என சின்ன புன்னகையுடன் வரவேற்கும் சித்தி இன்று இறுகித் தெரிந்தாள்.

"தலைக்கு ஊத்திடறேன் சித்தி.. புறா எச்சமிட்டிருச்சு.."

சித்தி விநோதமாய் பார்த்தாள்.. "அப்ப.. அதுக்கு முன்னே.. உங்கிட்ட அந்த விஷயத்தைச் சொல்லிடறேன்.."

"குளிச்சிட்டறேனே... எப்படியோ இருக்குது.."

"கேட்டுட்டு ஊத்திக்கோ.. ஒரு அர்த்தமிருக்கும்.."

நெஞ்சத் துடிப்பு அதிகமானது. வயிற்றுக்குள் மெல்லிய அதிர்வு.

"என்ன... என்னாச்சு சித்தி?"

"உங்க பெரியப்பா இறந்துட்டாராம்?"

சற்று உறைந்தாற் போலிருந்தது. இதுவரை நேரில் பார்க்காத, பழகாத பெரியப்பாவின் இழப்பை எப்படி எதிர்கொள்வது என்பது புரியவில்லை.

ஆனால் ஏதோ ஒரு பாதிப்பிலிருந்ததை உணர முடிந்தது.

'திடும்'மென பரீட்சை ஞாபகம் வந்தது!

பட்டப்படிப்பை முடித்தவளை "எம்.பி.ஏ. சேரேன்" என்று சித்தி வற்புறுத்தியும் கூட "முதல்ல ஆறு மாச கம்ப்யூட்டர் கோர்ஸ் சேருரேனே சித்தி" என்று ஆரம்பித்த படித்த படிப்பின் தேர்வு நாளை இருக்கிறது. தேறினால் வேலை நிச்சயம். வட இந்திய பட்டணங்களில் அது வசதி. படிப்பிருந்தால் வேலை தேடி வரும். சித்திக்கு பாரமாய் இராமல் துணையாய் இருக்கலாம்.

"அப்படின்னா... நா... நான் கிளம்பணுமா சித்தி?"

"அவசரமில்லை. போன வாரமே இறந்துட்டாராம்."

"அப்ப... ஏன் நமக்குச் சொல்லலை?"

"அவரு எப்பவுமே விநோதமான மனுஷர். இருந்த ஒரே சொந்தம் நீதான். ஆனா முன்னமே உன்னை இதுக்குன்னு அலக்கழிக்க வேணாம்னுட்டாராம். 'உயிரோட என்னைப் பார்க்காத பொண்ணு சவமா ஏம் பார்க்கணும்'னாராம்..."

"இதெல்லாம் யார் சொன்னா?"

"அவர் வக்கீல் ராமானுஜம் கொஞ்சம் முன்னே போன் பண்ணினார். உனக்குப் பரீட்சை நடந்திட்டிருக்குன்னேன்..."

"ம்ம்..."

"எல்லாம் முடிஞ்ச பிறகே வரட்டும்னார்."

செய்தி முழுக்க இப்போதுதான் உறைத்தாற் போல அவளுக்குக் கண்கள் கலங்கின.

"பெரியப்பாவை ஒரு தரமாவது நான் போய்ப் பார்த்திருக்கணும்... இல்ல."



"அவரும் உன்னைத் தேடி வரலை..."

"அப்ப இப்ப ஏன் போகணும்?"

"ஏன்னா... முதல்ல நீ குளிச்சிடு..."

தலைக்கு ஊற்றிய போது கூடவே கண்ணில் நீரும் கலந்தே வழிந்தது. கூடவே பெற்றவர்களின் நினைப்பும்...

வேறு உடுத்தி, கட்டிய ஈரக் கூந்தலைப் பிரித்து உதற, சித்தி சாம்பிராணிக் கரண்டியின் கங்குகளில் பொடித் தூவினாள்.

மணமாய் புகை பொங்கியது.

கூந்தலை புகைக்கு வாகாய் காட்ட, ஈரக் கருங்கூந்தல் வழியே புகை சோம்பலாய் புகுந்து மேலேறியது.

முறுக்கோடு காபி பருகியவள் மீண்டும் கேட்டாள்.

"ஏன் சித்தி கெங்குவார்பட்டி போகணும் நான்...?"

"சொல்றேன்." சித்தியின் குரல் உடைந்திருந்தது.

"தன் சொத்து அத்தனையையும் உம்பேரிலேதான் எழுதியிருக்கார் பெரியப்பா. நீ போய் என்ன, ஏதுன்னு பார்த்து பொறுப்பேத்துக்கணுமில்ல?"

இப்போது ரம்யாவிற்கு 'குப்'பென புகை கிளம்பினாற் போலிருந்தது. தடுமாறினாள்.

"பெரியப்பாவுக்கு சொத்தெல்லாம் இருந்ததாம்மா?"

"அறுபது எழுபது ஏக்கர் நிலம். முழுக்க தென்னையும் பழமரமுமாய். அது நடுவே பங்களா கட்டி இருந்திருக்கிறார்..."

"அத்தனையும் இனி எனக்கா...?"

குழப்பமாய் கேட்டாள்.

சித்தியின் கன்னங்களில் நீர் கோடாய் இறங்கியது.

"இனி நீ எனக்கில்லடி ரம்யா..."

ஆறுதலாய் சித்தியைக் கட்டிக் கொண்டாள்.

இருவரது இதயங்களும் பலக்கத் துடிப்பது தெரிந்தது!

# 2

சித்தியின் சிநேகிதியுடன் சென்னையில் ஒரு நாள் தங்கிய ரம்யா மறுநாள் அதிகாலை திண்டுக்கல் வந்திறங்கினாள்.

அங்கிருந்து கிராமம் போக டாக்ஸி ஏற்பாடு செய்ய நினைத்தாள்.

முதலில் தானே வந்து அழைத்துப் போவதாய் சொன்ன வக்கீல் தன் மாமனார் இறந்து விட்டதாய் சொல்லி மாயமாகிப் போனார். ஒரு வாரத்துக்கு நான் பிஸி. ஏதும் செய்ய முடியாது என்றபடி கிடைத்த டிக்கெட்டை மாற்றவோ, ரத்து செய்யவோ மனமின்றி பயணத்தை தொடங்கி விட்டாள் ரம்யா.

முதலில் இதுவரை சட்டை செய்யாத பெரியப்பாவின் சொத்தை ஏன் ஏற்க வேண்டும் என்றது மனம்.

தர்மத்திற்கு கொடுத்துவிட்டால் என்ன என்று கூட ஒரு தயாள எண்ணம்.

இது தன் தகப்பனின் அண்ணன், தங்களது குலவாரிசுக்கு விட்டுப் போயிருப்பது என்றும் தோன்ற மனசு மாறியிருந்தது.

"வீடு திறந்துதான் இருக்கும். வீட்டை அருளும், வர்ணமுமா சேர்ந்து பாத்துக்குவாங்க. புருஷன் பொண்டாட்டி... பல வருஷமாய் கேப்டனோட இருந்தவுங்க" என்றும் வக்கீல் விவரம் தந்திருந்ததால் சுணங்காமல் கிளம்பி விட்டாள்.

அது தவிர புது ஊரை, வீட்டை அதுவும் திடீரென மாயாஜாலம் போல தன்னாகி விட்ட வீட்டை பார்க்கும் ஆவலும் காரணம்.

"மே வரைக்கும்தான் லீவு. அதுவரை வேணுமானா அங்கே இரு. பிறகு மும்பை வந்து எம்.பி.ஏ. சேர்ந்திடு. படிப்பு முக்கியம்."



ரயில் நிலையத்திலும் அதையே சொன்னாள் சித்தி. "சரி சித்தி.. அங்கே வீட்டில் போன் இல்லியாம். போய் சேர்ந்ததும் ஸ்டேஷனிலிருந்து ஒரு போன் போடறேன்."

"லெட்டர் தவறாம எழுது. அப்படி அங்க இருக்க முடியாதுன்னு தோணினா உடனே கிளம்பிடு. வக்கீலை வச்சு மொத்தத்தையும் வித்துடலாம்."

கண்ணாடி வழியே சிறு கண்டிப்புடன் உருண்ட சித்தியின் விழிகளைப் பார்த்தவளுக்குச் சிரிப்பாய் வந்தது.

"நல்ல இடம்னு தோணுச்சுன்னா சொல்றேன். நீங்க அங்க வந்திடுங்க சித்தி."

"என்னால கிராமத்தில எல்லாம் இருக்க முடியாது. நல்ல லைப்ரரி இருக்காது. கரெண்ட்டே சமீபத்திலதான் கனெக்ஷன் வாங்கினாராம். அத்தனைக் காடு போல... இந்த லட்சணத்துல படிக்கிற பெண்ணை அங்கே அழைச்சா அனுப்ப முடியுமா..?"

நெற்றியில் சிறு சுருக்கம் விழ சித்தியைப் பார்த்தாள்.

"அப்படீன்னா என்னைப் பெரியப்பா அங்கே கூப்பிட்டாரா..?" பீன்ஸ் பொரியலில் கலந்திருந்த மிளகாயை சேர்த்து மென்றது போல மாறியது மூத்தவளின் முகம்.

"ம்ம்... அது போலத்தான்னு வை.."

"எப்போ சித்தி?"

"மறைப்பானேன்?போன விடுமுறையப்பவேகூப்பிட்டார்."

"லெட்டர் வந்ததா?"

சித்தியின் முகம் சற்றே சிவந்து இறுகியது.

"வந்தா உங்கிட்ட தந்திருப்பேன். யார் மூலமோ... இதே வக்கீல்தான்னு நினைக்கிறேன்... அழைப்பு வந்துச்சு. வர விரும்பினா ரம்யா வரலாம்னு... அப்போ.. நீ கிடார் க்ளாஸ் சேர்ந்திருந்தே. தையல் பரீட்சை வேற. அத்தனையும் விட்டுட்டு அங்கே வந்து என்ன செய்வான்னு மறுத்துட்டேன்.."

அதிகம் கொஞ்சிக் குலாவாவிட்டாலும் சித்திக்கு தன் மீது நிறைந்த அன்புதான்! வேறு யாரும் தன் பொம்மையை அபகரித்து விடுவார்களோ என்று ஒளித்து வைக்கும் குழந்தையைப் போல...

"மன்னிச்சிடு ரம்யா... இப்ப யோசிச்சா உன்னை அப்போ அனுப்பியிருக்கணும். இல்லை ஒரு வார்த்தை கேட்டாவது இருக்கணும்... தன்னலம்தான். கொட்டக் கொட்ட மும்பை ஃப்ளாட்டில தனியேக் கிடக்கணுமேங்கற பயம்..."

"அப்படின்னா இப்ப எங்கூட வரலாம்ல சித்தி? உங்க துணையிருந்தா எனக்கும் தனி தைரியம்..."

"நீ எப்பவும் துணிச்சல்காரிதான். உன்னால எதையும் நிர்வாகம் பண்ண முடியும்னுதான் கடவுள் உனக்கிதைத் தந்திருக்கார். சரிவராதுன்னு தோணினா உடனே வந்து சேர்ந்திடு..."

"இப்ப உங்க பி.ஹெச்டி அத்தனை முக்கியமா?"

"என் வாழ்நாளில ஆசைப்பட்ட விஷயமது ரம்யா. என் ஸப்ஜெக்ட் 'கைட்' இப்பதான் ஃப்ரீ என்கிறார். விடுமுறையிலே முடிச்சாதான் உண்டு. பிறகு அவர் ஆஸ்ட்ரேலியா போறார். நல்ல 'கைட்' கிடைக்கறது தகுந்த மாப்பிள்ளை கிடைக்கறது போல... ரொம்ப கஷ்டம்..."

சித்தி அதிகம் பேசினாள். பிரியப் போகும் ஆற்றாமை.

"பரீட்சை முடிஞ்ச சமயம்..., உனக்கும் ஒரு மாற்றமா இருக்கட்டும். நாம் இருக்கறது வாடகைக்குத்தான்... சொந்தம்னு சொல்லிக்க ஏதும் பிரமாதமாய் கிடையாது. வலிய வந்த சீதேவியைப் போய் பார்க்க வேணாம்? அமைதியான கிராமம்.. பொறுப்பான தம்பதிகள் உண்டுங்கறார் அங்க... போய் பார்த்திட்டு வந்திடு..."

"ம்.. அங்கிருந்து கிளம்பறதுக்கு முன்னே உங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஒரு வாரமாவது வந்து எங்கூட இருக்கணும். நாம சேர்ந்தே மும்பை திரும்பிடலாம்."



எதிர்காலம் தங்களுக்கு வைத்திருப்பது வேறு' என்பது புரியாமல் திட்டமிட்டாள் அந்த இருபதுவயது பெரிய மனுஷி!

டாக்ஸி கிராமத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இவளுக்கென்று பல ஏக்கர் பூமியும் வீடுமாய் காத்திருக்கும் ஊர். திடீரென்று தன்னை ஒரு குட்டி இளவரசியாய் உணர வைத்த சொத்து. இல்லாவிட்டால் சில நூறுகள் தந்து இப்படி 'டாக்ஸி'யில் பயணப்பட மனம் வருமா?

"இதான் சொந்த ஊராம்மா?"

டாக்ஸி டிரைவர் பேச்சு வளர்த்தார். ரெயில் நிலையத்தின் வெளியே காத்து நின்ற ஓட்டுனர்களில் சற்று வயதும் கண்ணியமுமாய் தெரிந்தவர் இவர்தான். ஆனால் அவ்வப்போது கேள்விகளால் குடைவதுதான் பிடிக்கவில்லை.

"ம்ஹூம்.."

"இல்லைங்கறீங்களா? ஏங் கேக்கிறேன்னா எனக்கு இங்க வந்து போயி பழக்கம். யாருன்னு தெரிஞ்சுக்கத்தான்.."

'எனக்கேத் தெரியாதுய்யா' எனச் சொல்ல நினைத்தவள்.

"கேப்டன் வீடு.." என்றாள்.

"அங்கியா!" ஏறக்குறைய அலறல்தான் அது.

துணுக்குற்றாலும். அலட்சியமாய் வெளியே பார்த்தபடி இருந்தாள்.

"வெளி கேட்டுலேயே இறக்கி விட்டுடறேம்மா உன்னை.."

"ஏன் வெளி கேட்டிலேருந்து வீடு எவ்வளவு தூரம்?"

"அதாகும் அஞ்சு நிமிஷ நடை.."

"பெரிய பெட்டி பையோட என்னால நடக்க முடியாது."

பட்டணத்து மிடுக்குடன் சொன்னாள்.

"நானும் நாய்க்கடி வாங்க முடியாதும்மா..." அவர் கிராமத்து கறாருடன் பேசினார்.

பெரியப்பா நாய் வளர்த்தாரா என்ன. அதுவும் கடிநாய்?

"வீட்டு வாசல்ல நிறுத்தினால் போதும். நான் பெட்டி படுக்கையை இறக்கிடுவேன்."

"சரி கொஞ்சம் மேலேப் போட்டுக் கொடும்மா..."

"மும்பையில மீட்டருக்கு மேலே பைசா வாங்கமாட்டாங்க" சிடுசிடுத்தாள்.

சென்னையில் தங்கிய ஒரே நாளில் நேர்ந்த பஸ் பயணம் கூட அவளைத் திகைக்கச் செய்தது. எந்த ஒழுங்குமுறையும் இல்லாத அடாவடித்தனம் அத்தனை பஸ்களிலும் தெரிந்தது.

பாதி வழியில் இந்த டாக்ஸிக்காரர் காசுக்கு நெருக்குவதும் பிடிக்கவில்லை.

"இது நம்ப ஊரும்மா..."

"அதான் ரொம்ப வருத்தமாயிருக்குது."

வாயை மூடிக் கொண்டார்.

வந்ததுமே சித்தியிடம் தான் பத்திரமாய் ஊர் வந்து சேர்ந்த விவரம் தெரிவித்து விட்டாள். அருகே ஏதும் தொலைபேசி 'பூத்' இருக்குமா என்பதை இவரிடம் விவரம் கேட்க பிடிக்கவில்லை. அதற்கும் தனியே வசூலிப்பார்!

"நீங்க அந்தப் பிள்ளைக்கு ஏத்த ஜோடிதாம்மா."

வம்படிக்காமல் இருக்க முடியாது போலும் மனுஷனுக்கு. ஆனாலும் இவளுக்கும் இம்முறை வாய்மூட முடியவில்லை.

"யாரைச் சொல்றீங்க?"

"அங்கேயிருக்காரே ராஜேந்திரன். நாய்ங்க கூட அவருதுதான். போன தடவ யாரோ எஞ்சினியர் இங்க இறக்கி விட வந்தா.. நாய மேல ஏவிட்டாரு."

"இப்ப அங்க யாருமில்லை..."

"அவரு இருக்காரும்மா. கிட்டு சொன்னானே.. அவன் எங்க எதிர்வீடு."



ஏனோ பதட்டமானாள்.

"கேப்டன் ராஜதுரை எம் பெரியப்பா..."

"ராஜேந்தரு அவரு கூடவே இருந்தாரும்மா... நிலபுலமெல்லாம் கவனிக்கறதுக்கு ஒத்தாசையா நின்னாரு."

"ஓஹோ... ஆனா இப்ப யாருமில்லை."

"அட இருக்காருங்கறேன். கிட்டு வச்சிருக்கற கறிக் கடையிலேருந்துதான் அதுகளுக்குத் தினம் எலும்பும், கவுச்சியும் போவும். 'கேட்'டைத் தாண்டி ஒரு பய நுழைஞ்சிர முடியாது. நம்ப தொடைக்கறிய பிச்சு எடுத்திரும்."

தன்னை மீறி அவள் முதுகு சொடக்கியது.

வக்கீல் இதுபற்றி ஏதும் சொல்லவில்லையே!

ஒரு டாக்ஸி டிரைவர் பேச்சை அதிகம் நம்புவது தப்பு. தன் புத்தியைத் தட்டி சமாதானப்படுத்தினாள்.

"ஆனா உங்கள ஏதும் செய்யாதும்மா. 'சென்ட்டு' தடவுன பொட்டைப் புள்ளைகளை கண்டா நாயி ரெண்டும் வாலாட்டிக் குழையுமாம்..... அங்கே அடிக்கடி பொண்ணுங்க வந்து போவாங்களாயிருக்கும்.."

கைகளை உடம்போடு இறுகக் கட்டியபடி வெளியே பார்த்தாள். தூரத்தே நீல மலைகள் அரண் போல நின்றன. அதற்கு இப்பால் எங்கும் பசுமை. செழிப்பான ஊர்தான்.

எளிய மக்களாயிருப்பார்கள்.

"அந்தாளுக்குக் குடிப்பழக்கங் கூட உண்டு. வெளிநாட்டுச் சரக்கு பாட்டிலுங்க நூத்துக் கணக்குல அப்பப்ப பழைய பாட்டிலும் கடைக்கு வரும்.. என்னா தினுசங்க.."

"யாரு... அந்த ஆள்?"

தாங்க முடியாமல் கேட்டாள்.

"கேட்டதுக்கு உறவுன்னு நினைக்கிறேன். ஒன்னா இருந்தாங்களே. வேற யாரையும் பெரியவர் அண்ட விட்டதில்லை. கறாரான ஆளு... வெளியக் கூட வரமாட்டாரு..."

பெரியப்பாவிற்கு மனைவி வழி உறவாயிருக்குமோ என்று நினைக்க வழியில்லை. அவர் ஒண்டிக்கட்டை... பின் யாராய் இருக்கும்?

"இதாம்மா காம்பவுண்டு."

'ராஜபவனம்' என்ற கருங்கல் பலகை.

அது பதிந்திருந்த மதில் சுவர் கருத்து பாசான் படர்ந்திருந்தது என்றாலும் விரிசல்கள் இல்லை. பாதையின் இருமருங்கும் சப்போட்டா, மா, கொய்யா என்று பலவகை கனிமரங்கள்.

சற்று தொலைவில் வீடு தெரிந்தது.

அழகு என்பதற்கில்லை. ஆனால் பரந்த வீடு.

உள்ளே வசதியாய் இருக்கக் கூடும். கார் நெருங்கவும், இரண்டு ஜெர்மன் ஷெப்பர்ட் ரக நாய்கள் முற்றத்திற்கு வந்து நின்று உரக்கக் குரைத்தன.

இவளுக்குக் குடல் சுருண்டது. அப்படியானால் இந்நாய்களின் சொந்தக்காரன் இங்குதான் தங்கியிருக்கிறானா?

உரிமையாளர் இல்லாத நாய் இத்தனை செழிப்பாய் நிற்காது. இரண்டும் கன்றுக்குட்டி அளவில் வயிறு வற்றாமல் கம்பீரமாய் தெரிந்தன.

ரம்யாவிற்கு நாய்களுடன் பரிச்சயம் உண்டு. பயந்தவர்களிடம் அவை ஜம்பம் காட்டுவதும், இயல்பாய் சற்று கம்பீரமாய் நிற்பவர்களிடம் வாலைக் குழைப்பதும் அறிவாள்.

இறங்கியவள் டாக்ஸிக்கான பணம் தந்தாள்.

குரைப்பு கூடியது. ஆனால் முற்றத்தை விட்டு இறங்காமல் காவலாய் நின்றன.

"டிக்கியைத் திறங்க."



"இறங்க மாட்டேன்னு சொன்னேல்ல இந்தாங்க சாவி. திறந்து சாமானை எடுத்துக்கோங்க..." ஓட்டுனர் பம்மினார்.

துழாவித் திறந்து தன் பெட்டிகளை இறக்கினாள். டிக்கியை மூடி சாவியை நீட்டிய மறுநொடி கார் கிளம்பிப் பறந்தது.

பெட்டிகளுடன் நின்றவளை வீட்டுப் படியேற விடாது மறித்து நின்ற நாய்கள் குரைப்பதை விட்டு உறுமின.!

## 3

வீட்டின் கதவு ஒருக்களிப்பாய் திறந்திருந்தது ஒரு ஆறுதல் - ஆக உள்ளே ஆளுண்டு.

"வர்ணம்... வர்ணம்மா..." குரல் தந்தாள்.

வால்கள் லேசாய் ஆடின. தெரிந்த பெயர் கேட்டதால் நேர்ந்த இளக்கம்.

"யாரு... ஷ்ஷ்... டிம்மு, ஜின்னு... கோபட்"

உறுமலை முழுங்கி விட்டுத் தளர்ந்தன.

பாதிக்குப் பாதி நரை முடியுடன் எட்டிப் பார்த்துதான் வர்ணம் போல. கிராமப் பாணியில் சேலைக்கட்டு. தளராத உடம்பு. மூக்கின் இருபுறமும் கிடந்த அகல மூக்குத்திகள் அவள் முகத்திற்குக் களையாகப் பொருந்தின. இருபுறமும் வாழைகள் கட்டிய கல்யாணவீடு போல...

"நான்... ரம்யா. மும்பையிலேருந்து வந்திருக்கேன்"

"அடடே... வாங்கம்மா... வக்கீலய்யா நீங்க இன்னைக்கு வாரதா ஏதுஞ் சொல்லலியே... சொல்லியிருந்தா இதுகளைக் கட்டிப் போட்டிருப்பேன்..."

பேசினது தப்பா சரியா என்பது புரியாதவளாய் அசட்டுத்தனமாய் சிரித்தாள்.

"நாய்ங்க யாருது?"

"சின்னய்யாதுங்க.. சின்னவரு.."

"யார் ராஜேந்திரா?" கேள்வி அவளையும் மீறி சற்று 'கள்'ளென்று வந்ததில் வர்ணத்தின் முகம் நிறம் கப்பியது.

"யாரு.. வக்கீலய்யாவா சொன்னாக?"

"அவர் ஏன் ஏதும் சொல்லலைங்கறதுதான் தெரியலை. உங்களைப் பத்தியெல்லாம் சொன்னார்."

"வக்கீலய்யா இங்க வந்து போறதில்லீங்களே.. ரெண்டொரு தரம் வந்ததோட சரி."

"ஆனா ராஜேந்திரன் இங்கேயிருக்கிறது தெரியும்."

"தெரியுங்கம்மா. ஆனா வந்து.."

வேலை செய்து மொர மொரப்பான விரல்களைச் சொடுக்கிக் கொண்டாள் வர்ணம். கரங்களில் கோலம் போன்ற பச்சைக் குத்து.

"முதல்ல பெட்டியை உள்ளே கொண்டுப் போவமா?"

"இவரு சந்தைக்குப் போயிருக்காரும்மா. வைங்க நா எடுத்துட்டு வாரேன்."

"பெட்டியை மட்டும் தூக்கிக்கோங்க."

பைகளைத் தூக்கியவள் வீட்டினுள் நுழைந்தாள்.

நாய்கள் மறுபடி மெள்ள உறுமின.

"இதுங்க பேரென்ன?"

"டிம்மு.. ஜின்னு.."

"டிம். ஜின்.. அப்படியா?"



"ஆங்.. அப்படித்தான் சின்னய்யா கூப்பிடுவாரு."

"ராஜேந்தரையா சின்னய்யாங்கறீங்க?"

பரிதாபமாய் விழித்தாள் வர்ணம்.

"ஏன் அப்படி?"

"ஒரு வருஷமாவே அப்படிக் கூப்பிட்டுப் பழகிருச்சம்மா."

"யாரு அப்படி கூப்பிடச் சொன்னா.."

"ஒரு வசதிக்குக் கூப்பிட்டோம். பெரியய்யாவும் சரின்னுட்டாரு."

"பெரியப்பா தனியா இருந்ததா வக்கீல் சொன்னாரே?"

"அவருக்கு ஏதும் விவரம் தெரியாதுல்லம்மா.. வந்து போயி இருந்தாத்தான? பத்து நாளைக்கு முன்ன வந்து. 'உடனே இடத்தைக் காலி பண்ணிருங்க'ன்னுட்டு போயிட்டாரு.."

"சரி போக வேண்டியதுதானே?"

"ஒன்னரை வருஷமா வந்தும்மா... வீடு நிலமெல்லாம் சின்னவருதான் பார்த்துக்காரு. திடீருன்னு எங்க போறது? இந்த ஊருல பட்டணம் போல வசதியா வீடுங்க சட்டுனு கிடைக்காதுல்ல?"

"ஓ.கோ... வசதியா வேற வீடு கிடைக்கலைன்றதுக்காய் வேண்டாத விருந்தாளியாத் தங்கிடறதா?"

வரவேற்பறையில் வசதியாய்த் தெரிந்த ஒற்றை சோபாவில் அமர்ந்து சாய்ந்தாள். நாய்கள் மறுபடி உறுமின.

"என்னவாம்..?"

"அது... சின்னவரு இடங்க..." சற்று பெருமையும் சற்று பூரிப்புமாய் விளக்கம் வந்தது.

ஆக வர்ணத்திற்கும் ராஜேந்திரனைப் பிடித்திருக்கிறது. அவன் வேறெங்கே போகக் கூடும் என்று பரிந்து பேசுகிறாள். நாய்களது விசுவாசம் பற்றி கேட்கவே வேண்டியதில்லை. அந்த

வீடு அவனுக்குரியதாகி இருக்கலாம். ஆனால் அதில் உள்ளவர்கள் அவன் பக்கமில்லை. பல மாதங்கள் பழகிய அவன் பக்கம். பார்க்கும் முன்னமே எதிரியின் பலம் உணர்ந்தாயிற்று. வக்கீல் சொல் கேட்டு வெளியேறும் உத்தேசமில்லை அவனுக்கு.

பெரியவர் சொன்னபடி உயில் தயாரித்து. இவளுக்குச் சொத்து பற்றி தகவல் தருவது மட்டும்தான் வக்கீல் பொறுப்பு.

போகிற போக்கில் 'நீ இடத்தைக் காலி பண்ணிடுப்பா' என்றிருக்கிறாள் கடமைக்கு. இவனோ அசையாத கல்லுக் குதிர் போல..

"உங்க ரூம்பு மாடியிலம்மா..."

இவளும் படியேறினாள். பழையது என்றாலும் நீள, அகலமான வீடு. நீண்ட பயணம் அவளைக் களைப் பாக்கியிருந்தது. குளித்து, சற்று துங்கி எழுந்தால் இந்தச் சவாலை எதிர்நோக்க சற்று தெம்பாய் இருக்கும்.

நாய்களும் இவர்களைத் தொடர்ந்தன.

நாய்கள் ரம்யாவிற்குப் பரிச்சயமான ஜீவன்கள். சித்தி வீட்டில் நாய் வளர்க்கவில்லையே தவிர அம்மா இருந்தவரை வீட்டில் நாயிருந்தது. ஆண் இல்லாத வீட்டிற்குக் காவல் என்பதோடு இருவருக்கும் அது நல்ல துணை வேறு.

நாய்களுக்குத் தனியே இருப்பதைவிட தண்டனை வேறில்லை. ஆட்களின் பின்னோடு குழந்தையாய் அலையும்.

"உங்கள்ல யாரு டிம். யாரு ஜின்?" குழந்தைகளிடம் கொஞ்சம் தொனியில் அவற்றிடம் குனிந்து விசாரிக்க, இரண்டும் காது மடக்கி வாலாட்டின. மூக்கை இவள் கைக்குள் வந்து திணித்தன. தடவித் தர வேண்டுமாம்.

"இதுங்க கடிக்குமா என்ன?"

கைக்கொன்றாய் தட்டித் தந்தபடி கேட்டாள்.



"ஐய.. கன்னுக்குட்டி சைஸைக் கண்டு அவனவன் கட்டுரப் புரளிங்கம்மா இதுக விளையாட்டுப் பிள்ளைக சதா தங்களை யாரேனும் கொஞ்சணும். விசாரிக்கணும்."

"பின்னே... நா வரவும் பிரமாதமாய் உறுமனீங்களே.. ம்ம்?" அவை உற்சாகமாய் ரம்யா மீது எம்பி நின்றன. முன்னங் கால்களைத் தூக்கி ஏறக்குறைய இவள் உயரத்திற்கு நிற்க, ஒரு கணம் இவளுக்கு வயிறு சுருண்டது.

"ஷ்ஷ்.. டவுன்."

வர்ணத்திற்கு நாய்களுக்கான உத்தரவுகள் அத்துப்படி போலும்.

கீழே இறங்கியவை ஓரமாய் படுத்துக் கொண்டன.

"ஆக இதுக யாரையும் கடிச்சக் குதறலை?"

"ஐய இல்லிங்கம்மா. குரைக்கலைன்னா அப்புறம் இதுகளுக்குத் தீனி போடறது எதுக்காம்? ஒரு பயம் இருந்தாத்தானே... இல்லைன்னா கண்ட பயலுவளும் உள்ள வாரதும் போறதுமாய்..."

பெட்டிகளை அறைக்குள் வைத்தனர்.

தரைக்கு மொஸைக், சுவர்களுக்கு நவீன வர்ணம் என்ற அலங்காரங்கள் இல்லை. கட்டில் நாற்காலிகளும் கூட ஆர்ப்பாட்டமின்றி கிடந்தன.

ஒரு ஆணின் வீடு இது.

அதுவும் கல்யாண ஆசையற்ற ஒரு பட்டாளத்துக்காரரின் வீடு. இப்படித்தான் இருக்கும்.

ரம்யாவின் பெண்புத்தி அறையை எப்படி மாற்றலாம் என்ற திட்டத்தில் இறங்கியது. ஜன்னல்களுக்கு பாதித் திரைச்சீலைகள் மட்டுமே. அதுவும் கெட்டிக் கதரில். முழு திரைச்சீலைகள் தேவை. பூப்போட்ட நயமான துணி அறையின் அழகூட்டும். பொருத்தமான படுக்கை விரிப்புகள்.

சில கண்ணாடி பதித்த குஷன் உறைகள். கொண்டு வந்திருப்பதை போட்டால் ஹால் எடுப்பாகும். இந்த வெற்று சுவர்கள் மாற வேண்டும். பக்கத்திற்கொன்றாய் இல்லாவிடினும் ஒரு புறம் பெரிய இயற்கைக் காட்சியும் மறுபுறம் ஏதேனும் சிற்பம் ஒன்றும் போதும்.

சிமெண்ட் தரை அழுது வடிகிறது. 'ரெட்டாக்ஸைட்' இரண்டு டின் வாங்கிப் பூசினால் பவளமாய் பளபளக்கும்.

ஆங்காங்கே பசும் ஃபர்ன் செடிகள்..

மனக்கண்ணில் இத்தனையும் பார்த்தவள் முகம் மலர்ந்தது.

"இது பெரியப்பா அறையா?"

"முன்னே இங்க இருந்தாங்கம்மா. அப்புறம் மூட்டுவலி வரவும், மாடிப்படி இறங்கி ஏற தோதில்லைன்னு கீழறைக்கு மாறிட்டாங்க.."

"அந்த ஆள்.. ம்ம்.. ராஜேந்தர்..."

"கீழேதாம்மா இருக்காங்க. அவருதான் இந்த அறையை உங்களுக்கு தயார் செய்து வைக்கச் சொன்னாக."

அறை தயாரானது இருக்கட்டும். வீடு அவள் வருகைக்குத் தயாராகவில்லையே? யாரென்று அறியாத ஒரு ஆணுடன் இங்கு.. ஏறக்குறைய அந்துவானத்தில் எப்படி தங்குவது?

"நீங்களும் இங்கதான தங்கறீங்க வர்ணம்?"

"அவுட் - ஹவுஸ் இருக்குதும்மா. கூப்பிடு தொலைவுதான். மாட்டுக் கொட்டாயில பசு நிக்குது. ஆக அதையும் கவனிச்சுக்கத் தோது."

ஆக இங்கே இவளும் அவனும்தானா?

எரிச்சலாய் வந்தது. முக்கியமாய் பெரியப்பா மீது.

கட்டுச் சோற்றுக்குள் பெருச்சாளியையும் கட்டி வைத்தல்லவா தந்திருக்கிறார்?

"பெட்டியப் பிரிச்சு அலமாரியுள்ள அடுக்கணுங்களா?"



"முதல்ல குளிக்கணும் வர்ணம்."

சற்று பின்னாக வளைந்து பிடரியைக் கைகளால் நீவினாள்.

"கேப்டன் சொன்னது போல பட்டணத்து பொண்ணுங்க ஸ்டைலேத் தனி. அதான் இங்க வர இவ்வளவு தயக்கம் போல.."

கேலி கலந்திருந்த அந்த ஆண் குரல் தளர்ந்த அவளை மேலும் முறுக்கியது.

"யாரு?" திரும்பினாள்.

பாண்ட் பாக்கெட்டுகளுள் கைவிட்டபடி கதவில் சாய்ந்து நிற்கும் இவன்.. இவனா ராஜேந்திரன்?

புத்தி சற்று உறைந்தாற் போலானது.

அவனது இருமருங்கும் நாய்கள் ஆசையாய் அமர்ந்திருந்தன சாட்சி போல..

இத்தனை இளைஞனாய்.. நாகரீகமானவனாய் எதிர்பார்க்க வில்லை. முகமெங்கும் கபடு நிரம்பிய காட்டானைத்தான் எதிர்பார்த்தது.. ஆனால் இப்படி ஒரு பெண்ணின் அறைக்குள் எதிர்பாராமல் வந்து நிற்பதா நாகரீகம்?

கட்டமிட்ட 'ரேமண்ட்' ஷர்ட்டும், வெளிறிய ஜீன்ஸும் போட்டால் ஆயிற்றா? இந்தக் காட்டில் திரிபவனுக்கு இத்தனை உயர்ரக ஷூக்கள் எதற்காக..? அத்தனையும் பெரியப்பாவிடமிருந்து அடித்த பணமாய்தான் இருக்கும்.

"ரொம்பக் கோபம் இல்லையா.. ஒரு நிமிஷத்துக்குள்ளே என்னைப் பற்றி நூறு விஷயங்களை அலசிடுச்சு புத்தி.. ம்ம்? வர்ணம் அம்மாக்குக் குடிக்க.. என்ன தந்தீங்க?"

"இல்லய்யா.. இப்பத்தான் வந்தாங்க.."

"நாய் குரைச்ச சத்தம் கேட்டு நான் விசாரித்து விவரமறிஞ்சு பதினைஞ்சு நிமிஷமாச்சு.. இன்னுமா ஏதும் தரலை? எலுமிச்சம் ஜூஸ் பிழிங்க இல்லைன்னா டீ.. எது வேணும் ரம்யா?"

அவனது ஆழ்ந்த குரல் உபசரணையாய் குழைந்தது.

"என் வீட்டில என்னை யாரும் உபசரிக்க வேண்டியதில்லை.. ஆத்துத் தண்ணீரை நான் குடி. ஐயா நீயும் குடிங்கறாப்பல.." வார்த்தைகளை விசிறினாள்.

## 4

"நினைச்சேன் இப்படி பச்ச இஞ்சி மாதிரி பேசுவேன்னு" சற்றும் அலட்டாமல் பதில் வந்தது.

வர்ணம் அதற்குள் நழுவியிருந்தாள்.

நாய்கள் இவளை விநோதமாய் தலை சாய்த்து பார்த்தன.

"ஸாரி.. இப்படி சட்டுனு வந்து நின்னது தப்பு.. உன்னைச் சொல்லலை.. என்னையேச் சொல்லிக்கிறேன்... ரம்யாவைப் பார்க்கற ஆவல்.. அவ்வளவுதான்."

"சாயங்காலம் நாலு மணிக்கு உங்ககிட்ட பேசணும்."

இப்போது போகலாம் என்பது போல நின்றாள்.

"லஞ்ச் சாப்பிட்டுட்டே கூட பேசலாம்."

"இல்ல. இங்கே ரூமிலே சாப்பிட்டுக்குவேன்."

முன்னே நடந்து வந்தவள்... அவனை மிக நெருங்கிய பின்னும் விலகாமல் நின்றான்.

"லேசில நகரமாட்டீங்களா.. கதவை மூடணும்."

"ஓ— நா கைகுலுக்க வந்தேன்னு நினைச்சேன்."

"அதை நீங்க வீட்டைக் காலி செய்யும் போது வச்சக்கலாம்."

"அதாவது பிரியா விடை போல...?"



"ப்ளீஸ்.. நகருங்க.."

"ஷ்யூர்."

கதவை மூடியவளுக்கு தன் உடம்பு அதிருவது போலிருந்தது நினைத்ததுக்கு மாறாக ஒரு எதிரி!

அழகும், கேலிப் பேச்சுமாய் ஒரு வாலிபன்!

நீள மூச்சு விட்டாள்.

குளியல் அறையில் கீஸர் உறுமிக் கொண்டிருந்தது. குழாய்களைத் திறந்து பதமாய் வெந்நீர் விளாவிக் குளித்தாள். உடம்பு முழுக்க சந்தன சோப்போடு கடலை மாவை அழுந்தத் தேய்த்தவளுக்கு அவன் 'பட்டணத்துப் பெண்ணின் ஸ்டைல்' என்றது நினைப்பு வந்தது.

எரிச்சலுடன் பரபரவென்று தேய்த்து ஊற்றினாள்.

மும்பையைப் போல இங்கு மின்சார உதவியுடன் சூடான காற்றில் கூந்தலை உலர்த்தும் அவசரமில்லை.

தோட்டத்திற்குப் போய் காலாற நடந்தபடியே துழாவி ஆற்றலாம். வயிறு பசித்தது. வர்ணத்திற்கு கூறு போதவில்லை. ஒரு ஆணுக்குத் தெரிந்த அளவு கூட உபசரணை தெரியவில்லை.

கதவைத் திறந்தவள் பார்வையில் சுவரோரமாய் நின்ற மேஜை பட்டது. அதன்மேல் கேஸரோலும், ஃப்ளாஸ்கும் இருந்தன. வரும்போது மேஜை இங்கிருந்ததாய் நினைப்பில்லை.

கேஸரோலின் மூடியை விலக்கினாள். ஆவி பறக்க கேரட்.. தக்காளி எல்லாம் கலந்த உப்புமா இருந்தது.

அறைக்குள் எடுத்துப் போய் சாப்பிட்டாள். சர்க்கரையும் புதினாச் சட்னியும் தொட்டுச் சாப்பிட நாவு சுரந்தது.

திடும்மென ஒரு நினைப்பு.... இதில் விஷம் கலந்திருக்குமோ? விஷமமாய் பேசினானே ஒழிய விஷமாய்

தெரியவில்லை. மூடிவெடுத்தவள் இஞ்சி டீயையும் பருகினாள். உயிர் மீண்ட உணர்வு.

அத்தனையையும் மூடி பழையபடி வெளியேயிருந்த மேசையின் மீது வைத்தவள். தோட்டத்திற்குப் போனாள்.

நேர்த்தியாக திட்டமிட்டு பராமரிக்கப்பட்ட தோட்டமல்ல அது. ஆனால் மண்ணின் செழிப்பு தெரிந்தது. சாதாரண செம்பருத்தியும், போகன்விலா, இருவாட்சியும்தான்... சுற்றிய சிநேகமான பட்டுப்பூச்சிகள் ஒவ்வொரு பூவாய் தொட்டுத் தொட்டு விசாரித்தபடி பறந்தன.

தானும் பறக்கலாம் போன்ற ஒரு உல்லாசம் அவளுக்குள். பின் கட்டிலிருந்த நாய்கள் இப்போது இவளைத் தேடி சேர்ந்து கொண்டன. வாய்க்கு வந்த ராகத்தை முணங்கியபடி நடந்தாள். விரல்கள் கூந்தலைக் கோதிப் பிரித்தன.

தனக்கென்று ஒரு பண்ணை வீடு என்று தெரியவந்ததும் அவள் அவ்வப்போது அதுபற்றி சந்தோஷப்படுவதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. தன் தோழி ரவீனாவிடம் போய் நின்றாள்.

"ரவீ, உங்க மாமாவின் பண்ணைக்கு எங்களைப் போன வருஷம் கூட்டிட்டுப் போனியே..."

"ம்ம்... மறுபடி... போணுமா... அவர் பையன் ஹான்ட்சம் இல்லை?" கண்சிமிட்டினாள் தோழி.

"மறுபடி போகணும்... ஆனா வேற காரணம்.. உம்மாமா அத்தைட்ட கொஞ்சம் பேசணும்."

"ஏதும் இண்டர்வ்யூவா?"

"ம்ஹூம்... தோட்டக்கலை அரிச்சுவடி அவங்ககிட்டே யிருந்து கத்துக்கணும். கிராமத்துக்கு ஏதும் தெரியாம போய் நிற்கக் கூடாதில்லியா?"

"எங்கே போற ரம்ஸ்?"



விவரமெல்லாம் உடன் படித்த தோழிக்குச் சொன்னாள்.

"கண்டிப்பாப் போகலாம். நம்ப ஸ்யாமாவோட கம்பெனில கூட உன்னை வேலைக்குக் கூப்பிட்டாங்களே... நல்ல கம்பெனி."

"தெரியும். ஆனா இதையும் என்னென்னு போய் பார்க்கணு மில்லையா? சில கையெழுத்துகள் போடணுமாம். ஏதோ... கடவுள் செயல்னு தோணுது நான் எம்.பி.ஏ. சேர்ந்திருந்தா இப்படி டிசம்பர் மாசம் 'டக்'குனு கிளம்பியிருக்க முடியாது. போய் 'லீஸ்'ஸுக்கு விட்டுக்கணும்."

"உனக்கு எப்பவுமே அமைதியும் ஏகாந்தமான இடங்கள் பிடிக்குமில்லை?"

"ஆமா ரவீ. அதான் சில மாசங்கள் அங்கேத் தங்கி... என்னென்ன முயற்சியெல்லாம் சாத்தியமாங்கறதைத் தெரிஞ்சுக்க ஆசைப்படறேன். மா, தென்னையெல்லாம் ஏற்கனவே இருக்குது."

"அப்புறமென்ன?"

"அப்ப செழிப்பான மண்ணுதான் - உபரியாய் இடமிருந்தா என்ன செய்யலாம்... இப்படி ஏதேனும் ஆலோசனைத் தருவாங்கல்ல?"

"ரைட். இந்த வீக் எண்ட் போலாம்."

"ரவீனாவின் மாமாவிடம் பேசியதில் மனம் வெதுவாய் எழுச்சிக் கொண்டிருந்தது.

"பொண்ணுங்க பிஸினஸ், ட்ராவல்ஸ்னு ஏதேதோ செய்யுதுங்க. பண்ணையும் அது நடுவே வீடும் இருந்தாப் போதும். ராணியா வாழலாம். விவசாயத்தின் மூலம் வர்ற வருமானத்துக்கு வரி கிடையாது தெரியுமோ? எத்தனை சம்பாதிச்சாலும் கமுக்கமாய் பணத்தை மூட்டைக் கட்டி வச்சுக்கலாம்" சிரித்தார்.

"ஆம்...மா. அப்படித்தான் நம்ப வீடு முழுக்க காசு மூட்டையா உருளுதாக்கும்?"

கேலியாய் நொடித்தாள் அவர் மனைவி.

"அதான் உம்மேல நகையும் பட்டுமாப் போர்த்தி உருளவிட்டிருக்கேனே. நீதான் எம் பணமூட்டை" கண் சிமிட்டினார் கணவர்.

"நீ சொல்றதைப் பார்த்தா தண்ணீர் வசதியுள்ள செழிப்பான பூமி அது. முதல்ல வேலி சரியா இருக்குதான்னு பாரு. பக்கத்திலே அரசாங்க தோட்டக்கலை மையம் இருக்கணும். அவங்ககிட்ட ஆலோசனை கேளு. கன்றோ, விதையோ அங்கேயே நயமானதாய் வாங்கு..."

அவர் சொல்லச் சொல்ல குறித்துக் கொண்டாள். பண்ணை பராமரிப்பு பற்றி சில புத்தகங்கள் வாங்கினாள்.

அது புது உலகம் ஆச்சரியத்துடன் உள்ளே நுழைந்தாள்..! ரயிலில் வந்த சக பயணி தோட்டக்கலை ஆராய்ச்சி மையமும் கல்லூரியும் வெகு அருகிலேயே இருப்பதாய் சொல்லிவிட அவளது ஆர்வம் மேலும் கொப்பளித்தது.

காய்ந்த கூந்தலைக் கோடாலி முடிச்சிட்டவள் அறைக்குத் திரும்பினாள். அதுவரை பட்டாம் பூச்சி, குருவிகளை விரட்டிய நாய்களும் அவள் பின்னோடு.

"சாப்பிடறீங்களாம்மா?"

"இப்பதான் ஆச்சு... உப்புமா நல்லாயிருந்தது."

"மதியத்துக்கு பருப்பு ரசம். கிழங்கு வறுவல் சமைச்சிருக்கேன். நீங்க அசைவந்தானம்மா?"

"ஆமா..."

"முயல் கறியும் இருக்குது."

"எனக்கு அதெல்லாம் பழக்கமில்லை வர்ணம். கோழி, மீன், முட்டை இவ்வளவுதான். அதுவும் எப்போதாவதுதான்."

"இது சின்னவரே வேட்டையாடுனது."

'அப்ப நிச்சயமா வேண்டாம்' என்று நினைத்தவள்,



"எனக்கு கிழங்கு பிடிக்கும். அது போதும். தூக்கம் வருது தூங்கிட்டு வந்து சாப்பிடறேனே..."

அறையின் திறந்த ஜன்னல்கள் வழியே காற்று புகுந்து விளையாடியது.

படுத்த நிமிடமே தூக்கம் சொக்கியது.

விழிப்பு வந்த போது மணி நான்கு.

தூக்க சுகத்தில் படுக்கையில் புரண்டவளுக்கு 'திடும்' மென நினைப்பு வந்தது.

ராஜேந்திரனை நான்கு மணிக்குப் பேச அழைத்தானே... எழுந்து முகம் கழுவ ஓடினாள்.

## 5

கூந்தலை சிக்கெடுத்துப் பின்ன நேரமில்லை. மேலாகச் சீவிக் கொண்டையாக்க, கருத்த இளநீர் போல அது அவள் பிடரியில் திரண்டிருந்தது.

ரம்யாவின் உடம்பு கொடி வாகு. ஆனால் வசிகரமான வளைவுகள்! கண்டிப்பாய் பார்ப்பவரை மறுமுறை... பலமுறை பார்க்கத் தூண்டும் முகம். பேசுகையில் பல பாவனைகள் காட்டும் அழகு முகம் அலுத்தே போகாது நீண்ட கருவிழிகளும் திரண்ட ரோஜா உதடுகளும் அசைவது ஏதோ மாயாஜாலம் போலிருக்கும். சித்திக்கு இவளை நன்கு உடுத்தி கூட அழைத்துச் செல்வதில் ஏகப் பெருமை.

சித்திக்கு கடிதம் எழுத வேண்டும். ஊர் வந்தது பற்றி தெரிவித்தாகி விட்டது. இந்த வீடு, பண்ணை பற்றி... ஆனால் இந்த... இங்கிருக்கும் பெருச்சாளி பற்றி என்ன எழுதுவது?

முதலில் தெரிவிப்பதா... வேண்டாமா?

முதல்ல சாப்பிடலாம் பிறகு யோசனை

சாத்தானை நினைத்த மாத்திரத்தில் எதிரே வந்து நிற்பானாமே - இதோ சாட்சி!

"மணி நாலேகால் ஆயிடுச்சு."

"சாப்பிட்ட பிறகு தெம்பாய் பேசலாம்."

"நீங்க காத்திருக்கணுமே..."

"நான்தான் எங்கேயும் போகப் போறதில்லைன்னுட்டேனே அப்பறமென்ன?"

உதட்டைப் பிதுக்கியவனது இடது கன்னத்தில் அழகாய் குழிந்தது.

அதில் பதிந்த பார்வை மீட்டாள்.

"எல்லாப் பெண்களும் அந்தச் சின்னக் குழியிலே கொஞ்சம் தடுமாறுவாங்க!"

உல்லாசமாய் பீற்றினான்.

தடுமாறினாள்... என்ன பதில் சொல்வது என்ற தவிப்பு. தலைதட்டி இடத்தில் உட்கார வைக்க வேணும் இவனை... இந்தப் பேச்சு பேசுகிறானே!

"வர்ணம்... வர்ணம்மா."

"எல்லாம் சூடாய் இருக்குது மேசையில..."

"நா... நாம் பாத்துக்கறேன். நீங்க போகலாம்..."

அரச தொனியில் ஆணையிட முயன்றாள். ஆனால் அத்தனை விறைப்பாய் வரவில்லை!

"என்ன வெட்கம்? ஒரு வேளை சாப்பிடுவதைப் பார்த்து கண்ணு போட்டுருவேன்ற பயமா?"

நேரந்தவறி தூங்கியதாலா அல்லது இவன் பேச்சா... இவளுக்குத் தலை வலித்தது.



பசியாகக் கூட இருக்கலாம்.

பரிமாறிக் கொண்டு அமர்ந்தாள்.

ஒரு குவளை நீர் ஊற்றி வைத்தவன் அகன்றான்.

ரசம் நல்ல சூட்டில் இருந்தது. அப்பளம், பொரியல், துவையல் என்று வயிறு நிரம்ப சாப்பிட்டாள்.

எட்டிப் பார்த்த வர்ணம் கையில் ஒரு சிறு கிண்ணத்துடன் வந்தாள்.

"மூணு வரைக்கும் காத்திருந்தேம்மா... பாலு கறக்க நாழியாயிடுச்சு..."

"நல்லா சூடாயிருந்துச்சா... திருப்தியா சாப்பிட்டேன்."

"சின்னய்யா சூட வச்சிருப்பாரு... நா பாத்துக்கறேன் நீ போன்னாங்க. அவுகளும் நேரம் சென்னுதான் சாப்பிட்டாக. இன்னைக்கு வாழைக்கு தண்ணிப் பாய்ச்சறதைக் கூடவே நின்னு பாத்தாக..."

"வாழை எங்கே போட்டிருக்குது?"

"கிழக்கால போவணும். பழஞ் சாப்பிடுங்கம்மா."

"இதென்ன?"

"சிறுமலைப் பழம். தேனாட்டம் இருக்கும். வெட்டிப் போட்டு, தயிரு, சீனி, தேங்காப்பூ சேத்து கொணாந்தேன்..."

ஒரு ஸ்பூன் வாயில் இட்டாள். அபாரமாய் ருசித்தது.

"ரொம்ப நல்லாயிருக்குது."

"சின்னவருக்குத் தினம் இது வேணும்."

இதென்ன தொட்டதுக்கும் 'பெரிய புராணம்' போல இங்க 'சின்னவர் புராணமா' யிருக்கிறது?

மறுவாய் ஏதோ அத்தனை ருசிக்கவில்லை.

"உங்க வீட்டுக்காரர்?"

"இப்ப வந்திருவாரும்மா."

"நாளைக்கு விவசாய சென்டர் போக ஒரு டாக்ஸி வேணும் வர்ணம். இங்கேயிருந்து எவ்வளவு தூரமிருக்கும்..?"

"வந்து... கணக்கெல்லாம் தெரியாதுங்க... வண்டிச்சத்தம் ரெண்டு ரூவா வரும். சின்னவரு காரிலேயே போயிட்டு வந்துருங்களேன்.."

அதுசரி. ஒண்ட வந்த பிடாரிக்கு வாகனம் வேறு இருக்கிறதா?

முன்னறைக்கு வர. அவன் கம்பீரமாய் தன் சோபாவில் அமர்ந்திருந்தான்.

மௌனமாய் இவளை உறுத்தவனிடம் எரிச்சல் கூடியது.

"எப்ப எப்போ காலி பண்ணப் போறீங்க?"

"என்னைவிட ஒன்பது வயசுச் சின்னவங்கறதால ஒருமையிலேயே பேசறேன் ரம்யா. நீ வர்றதுக்கு முன்னே அப்படி ஒரு அபிப்ராயம் இருந்துச்சு. சொத்துக்குரியவங்க வந்ததும் எல்லாம் அவங்க பொறுப்பு. நாம கிளம்பிடலாம்னு... ஆனா இப்போ அப்படியில்ல..."

"ஏன் இல்லை?"

"இளம் வயசுப் பொண்ணுங்கறது தெரியும்... இத்தனை அழகுன்றது தெரியாதே.. இனி எப்படிப் போறது?" அங்கலாய்த்தான்!

"இதென்னப் பேச்சு... பொ.. பொ.. பொறு-."

"பொறுப்பிருப்பதாலத்தான் சொல்றேன்."

"ச்சே..."

"என்ன இல்லியா?"

"இல்லை பொறுக்கித்தனமான பேச்சுன்னு சொல்றேன்."



"எது பொறுக்கித்தனம்? அழகுக்குக் காவல் அவசியம். அதனால உன்னை இங்கத் தனியே விட்டுட்டுப் போறது முறையில்லைங்கறதா?"

வலது புருவம் கேள்வியுடன் உயர்ந்தது.

"நாக்கு நல்லா வளையுது; சிடு சிடுத்தாள்.

"வளையலைன்னா பேச்சே வராது."

"வஞ்சகமா வளையுது உங்களுக்கு."

"ஔவை போல இனிது இனிது ஏகாந்தம் இனிது என்றிருக்கப் போறியாம்மா?"

இவனுக்கு இலக்கியப் பரிச்சயம் வேறா?

"ஏகாந்தமா இருக்கலாம்னுதான் வந்தேன்... இங்க இப்படியொரு நந்தி - மந்தி இருக்கறது தெரியாமப் போச்சு.."

பாதிப் பேச்சை மென்று விழுங்கினாள்.

"எதிர்பார்க்காததால கொஞ்சம் தடுமாறும். ஆனாத் தனியா இருக்கறது அதைவிட கஷ்டம்.."

"பெரியப்பா உயில்ல உங்களைப் பற்றி ஏதுமில்லை.."

புருவம் சுருக்கினாள்.

உயிலில் வேலைக்கார தம்பதிகளுக்கு 25,000 ரூபாய் போல ஒதுக்கப்பட்டிருந்தது. அவர்கள் காலம் வரை அவுட்-ஹவுசில் தங்கிக் கொள்ளலாம் என்ற சலுகையும் கூட... ஆனால் இந்தப் பெருச்சாளி பற்றி... ஏதுமில்லை.

"அதாவது எம்மேலே சந்தேகம்..ம்? சந்தேகம் சந்தோஷம் தராது."

"அதுக்காக உங்களை சகிச்சுக்கணுங்கறதும் இல்லையே.."

"யோசிச்சுப் பார்த்தா சந்தோஷமா சகிச்சுக்குவே.. ஏன்னா இது தனியிடம் அவசரத்துக்கும் போன்கூட கிடையாது. அழகான இளம் பெண் இங்கத் தனியாய் தங்கறது உசிதமில்லை."

"யாருன்னே தெரியாத ஒரு ஆளோட தங்கறது மட்டும் உத்தமமா? வக்கீல் நோட்டீஸ் தர்ற வரை நீங்க இங்கதான் இருப்பீங்கன்னா.. அது- அது முறையேயில்லை.."

கோபத்தில் மூச்சிரைத்தது.

"வணக்கம்மா."

தடுமாறித் திரும்பினாள்.

"இவருதாம்மா எவ்வீட்டுக்காரரு..." வர்ணம் அறிமுகம் செய்தாள்.

"ஆங் வணக்கம்.. உங்க பேரு..?"

"அருளுங்க. அருளுதாஸ்."

வேண்டிய தகவல்களை இந்த அருள் மூலமாகத்தான் அறிய வேண்டும். ஆக சகஜமாய் பேசியவள்,

"வாங்க மேலே ரூமுக்கு போயிடலாம்" என்று தனியே கூட்டிப் போனாள்.

ராஜேந்திரனிடம் இதற்கும் மேல் பேசியிருந்தால் ராசாபாசமாயிருந்திருக்கும். நல்லவேளை இந்த இடையூறு நேர்ந்தது.

கிராம மக்களுக்கே உரிய அசமந்தத்துடன் ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையே 'வந்துங்கம்மா' என்று அவர் இழுத்து இழுத்து பேசினாலும் இவளுக்கு வேண்டிய விவரங்கள் வந்தன.

"இப்ப தோட்டம் யார் பொறுப்பிலே?"

"வந்து... சின்னவருங்கதாங்க பாக்குறது. முன்ன முத்தையன்னு ஒத்தரு பாத்தாரு.. எதும் தேவைன்னா இப்பவும் கூப்பிட்டுக்கறதுதான்.."

"அவரை நான் வரச் சொன்னேன்னு சொல்லி விடுங்க அருளு."

"சரிங்க.."



"கணக்கு வழக்கெல்லாம் கூட உங்க.. சின்னவருதானா?"

"எல்லாமுங்க.. வந்து."

"வேற பயிர் செய்யாத நிலம் இங்கயிருக்கா?"

"கிடக்குதுங்க. சல்லிசா வந்துதுன்னு வாங்கிப் போட்டது. நம்பக் கேணியிலிருந்து வாய்க்கா மூலியமா அங்கத் தண்ணி பாய்ச்சக் கூடும். ஒழிச்சுப் போட்டிருக்கோம்.. வந்து அங்கேயும் வாழை போடலாம்னு சின்னவரு அபிப்ராயம்."

இவளுக்கு சுடுத்தது.

"இனி இது என் சொத்து. எங்கே என்ன போடணுங்கறதில மத்தவங்க அபிப்ராயம் இனி வேணாம். இது டிசம்பர் மாசம். தர்பூசணி போட்ட மூணே மாசத்துல நல்ல விளைச்சலோட கையில காசும் வந்திடுங்கறாங்க அதுபற்றி பண்ணை ஆபீசிலே கேட்கணும். அங்க போகணும் நாம..."

அருள்தாஸ் தலையைச் சொறிந்தார். பட்டணத்து இளைஞர்களுக்கு முப்பதிலேயே சொட்டை விழ இவருக்கு தலை வழிய வழிய முடியிருந்தது. அதே அளவு அரிப்பும் உண்டு போல!

"கேள்விப்பட்டிருக்கேன்.. இதுவரைப் போனதில்லீங்க."

"நாளைக்கு டாக்ஸி ஒன்னை ஏற்பாடு செய்திடுங்க. நீங்களும் கூட வர்றீங்க."

தயக்கமாய் தலையாட்டினார் அருள்.

ஸ்கூட்டர் இங்கு அவசியத் தேவை என ரம்யாவிற்குப் பட்டது. பெண்களுக்கு ஏற்றமாதிரி இப்போது பல மாடல்கள். அதற்கு எங்கு.. யாரிடம் போவது? ஓட்டத் தெரியும். லைசென்ஸ் கூட உண்டு. வாகனம் வாங்க மதுரை அல்லது திண்டுக்கல் போக நேருமோ?

இனி சில நாட்களுக்கு கடும் அலைச்சல் இருக்கும் அஞ்சினால் ஆகாது.

தன் பொருட்களைப் பிரித்து அடுக்கியவள் தோட்டத்தைச் சுற்றி வந்தாள். பிரமிக்கும் அளவு நன்கு பராமரிக்கப்பட்டிருந்தது. தென்னை, பழ மரங்களுடே சிலுப்பி, ஓடிய ஓடைகள் என்று தோட்டம் செழிப்பாயிருந்தது.

ஒரு பெரும் சதுரம் நெல் வயலாய் இருந்தது.

"வீட்டுக்கு அரிசின்னு வாங்குனதே இல்லீங்கம்மா. இங்க விளையறதுதான்."

"ஓஹோ?"

ஆர்வமாய் சுற்றி வந்தாள்.

வீடு திரும்பியபோது அசதி இருந்தாலும் ஆர்வம் கூடியிருந்தது.

"பெரியப்பா படம் ஏதும் காணலியே வர்ணம்."

வர்ணம் தந்த சுக்கு காபியைப் பருகியபடி கேட்டாள்.

"உன் ரூம்பில இருக்குதும்மா."

"பார்க்கலாமா?"

கடைசியாய் பெரியப்பா பயன்படுத்திய அறை சின்னது தான். அதன் ஓரமாய் சாய்ந்து நின்றது அப்புகைப்படம். தன் தந்தையையும் கூட ரம்யா புகைப்படம் மூலமாய்த்தான் அறிவாள்.

இருவருக்கும் எந்த ஒற்றுமையும் இருப்பதாய் தோன்றவில்லை.

"இந்தப் படத்தைத் துடைச்சு ஹால்ல மாட்டனும் வர்ணம்."

"செஞ்சுடறேனுங்க."

"ரொம்ப வருஷத்துக்கு முன்னே எடுத்தப் படம் போல.. சமீபமாய் எடுத்தது இல்லையா?"

வர்ணம் அவஸ்தையாய் நெளிந்தாள்.

"ஐயா எடுத்துக்க மாட்டாருங்க.." தயக்கமாய் சொன்னாள்.



நாளை வெளியே போய் வரும் போது மாலை வாங்கிப் படத்திற்குப் போட வேணும். இவர் இறந்த போதும் மகள் என்ற முறையில் தான் அஞ்சலி செய்ய முடியவில்லையே.

மறுநாள் பழப்பண்ணை, விவசாயக் கல்லூரி இரண்டுக்கு மாய் போனாள். இரண்டிலும் இருந்த இளைஞர்கள் உற்சாகமாய் பேசினார்கள். இவள் சொன்னதைக் கவனமாய் கேட்டு,

'தாராளமாச் செய்யலாமே' என ஊக்கம் தந்தார்கள். வேண்டிய விதைகளுக்கு ஆர்டர் தந்துவிட்டு வீடு திரும்பியபோது, முத்தையனும் இவளுக்காக காத்திருந்தார். வேலைக்கான ஆட்களை ஏற்பாடு செய்யச் சொன்னாள்.

"சின்னவரு அபிப்ராயம்..?"

"எம் பண்ணையிலே பிறர் அபிப்ராயம் அநாவசியம்" என்றாள் அழுந்த.

## 6

கடந்த சில நாட்களாய் வேலை பிழிந்தெடுத்து விட்டது. ஆனாலும் திருப்திகரமாக வேலைகள் நடந்து கொண்டிருந்தது. அவ்வப்போது பிரசன்னமான ராஜேந்தர் இவள் திட்டங்கள் எதிலும் குறுக்கிடவில்லை.

"என்ன தர்பூசணி விதைச்சிருக்காப் போலிருக்கே?" கேட்டதில் நிச்சயம் கிண்டலிருந்தது.

"ஆமா... வாழைப் போடறதா இருந்துதாம். வேண்டானுட்டேன்."

"எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம்."

"அவசியமில்லைன்னுதான் சொல்லலை. ஏற்கெனவே கிழக்கு பக்கம் முழுக்க வாழைத்தான் இருக்குது.."

"தப்பில்லையே. நல்ல ரக வாழை."

"முதலீடு ஜாஸ்தி."

"செலவு. ஒரு ஏக்கருக்கு பனிரெண்டாயிரம்."

"பலன் தர ஒரு வருஷமாகும். தர்ற பலனும் அறுபதாயிரத்துக்கு மேல எதிர்பார்க்க முடியாது."

ஆச்சரியமாய் பார்த்தான்.

"இடையே வைரஸ் ஏதும் வந்ததுன்னா அதுவும் கிடையாது."

முகம் சுளித்தான்.

"எனப்படி.. அதுக்குள்ள மருந்து. உரமெல்லாம் போட்டா ஏன் வியாதி வருது?"

"அது தனி செலவில்லையா..?" மிடுக்காய் கேட்டுவிட்டு நகர்ந்தாள்.

பெரியவரின் படம் முன்பு போய் நின்றவள் முகம் விநோதமாயிருந்தது.

"பொண்ணுங்க 'ஷோ' தனிதான். ரோஜா மாலை வீடு முழுக்க மணக்குது."

முதல் நாள் கிடைத்த செவந்தி மாலை போட்டவள், இன்று 'ஆர்டர்' தந்து ரோஜா மாலை தருவித்திருந்தாள்.

"இதிலென்ன 'ஷோ' இது நம்மூர் பழக்கந்தானே?"

"எது? உயிரோட இருக்கறவரை வந்து பார்க்காம. போனதுக்கப்புறம் மணமாய் மாலை போடறதா?"

இம்முறை துடுக்காய் கேட்டவன், நாய்கள் தொடர நடக்க. ரம்யா மலைத்து நின்றாள்.

மேலும் ஒரு வாரமானதும் பட்டணத்து வாழ்க்கை அவசரங்களில் ஊறிய ரம்யாவுக்கு.. இந்த அமைதி வாழ்க்கை மூச்சடைத்தது. பார்த்த சில முகங்களையேப் பார்த்து. நீர்ப்



பாய்ச்சல், உரமூட்டடை மருந்து. விதை என்று மாறி மாறி கேட்டு புளித்து போனது.

போனில் சித்தி குரலைக் கேட்டவளுக்கு தொண்டை அடைத்தது. ராஜேந்திரன் ஆளையேக் காணவில்லை. தன் சமவயதில் யாரையேனும் பார்த்து பேசமாட்டோமா என்ற தாபம் கிளர்ந்தது.

அது புரிந்தது போல ராஜேந்திரன் அன்று மாலை அவளுக்குத் தந்த அழைப்பை ஆவலாய் ஏற்றுக் கொண்டாள்.

ராதிகாவா? யாரது? சுற்றிலும் சிற்றூர்கள். ஆக எங்கேயிருந்து வருகிறாள் இந்தப் பெண்?

நவீனமான பெயர். இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாள்? தன்னைப் போலவே விதைத்து விட்டு. எப்போது துளிர்க்கும். பூக்கும் பிஞ்சு பிடித்துக் கனியும் என்று பயிரையேப் பார்த்துப் பொழுதைக் கழிப்பவளா?

ஒரு புதுமுகத்தைப் பார்ப்பது புத்துணர்ச்சி தரும்.

நல்ல மாதிரியான பெண் என்றால் ஒரு தோழி கிடைக்கும்.

இப்படியான அத்துவானத்தில் மனம் விட்டு என்றில்லா விட்டாலும் வாயாரப் பேசி மகிழவாவது ஒரு தோழி அவசியம் தான்.

தினம் தனியே உட்கார்ந்து சாப்பிடுவதில் உடம்பு சற்று மெலிந்து விட்டதான பிரமை. உண்பது ஒரு கடமையாய் போனது.

மரியாதை நிமித்தம் ராஜேந்திரன்.

"இன்னைக்கு ராதிகாவை டின்னருக்கு அழைச்சேன். நீயும் கலந்துக்கலாம்" என 'சட்'டென ஒத்துக் கொண்டாள்.

ராஜேந்திரன் சற்று ஆச்சரியத்துடன்தான் பார்த்தான்.

தொப்பி வைக்காமல் ரம்யா வெயிலில் அலையத் துணிவதில்லை. ஆக முகம் கறுக்காமல் தப்பியிருந்தது.

அன்று ஒரு ஸ்பூன் பாலோடு துளி எலுமிச்சஞ்சாறு கலந்து தேய்த்து அழுக்கு நீக்கியபின் குளித்தவள் முகம் பளிங்காய் பளபளத்தது.

மாலை உடுத்த வேண்டியதை எடுத்து வைத்தவள் மனம் வெவ்வேறு கணக்குகள் பின்னியது.

வர்ணம், அருள் தம்பதிகளுக்கு ராஜேந்திரன் மீது தேவதா விசுவாசம். ஆக எந்தத் தகவலும் அவர்கள் மூலம் அறிய முடியாது. வருபவள் இளையவள். 'கலகல'வென்ற பேச்சில் பல உண்மைகள் வெளிவரக்கூடும்.

இங்குள்ள விவசாய பழக்க வழக்கங்கள். கூலி அளவு. அருகே ஏதேனும் கடை கண்ணி உண்டா என்பதும் கூட தெரியவரும்.

உடம்பை இறுக்கிய வெல்வெட் சல்வாருக்குள் நுழைந்தாள். இங்கு இதையெல்லாம் எடுத்து வந்தது வீண் என்று மூன்று நாட்களுக்கு முன்பு கூட சலித்தது நினைப்பு வந்தது. அக்கரு நீல உடையில் தன்னைக் கண்ணாடியில் பார்த்தவளுக்கு சலிப்பு மாறி சந்தோஷமாய் இருந்தது. சற்று இறக்கமாய் வெட்டப்பட்ட பட்டு கழுத்தின் விளிம்பு முழுக்க பொடிக் கற்கள் வைரமாய் மின்னின. குட்டைக் கையாய் தைக்கப்பட்டிருந்ததால், நீண்ட கரங்கள் மொழுமொழுவென வாழைத் தண்டாய் தொங்கின.

மணிக்கட்டிலும் காதுகளிலும் கிரிஸ்டல்கள் போட்டவளுக்குத் தானே பிரமிப்பானாள். தான் இத்தனை அழகா?

மும்பையில் இப்படியா ஜொலித்தாள்.

பல நாட்கள் கழித்து அலங்கரித்துக் கொள்வதால் அழகு கூடினாற் போன்ற பிரமையா... அல்லது இங்குள்ள சுத்தமான காற்றிலும், நாளின் சில அணி நேரமேனும் நடந்து திரிவதிலும் உடல் மெருகேறியிருக்கிறதா?

கன்னங்களிலும் கண்களிலும் தனி பிரகாசம்.

உடம்பில் ஒரு வில் தன்மை!



கூந்தலை தளரப் பின்னி, சன்னமான ஒப்பனையுடன் கீழே இறங்கினாள்.

இவள் காலடி சத்தத்தில் நாய்கள் பரபரப்பு காட்ட அதுவரை பேசிக் கொண்டிருந்தவர்கள் இந்தச் சலனத்தால் வாசல்புறமாய் பார்த்த போது இவள் போய் நின்றாள்.

சில நொடிகள் ஒரு பிசுபிசுத்த அமைதி.

"ஹைய்யோ... யாரு... இதுதான் ரம்யாவா?"

ராஜேந்திரன் ஆமோதிப்பாய் தலையசைக்க புதிதாய் வந்தவள் மேலும் உற்சாகமானாள்.

"உங்களுக்கு வர்ணிக்கத் தெரியலை ராஜ்... இப்படியொரு பேரழகிங்கறதைச் சொல்லியிருக்க வேணாம்? இப்பப் பாருங்க எதிர்பாராத இன்ப அதிர்ச்சியில் எனக்கு மயக்கம் வரும் போல இருக்குது!"

"ஹலோ..." புன்னகையுடன் வந்து அமர்ந்தாள் ரம்யா.

இவளுக்கு ஒரு குவளையில் எலுமிச்சம் பழரசத்தை ஊற்றி நீட்டிய ராஜேந்திரன்.

"அழகுங்கறது அவங்கவங்க பார்வையைப் பொருத்தது ராதிகா." என்றான்.

"யார் இல்லைன்னா... ஆனா இவங்க.. யப்பா... எல்லார் பார்வைக்கும் திருப்தி தர்ற அழகு! தவிர நேர்த்தியா உடுத்தியிருக்கீங்க..." பெண்களுக்கே உரிய ஆவலுடன் ரம்யாவின் உடையை உற்றுப் பார்த்தாள் மற்றவள்.

உடம்பை இறுக்கிய உடையும், அதன் இறக்கிய கழுத்தும் இப்போது ரம்யாவிற்கு அவஸ்தையாய் தோன்றின.

"பட்டணத்துப் பெண்கள் படிக்கிற அரிச்சுவடியே அதுதான். எப்படி உடுத்தணும். அதிலே எத்தனை தினுசா உடம்பைக் காட்டணும்னு..." அவன் கடுக்க.

'சுருக்' கென்றது.

"இங்க நான் பார்க்கிற பொண்ணுங்க கூட 'ஹிப்ஸ்டர்'தான்_ அதாவது_?

"தெரியும் தெரியும் இடுப்பில நிக்காம சேலை கட்டறது."

"ரைட் தவிர, ராஜ் இப்ப கிராமத்திலேயும் எத்தனை ப்யூட்டி பார்லர்கள்? சமீபமாய் ஒரு கட்டுரை வாசிச்சேன். தேனீங்கற ஊர் விஸ்தீரணம் ரெண்டே கிலோ மீட்டர். அங்கு இருபது ப்யூட்டி பார்லருங்களாம்." ரம்யாவுக்கு அங்கெல்லாம் போகத்தேவையே இல்லாத அழகு_ நிறம், முடி, பட்டுச் சருமம். எல்லாத்தையும் விட இப்போ கை நிறைய காசும் சொத்தும்! பணம் தர்ற மெருகே தனி.

"அகத்தின் அழகு முகத்திலே'ங்கறது கேள்விப் பட்டிருக்கேன். உண்மைன்னும் நம்பறேன். இதென்ன புது_ பண மொழி? பணம் கிடைச்சாலும் அதை நிர்வாகம் பண்ண புத்தி வேணும்! அதுதான் முக்கியமான மூலதனம்! முதல்ல அங்கே கனவுகளும் திட்டங்களும் தோணணும். அப்புறம் அதை நனவாக்கற உழைப்பு_ அப்பத்தான் காசு நிற்கும்."

"இத்தனை அழகை வச்ச கடவுள் கூடவே கொஞ்சமேனும் மூளையும் வச்சிருப்பார்.. கவலைப்படாதீங்க."

புது சிநேகிதிக்காக பரிந்தாள் ராதிகா.

"கொஞ்ச மூளை அதிக ஆபத்து!" சிரித்தபடி எழுந்தான். "சாப்பிடலாமா?"

ரம்யாவிற்கு எரிந்தது.

காய்ந்து கிடந்தாலும் புலியாய் இருந்திருக்க வேண்டும். இப்படிப் புல்லைப் பார்த்ததும் ஓடி வந்திருக்கக் கூடாது. இப்படி தன் வீட்டிலேயே தனக்கு விருந்தோபசாரம். அதோடு இவளது அழகு, புத்தி பற்றிய அலசல் வேறு_!

ஆனால் பரிமாறப்பட்ட தினுசுகளில் வாயடைத்துப் போனாள்.

"வர்ணம் உங்களுக்கு இத்தனை விதமாய் சமைக்கத் தெரியுமா? அதுவும் சைனீஸ் ஃப்ரைட் ரைஸ் பிரமாதம்!"



"அய்யோ... அதெல்லாம் ஐயாவே செஞ்சதும்மா. அவருக்கு வெட்ட விரலு வணங்காது. அரைச்சு, அரிஞ்சு தந்துட்டா நிமிஷமாய் சமைச்சு இறக்கிடுவாக."

ஆச்சரியமாய் ராஜேந்திரனைப் பார்த்தாள்.

காலையிலேயிருந்து தோட்டத்தில் அலைந்தவளுக்கு வீட்டில் நடந்த சமையல் விசேஷம் தெரியவில்லை. ஆனா இவனும் மறுபக்க தோட்டத்தில் வேலையாய் இருந்ததாகத் தெரிந்ததே. பிறகெப்போது நடந்தது இந்த நளபாகம்?

"இனி நீங்க தோட்ட வேலை எதுவும் கவனிக்க வேண்டாம். நா நான் உங்களுக்குச் சம்பளம் தருவதாயில்லை" என்று முடிந்த வரை நாசுக்காய் அவனை விலக்கப் பார்த்தும் நடக்கவில்லை.

"இதுவரை செய்த வேலையை முழுசா முடிச்சிட்டா திருப்தியாயிருக்கும். தவிர சம்பளம் கேட்டு நான் அடாவடி பண்ரதாயில்லை. தவிர எனக்குச் சம்பளம் தர்றதும் கஷ்டம் 'ரேட்' கட்டி வராது" என்றபடி நழுவி விட்டான்.

பேசி முடிந்ததும் ஒரு சிரிப்பு சிரிப்பான்.

அப்போது பட்டுச் சுழியாய் கன்னத்தில் குழி விழும்.

இவள் சிரமத்துடன் அதைப் பார்ப்பதைத் தவிர்ப்பாள்!

இங்கு எல்லாமே ராஜேந்திரன்தான். தென்னை ஏற வந்தவன் தேங்காய் கணக்குடன் 'சின்னவரை'ப் பார்க்கவே காத்திருந்தான்.

'பம்ப்' செட் ரிப்பேர் என்ற தகவலும் அவனிடமே போனது.

வேலி உடைந்ததிலிருந்து மாடு ஈன்றதுவரை அத்தனையும் அவன் காதை எட்டவே காத்திருந்தன. ரம்யா வலிய போய் கேட்டுக் கொண்டாள்.

அவனை ஓரளவு 'போ போய்விடேன்' என்பதுமாய் மிரட்ட முடிந்ததே தவிர, மற்றவர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் செய்ய முடியவில்லை.

அதற்கும் இத்தனை காலமாய் அத்தனையையும் பொறுப்பாய் செய்தவன் என்பது மட்டுமல்லாமல் அவன் கம்பீரமும் ஒரு காரணமோ?

சாப்பாடு மேசையின் மைய நாற்காலியில் அரச தோரணையுடன் அமர்ந்திருந்தவனை மகா எரிச்சலுடன் பார்த்திருந்தாள்.

## 7

ராதிகாவிற்கு நாய்கள் 'அலர்ஜி'யாயிருந்தன.

"எம்மேல காலைப் போட வேண்டாம்னு சொல்லுங்க ராஜ். பிராண்டினா டிரஸ் பாழாயிடும்" என அவற்றை வெளியே நிறுத்தி வைத்தாள்.

அதற்குள் அருள் அவற்றுக்கும் உணவு வைத்து அழைக்க உற்சாகமாய் சாப்பிட ஓடின.

தினம் வீட்டிற்கு ஒரு கிலோ மாட்டிறைச்சி வந்துவிடும். பருப்பும், அரிசியும், கிடைத்த காய்கறிகளுமாய் கலந்த கறிசோறு தயாராகிவிடும். பாதியை மதியமும் மீதியை மாலையிலுமாய் வைப்பார்கள். காலை தோறும் முட்டைப் பால். வாரம் தவறாம குளியல். தினம் 'பிரஷ்' செய்யப்படும் ரோமம் பட்டாய் மின்னும்.

நாய்களுடன் ராஜேந்திரனும் வெளியேற, பெண்களுக்குத் தனியே பேச வசதியாய்ப் போனது. ராதிகாவிற்கும் வேறு தோழிகள் இங்கில்லைப் போலும். வாய் வலிக்குமளவு பேசித் தீர்த்தாள்.

"இத்தனை ஸ்மார்ட்டாயிருக்கற நீங்க எப்படி கிராமத்துல காலம் கழிக்கப் போறீங்க .. ரம்யா?"



"முதல்ல வீட்டை சீர் செய்யணும்."

"சிங்காரிக்க வேணா செய்யலாம். ஏன்னா மராமத்து பண்ணி நல்லா பராமரிக்கப்பட்ட வீடுதான் இது."

"ம்ம்.. ஆனா ஏதேனும் வாங்கணும்னா ஊர் விட்டு ஊர் போகணும் போலிருக்குது."

"எங்க போகணும் சொல்லுங்க நாம சேர்ந்தே கூட போலாம்.."

"ஓ..க்ரேட்.. நீங்க எப்ப ஃப்ரீ?" ஆவலாய் கேட்டாள் ரம்யா.

"உங்களுக்காய் எப்பவும் ஃப்ரீதான். ஒரு வாரமாய் ராஜைத் துளைச்சு கெஞ்சி, இன்னைக்குத்தான் போனால் போகட்டுங்கறது போல 'வா'ன்னார். உங்களைப் பார்க்கற ஆசைதான் எனக்கு வேறென்ன?"

"என்னையா?"

'பண்ணையாளுங்க.. புது முதலாளியம்மா சிம்ரன் போல இருக்காங்க'ன்ன எனக்கும் பார்க்க ஆசை! ராஜைக் கெஞ்சினால் -

"ம்ம் ரம்யா பார்க்க பரவாயில்லைதான். அதுக்காக உன்னை அழைச்சு சமைச்சு, பரிமாறி, ஒரு ஈவ்னிங்கை வீணாக்கணுமா?' ன்னு ஒரே பிகு பண்ணிகிட்டார்."

"அப்போ எனக்காகவா வந்தீங்க..?"

"பின்னே? அதான் நாருக்காய் ராஜ் ஓடியாச்சு!"

ராஜேந்திரனைத் தேடி ஏதோ பெண்கள் படையே வரும் என நினைத்திருக்க, வந்த ஒருத்தியும் கூட தனக்காக அல்லவா வந்ததாய் சொல்லுகிறாள்?

ராதிகாவிற்கு விடைதர வாசல் வரை போனவளுக்கு மற்றொரு ஆச்சரியம் இருந்தது.

"ராதிகா... உங்களுதா... இந்த ஸ்கூட்டி?"

"ம்ம்.. இதில்லாம இங்கே ஒன்னும் ஓடாது. கார் வைக்கிற அளவு எனக்கு வசதியில்லை."

"நானும் ஒரு ஸ்கூட்டி இருந்தால் ரொம்ப வசதின்னு நினைச்சிட்டிருந்தேன்.. எங்க.. எப்படி வாங்கனீங்க?"

"அப்ப நீங்க உடனடியா பாஸ்கரைச் சந்திக்கனும்."

"அது யாரு?"

"தெரிஞ்சவர். நண்பர். கார், பைக், எதுனாலும் வாங்கி விற்கும் கில்லாடி. இப்பமே கூட அவர்ட்ட ஒரு செகன்ட் ஹான்ட் ஸ்கூட்டி இருக்கறதாய்.. அச்சச்சோ.. நீங்க பழசெல்லாம் வாங்கமாட்டீங்க.. ஸாரி."

நுனி நாக்கை பதமாய் கடித்தாள்.

"புது லான்ட்ரோ, யூனோ, இப்படி ஏதும் 'புக்' செய்ய சொல்லவா?"

"வேணாம் ராதிகா. சொத்து என்னுதுன்னாலும் ஊதித் தள்ற மாதிரி பணம் ஏதுமில்லை. இப்ப செலவழிக்கிறது என் சொந்தப் பணம். இப்ப விடுமுறை சமயங்கறதால வந்தேன். நிலத்தில் சில மாற்றமெல்லாம் செய்து விதைச்சிருக்கேன். விளையற வரை இங்க இருக்கனும்னு ஆசை.. குறைஞ்சது மூனு மாசம். அதுவரை போய்வர ஒரு வண்டி எதுவாயிருந்தாலும் சரி."

"அப்போ, நாளைக்கே எவ்வீட்டுக்கு லஞ்சுக்கு வாங்க. பாஸ்கரை அறிமுகப்படுத்தறேன்."

"நாளைக்கு வேலி ரிப்பேர் பண்ண ஆள் வராங்க. வர்ற புதன் வரேனே?"

"பரவாயில்லையே. முழுக்க பண்ணை வேலையில மும்முரமாயிட்டீங்க. புதன் கிழமை நானே வந்து அழைச்சிட்டுப் போறேன்."

"இருபது நிமிஷ நடைதானேங்க?"

"சும்மா நீ. வான்னே பேசுங்க."



"அப்ப.. நீங்.. நீயும் அப்படியே பேசலாமே.."

சிரித்தனர். நெருங்கிக் கொண்டதான பூரிப்பு.

"நடந்தே வந்துடறேன். பண்ணையைத் தாண்டிப் போன தில்லை. வெளியே எங்கேப் போறதுன்னும் தெரியலை. இப்ப ஒரு இலகு கிடைச்சிருக்கே. வந்துடறேன்."

வழியனுப்ப ராஜேந்திரனும் வந்து நின்றும் இரு பெண்களும் ஓயாமல் பேசித் தீர்த்தார்கள்.

ராதிகா போன பின், மீதி இருந்த உணவு வகைகளைச் சிறு கிண்ணங்களில் இட்டு ஃப்ரிட்ஜில் வைத்தவளை மீண்டும் ஆச்சரியமாய் பார்த்தான்.

'பரவாயில்லை. பெரியப்பாவின் காசை வாரி இறைத்தாலும், ஒரேயடியாய் வீணாக்காத கரிசனையும் உண்டு போலும்' என்ற நினைப்புடன்!

"நாளைக்கு வேலி ரிப்பேர் செய்ய ஆட்கள் வராங்க."

"தெரியும். அருள் எங்கிட்டேயும் சொன்னார். ஆனா அதிலே அதிகக் காசை இப்ப செலவிடறது தப்பு."

"ஏன் சும்மா ஊரார் எல்லோரும் பிக்னிக் போல பண்ணைக்குள்ளே வந்து போகட்டுமேங்கற தாராளமா?" எள்ளலாய் கேட்டாள்.

அதை அலட்சியம் செய்தவன்.

"சாதாரண வேலி போடறுதும் போடாததும் ஒன்னுதான். அதாவது கொஞ்ச சாமர்த்தியமான திருடனுக்கு."

"அதனால?"

"மின்சார வேலி போடலாம்னு யோசிச்சிருக்கேன்."

'அட' என்பதாய் இவளைத் தீர்க்கமாய் பார்த்தான்.

"பவர் ஃபென்ஸ்' போட முதலீடு கொஞ்ச ஜாஸ்திதான்.."

"அப்புறம் மின்சார செலவும் சேர்ந்து இழுக்கும்."

"அங்கதான் தப்பு பண்றீங்க. அவ்வது விவரம் தெரியாம பேசறீங்க. 'ஸோலர் பவர்' தான் சூரிய சக்தியைத் தான் பயன் படுத்திக்கணும். 250 லிருந்து 400 வாட்ஸ் வரை கிடைச்சா போதும். நூறு ஏக்கருக்கு ஒன்னரை லட்சத்துக்குள்ளே முதலீட்டுச் செலவு நமக்கு அதிலே பாதி வரலாம்."

பேசுபவளை புது மதிப்புடன் பார்த்திருந்தாள். ஆனாலும்,

"செலவு வைக்கறது பெண்களுக்கு பிரியமான கலையாச்சே" என்று கிண்டலடிக்க மறக்கவில்லை.

## 8

"ஹலோ ஐயம் பாஸ்கர்" ஆர்ப்பாட்டமாய் கை நீட்டிய இளைஞன் மாநிறமாய் உயரமாய் இருந்தான். கன்னங்கள் வற்றியிருந்தாலும் 'பளிச்' சென்ற முகம்தான். சீக்கிரமாய் பேசிப் பழகும் குணம்.

ராதிகாவும் பாஸ்கரும் மாறி மாறித் தன்னை தலையில் தூக்கி வைத்துப் பேசியதுதான் ரம்யாவிற்குச் சங்கடமாய் இருந்ததே தவிர, இருவரின் கலகலப்பான பேச்சை ரசித்தாள்.

ராஜேந்திரனை சந்திப்பதை முடிந்த வரை தவிர்த்து விடுவாள். மீறி பார்க்க நேர்ந்தால் ஒருவருக்கொருவர் குத்தலும் கிண்டலுமான பேச்சுதான். அவனுக்குத் தன் மீது ஏதோ வெறுப்பு இருப்பது புரிந்தது.

தான் இதுவரை அனுபவித்தவற்றை ஆள மற்றொருத்தி வந்துவிட்டாளே என்ற பொறாமையால் இருக்கும்.

இவள் 'எப்போது கிளம்புகிறாய் பையா?' என்று ஜாடையாய் கேட்க, அவன் 'இப்பேர்ப்பட்ட பேரழகிக்கு



காவலாய் கிடப்பது என் பாக்கியம்' என்பது போல ஏதேனும் பதிலடித்து விட்டுப் போவான்.

பொறுமியபடி இவளும் நகருவாள்.

இங்கோ, பட்டணத்து வாழ்க்கைப் பற்றியும், கல்லூரி, தோழிகள், பொழுது போக்குகள் என்று பேச்சு சர்க்கரையாய் நகர்ந்தது.

சாப்பிட்டு முடித்த போது மணி மூன்றைத் தாண்டியிருந்தது.

"வாசல்ல ஒரு ஸ்கூட்டி உனக்காக நான் கொண்டாந்தது நிக்குது பாக்கறீங்களா ரம்யா?"

பாஸ்கர் கேட்க ஆர்வமாய் போனாள்.

வேப்ப மரத்தடியில் ஒயிலாய் சாய்ந்து நின்றது ஒரு பிஸ்தா பச்சை டூ வீலர்.

"அடே... லவ்லி. புதுசாய் பெயின்ட் செய்திருக்கீங்க போல..?"

"நீங்க விசாரிச்ச நிமிசமே ராதிகா எனக்கு போன் செய்ய, நான் இதைத் தயார் செய்ய ஆரம்பிச்சுட்டேன்."

"ஓட்டக் கத்துத் தரணுமா ரம்யா?"

"இல்லை ராதிகா. லைசென்ஸ் கூடயிருக்குது. சித்தி மும்பையில ஓட்ட விட்டதில்லை."

"இங்கே நீதாம்மா உனக்கு ராணி."

"அதில்லை. ட்ராஃபிக் பயமுமில்லை. அதனால ஓட்டலாம்."

"ம்ம்.."

"மதுரையில ட்ராஃபிக் கடுமையா இருக்குமாமே? முத்தையன் சொன்னார்?"

"பயங்கரம். சின்னத் தெருங்க... அது கொள்ளாத ஜனக்கூட்டம். அப்படியே மதுரைக்குப் போன ஸ்கூட்டியை

பெட்ரோல் பங்கிலே விட்டுட்டு ஆட்டோ எடுத்துக்கறது புத்திசாலித்தனம்."

"உனக்கு அங்கே என்னென்ன வாங்கணும் ரம்யா?"

"தரைக்கு 'ரெட்டாக்ஸைட்'. அப்படியே நல்லதா வீட்டுக்குள்ளே வைக்கறது மாதிரி பூந்தொட்டிங்க.. இப்ப சற்று 'வெறிச்'சினு இருக்குது வீடு.."

"அப்ப ஃபர்னிச்சர் தேவைப்படுமே. என் சேட்டு ஃப்ரெண்ட் ஒருத்தன் ஃபர்னிச்சர் கடை வச்சிருக்கான். எக்கச்சக்க மாடல்ஸ். அதில ஒரு ஃஸோபா செட் வாங்கிப் போட்டா உங்க ஹால் தூக்கிடும்!"

"பெரிய சாமானெல்லாம் இப்ப வாங்கறதாயில்லை. சில பத்திக் பெயின்டிங்க்ஸ் வேணா வாங்கலாம்.."

"இன்னொரு ஃப்ரெண்ட் கான்வஸ், கிளாஸ் பெயின்டிங்க்ஸ் செய்தே விக்கிறாங்க. குறைஞ்சது நாலாயிரம். ஆனா தொங்கவிட்டா வீட்டு 'லுக்கு' மேலேறிடும்."

"ஐயோ அவ்வளவெல்லாம் இப்ப அலங்காரத்துக்காக செலவழிக்க முடியாது."

"பணம் இருக்கறதே செலவழிக்கத்தானே? அதைச் செலவு செய்தா சந்தோஷம் வரவாகும். அதுதான் அடிப்படை."

"பாஸ்கரனுக்குச் சதா காசு பேச்சுதான். இப்ப உன் ஸ்கூட்டிக்கு விலை சொல்லுப்பா."

"முதல்ல ஓட்டிப் பார் ரம்யா."

"என்ஜின் விபரமெல்லாம் எனக்குத் தெரியாது. விபரம் தெரிஞ்சவங்க கிட்ட கேட்டுட்டு.."

"எனக்குத் தெரியாத விவரமா? டாப் கண்டிஷன்ம்மா! அத்தனையும் மாத்தி புதுசு தோக்கறாப்பல தேத்தியிருக்கேன்.."

"எந்த வருஷத்து மாடல் இது?"

நெற்றியைத் தேய்த்தான்.



"சமீப மாடல்தான். விலை எட்டாயிரம் தந்தாப் போதும்."

"'திக்' கென்றது. விலை அதிகமில்லையா?"

புதுசே பத்து, பனிரெண்டாயிரம் என்பதாய் நினைவு. ஆனால் இது வீடு தேடிப் படியும் வியாபாரம். அலைச்சல் இல்லை. இங்கு சுற்றிவர இது போதும். பேரம் பேசிய பழக்கம் இல்லாததில் கூச்சமாய் இருந்தது.

ஏறி இரண்டு சுற்று சுற்றியவள் 'செக்' எழுதி கையெழுத்திட்டாள். இனி சித்திக்கு போன் செய்யும் போதோ, அல்லது பண்ணை ஆபீஸிற்குப் போக நேர்ந்தாலோ,

'அருளு ஏதேனும் டாக்ஸி வருமா? எனக்கு இன்னின்ன நேரத்துக்கு வேணுமே' எனும் தொல்லை இல்லை.

கவனமாய் ஓட்டிக் கொண்டு கிளம்பினாள். கார் காராஜ்ஜைத் திறக்கப் பண்ணி அதனுள் நிறுத்தினாள். உள்ளே நின்ற சாப்ல் வெளிர் நிற எஸ்டீம்மின் அருகே ஸ்கூட்டி பரிதாபமாய் தெரிய அவள் உற்சாகத்தின் மாற்று குறைந்தது.

தற்போது பாஸ்கர் சொன்னது போல பல ஆயிரங்களை ஊத முடியாது. சின்ன மாற்றங்களில் நல்ல நேர்த்தியைக் கொண்டுவர முடியும். முதலில் ராஜேந்திரனை வெளியேற்றினாலே.. வீடு தனி களையாகி விடும்!

ஆனால் இப்போதே வறுத்தெடுக்கும் தனிமையில் அவனும் இல்லை என்றால் கொடுமையாகி விடாதா?

அது ஒரு மாதிரி அசௌகர்யமான சௌகர்யமாயிருக்கும்!

எங்கே வாசித்து ரசித்த வரிகள் தன் வாழ்விற்கும் பொருந்துகிறாற் போலிருந்தது.

'நட்பற்ற தனி வாழ்க்கை போக்குவரத்தில்லாத விசால வீதியில் நடப்பது போல சௌகர்யம்தான். ஆனால் விழுந்தால் தூக்கிவிட யாருமில்லை.'

உண்மைதான். நடக்கும் போது தோன்றுவதைப் பேசித் தீர்க்கத் துணையில்லை. பார்த்து சிரிக்க மூஞ்சுகளில்லை என்றால் அது என்ன சௌகர்யம்?

ஆனால் ராஜேந்திரனைப் பார்த்து சிரித்தால் வேறு வினையே வேண்டாம்! 'போ' என்றும் பின்பும் வயதுப் பெண்ணிருக்கும் வீட்டில் இப்படி இருப்பவன் சற்று சகஜமாய் பழகினால் என்னதான் செய்யமாட்டான்?

இன்று பாஸ்கர் பேச்சுக்குப் பேச்சு 'பணம் பணம்' என்றானே? எல்லா ஆண்களுக்கும் பணம்தான் பிரதானமோ?

அப்படியெனில் ராஜேந்திரனும் காசு எதிர்பார்க்கிறானோ?

உயில் மூலம் தனக்கு ஏதும் வரவில்லை என்பதால், இவளிடமிருந்து ஏதும் பெரும் தொகை கறக்கலாம் என்ற நப்பாசையில் இப்படி உறி சுற்றும் பூனையாய் கிடக்கிறானோ...?

ஏனோ இந்த எண்ணம் ரொம்ப கசந்தது.

## 9

மறுநாள் தோசையைப் பிய்த்தவள் கேட்டாள்.

"வர்ணம் உங்க சின்னய்யா எங்கே?"

"காலையிலேயே தோட்டத்திற்குப் போயாச்சேம்மா."

பதில் சொன்னவள் முகத்தில் ஒரு பிரத்தியேக சிரிப்பு. அது ரம்யா அக்கறையாய் சின்னவரைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டாள் என்ற குதூகலம் போல.

"அவர் சாப்பிட்டாச்சா?"

"கஞ்சிதாம்மா... வழக்கம் போல."

"ஏன்... ஏன் அப்படி?"



"வெள்ளைக்கார கஞ்சிம்மா. ஓட்ஸ்லாமே? அதைக் காய்ச்சி குடிச்சிட்டா அவ்வளவுதான்."

"ஓஹோ..."

"நீங்க சாப்பிட்டதும் இவரு உங்ககிட்ட ஏதோ சொல்லணுமின்னாரு."

"யாரு அருள் எங்கிட்ட என்ன சொல்லணுமாம்?"

அருள் வந்து இழுத்து இழுத்து சொன்ன விஷயம், 'வேலியைப் பழுது பார்க்க ஆட்கள் வந்தாயிற்று' என்பதுதான்.

இவளுக்கு 'முணுக்'கென்று கோபம் முட்டியது.

இவர் விவரமெல்லாம் பேசி முடிக்கும் முன் அவர்கள் வேலையை ஆரம்பிப்பானேன்?

ஓலைத் தொப்பியைத் தலைக்கு வைத்தவள் விடுவிடு வென்று நடந்தாள். வேலை நடந்த இடம் போய் சேரவே பத்து நிமிடங்கள் ஆனது.

"எங்கிட்ட சொல்லாம ஏன் வேலையை ஆரம்பிச்சீங்க?"

ராஜேந்திரனிடம் ஆங்கிலத்தில் சிடுசிடுத்தாள்.

"நன்றி. பிறருக்கு நம்ப சண்டை தெரிய வேண்டாம்னு வேற்று மொழியிலே பேசினதுக்கு. ஆனா வெறுமே உடைஞ்ச வேலியைத்தான் பழுது பார்க்கறோம். முன்னே நினைச்சது போல மொத்த வேலியையும் மாத்தலை. உன்னிஷ்டம் போல மின் வேலி போட்டுக்கலாம். எப்ப வசதியோ அப்ப."

அவன் ஆங்கிலத்தின் தோரணையில் அசந்து போனாள்.

இது மதுரைப் பக்கத்து ஆங்கிலம் அல்ல. பெயர் பெற்ற பள்ளிகளில் படித்தவர்களுக்கே வரும் தொனி, தோரணை... இவன் எங்கே படித்திருப்பான்?

நிழலில் ஒதுங்கி, மேற்பார்வை இடுவது போல நின்றாள்.

இவன் தமிழ் அறியாதவள் போல என்ற நினைப்பில், வேலைக்கு வந்திருந்த இரு விடலைகள் அடிக்குரலில் பேசிக் கொண்டனர்.

"என்னா கலரு... ஸ்டைலு... பேச்சும் இங்கிலீசுதான்... என்னடா சொல்லியிருப்பாக?"

"யாரு சின்னவருட்டியா? ரொம்ப அழகாயிருக்கீங்கன்னு தான்."

இவளுக்குப் 'பக்' கென்றது!

"எப்படிரா தெரியும் உனக்கு?"

"சின்னவரு டாங்க்ஸுங்கல? அப்படியாத்தானிருக்கும். அவரும் ஹீரோ கணக்காத்தான இருக்காரு..."

ரம்யாவிற்கு சிரிப்பும் பொங்கியது.

வழிந்து விடாமலிருக்க விறைப்பாய் நின்றாள்.

ஆக ராஜேந்திரன் ஹீரோவா? ஓரப்பார்வையால் அளந்தாள்.

இவளது ஐந்தடி ஐந்தங்குல உயரமே நிமிர்ந்து நோக்கும் படியான உயரம் அவனுக்கு. வெளி வேலையில் பழகி உரமேறிய உடம்பு முக்கியமாய் அந்தத் தோள்கள் எத்தனை அகலம். திண்மை! முகம் கூட லட்சணந்தான். தங்கக் குடத்திற்கு சலங்கைக் கட்டினது போல அக்கன்னத்தின் பட்டுக்குழி! தன்னிடம் பேசும்போது சற்று போக்கிரித்தனம் தெரிகிறதே தவிர, பிறரிடம் அதுவும் தொழிலாளிகளிடம் பேசும்போது முகத்தில் அகலமாய் ஒரு சிரிப்பு. நல்ல நட்பான சிரிப்பு.

"என்ன வேலி வேலையைக் கண்காணிக்காம எம்மேல கண் வைக்கிறாப்பல இருக்குது?"

"ஓஹோ... அப்படி வேற நினைப்பா?" சமாளித்தாள்.

பார்த்ததைச் சொன்னேன். சரி ஸ்கூட்டிக்கு எவ்வளவு தந்தே?"

சொல்லப் பிடிக்கவில்லை என்றாலும் சொன்னாள்.

நம்பாதது போலப் பார்த்தான்.

"அந்த மாடல் பாதிக்குள்ளேதான் போகும்... கூட சில ஆயிரங்கள் பணம் உனக்கு பொருட்டாய் இருந்திருக்காது."



"சரிதான். நிறைய இருக்கும் போது எதுக்குப் பொருட் படுத்தனும்?"

வரவழைத்துக் கொண்ட திமிருடன் சொன்னாள்.

"தவிர எனக்குப் பணமிருக்கறதை சதா எனக்கு நினைப்பூட்டிட்டே இருக்காங்க..."

"யாரு... பாஸ்கரும் ராதிகாவுமா? எங்கிட்ட டீலர் பத்தி ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம்."

"உங்க சிநேகிதிகிட்ட சொன்னேன். உடனே உதவிட்டாங்க."

"இருந்த ஒட்டை ஸ்கூட்டரை இரட்டை விலைக்கு உத்தலையிலே கட்டினது உதவியா?"

"வாங்கி, விக்கறது பாஸ்கரோட தொழில். அதுல அவர் லாபம் பார்க்கனுமே..."

"அது அநியாய லாபமாயிருக்கக்கூடாதுங்கறதுல நாமும் கவனமாயிருக்கனும்."

"மத்தியான லஞ்ச் அவங்களோட சாப்பிட்டது ஒரு மாற்றமாயிருந்துச்சு தவிர அலைஞ்சு திரியாம வாங்கின ஸ்கூட்டில வீடு வந்து சேர்ந்துட்டேன்ல?"

"அங்கேயே 'செக்'கில கையெழுத்து போட்டாச்சா?"

"ம்ம்..."

"சம்பாதிச்ச பணம் போடாம, கையெழுத்து மட்டும் போடத் தெரிஞ்சா, காசுக்கு இந்த கதிதான்!"

தான் ஏமாந்து விட்டோமோ என்ற நெருடலில் வழக்கம் போல எதிர்த்து வாயாட முடியவில்லை அவளால்.

"இனி அவங்களோட அதிகம் பழக வேணாம்."

அந்த உத்தரவுத் தொனிதான் இவளுக்கு ஆகாதே.

ஆக அலட்சியமாய்.

"ஓஹோ... அதான் அவங்களை எனக்கு அறிமுகப் படுத்தினீங்களா? உங்களுக்கு வேண்டிய பொண்ணுன்னுதான் நம்பிப் பழகினேன்..."

"ஆக எம்மேல நம்பிக்கை இருக்குது. அப்படித்தானே?" பதில் சொல்ல இவள் திணறுவதை ஒரு கணம் ரசித்தான்.

வீடு வந்தவளிடம் முத்தையன் ஒரு கட்டு பணத்தை நீட்டினார்.

"என்னதிது?"

"தேங்காய் இறக்கினோமில்ல. நேத்தே வந்துச்சு. சின்னவரு உங்ககிட்ட தரச் சொன்னாரு..."

"அவர்தானே. கணக்கு பாக்கறது?"

பார்த்துட்டாருங்க. பணத்தை மட்டும் உங்ககிட்ட தரச் சொன்னாரு."

இயல்பாய் வாங்குவது போல கை நீட்டினாலும் விரல்கள் சன்னமாய் அதிர்ந்தது.. உள்ளே உதறியது.

இந்தப் பணத்திற்காக அவள் உழைக்கவில்லை. மெனக் கெடவில்லை. ஆக உரிமையாய் வாங்கக் கூசியது.

ஆனால் தன் அறையில் பத்திரப்படுத்தி விட்டு வந்தாள்.

இது போல அடிக்கடி பணம் வருமோ?

திடீரென்று இவளிடம் ஏன் இன்று தரப்பட்டது?

இவள் வாயை அடைப்பதற்கா?

'பரவாயில்லை. நீயும் பகிர்ந்துக்கோ' என்ற அனுமதியா?

இவள் அறைக்குப் பக்கத்து அறை பூட்டியேக் கிடக்க, முன் தினம் தான் திறக்கச் செய்தாள். பல வருடத்து பழைய செய்தித்தாள்கள் மலையாய் குவிக்கப்பட்டிருந்தன. அதை எடுத்துப் போக ஒரு வண்டியை ஏற்பாடு செய்தவள் அறையை தூசு தட்டி சீராக்கினாள்.



மறுபடி குளித்து கீழே வந்தபோது ராஜேந்திரன் ஹாலில் இருந்தான்.

ஆக பிடித்துக் கொண்டான்.

"வீட்டுக்குப் போன் அவசியம். அதுக்கும் பாஸ்கரைத்தான் கேட்கிறதாய் இருக்கேன்."

இது இவளைச் சீண்ட என்றே செய்த யுக்தி.

"ரம்யா. மறுபடி சொல்றேன். நான் அவங்களோட பழகறது வேற. உலகம் தெரியாத நீ ரொம்ப இழையறது வேற..."

"அடடே கரிச்சட்டி அடுப்பு சுடுதுன்னாப்பல... நீங்க அவங்களைச் சரியில்லைங்கறதா? தன் தொழில்ல லாபம் பார்க்கறார் பாஸ்கர். ஆனா எந்த உரிமையும் இல்லாம நீங்க இங்கேயேத் தங்கறது.. கொஞ்சமேனும் முறையா என்ன?"

"முறைக்கேடாய் நான் நடந்துக்கலைங்கறது உனக்குத் தெரியும். பண்ணை ஆட்களுக்கும் தெரியும். மாட்டுக் கொட்டில்ல வேற ஒருத்தரை காவலுக்கு இருக்கச் சொல்லி விட்டு வர்ணம். அருளை இத்தனை நாளாய் வீட்டிலேயேத் தான் ராத்திரி தங்க வச்சேன்..."

அவன் பார்வை அவளை மேலும் கீழுமாய் அளந்தது.

"முறை கேடுங்கறது நீங்க சொல்ற அர்த்தத்திலே சரி. அதுக்கு நானும் இடம் தரமாட்டேன்னு உங்களுக்கு நிச்சயமாத் தெரியும். ஆனா இப்படி உரிமையில்லாத வீட்டில குத்துக்கல்லு மாதிரி அசையாம இருக்கறது சரியா? எனக்குரிய பணத்தை இப்படி வாரியிறைக்கறது சரியா?"

அவளை உன்னிப்பாய் பார்த்தான்.

"நாய்க்குப் போடற சாப்பாட்டிலேருந்து, ராதிகாவுக்குப் பரிமாறின விருந்து வரை செலவானது பெரியப்பாவின் அதாவது என் பணம்தானே?" கேட்டாள்.

அவன் அதிரவில்லை. மறுபடி வாய்க்குள் சிரிப்பு.

"உனக்கு நாய்களைப் பிடிக்கும்னு நினைச்சேன்… விருந்தும் உனக்கும் சேர்த்துதான். வாய் ஓயாமப் பேசினதும் நீதான்…"

"அது… அது ஒரு மரியாதைக்காக. இனி இங்க வர்ற விருந்தாளிங்க நான் அழைச்சு வரணுமேத் தவிர… உங்க அழைப்பிலே வரவேணாம்.

"நல்லது… ஆனா அதுக்காக பெரும்படையை விருந்துக்கு அழைச்சிட வேணாம். வர்ணத்துக்கு நிறைய பேருக்குச் சமைக்கத் தெரியாது. ஆங்… அதென்ன பெரியப்பா… இப்ப உன் பணம்? ம்? பெரியவர் பணத்தை நூறு செப்புக் குடத்திலே வச்சு மூடி பரணிலே ஏத்தி வச்சிருக்கறதாப் நினைப்பா? வர்ணத்திட்ட கேளு… இத்தனை நாள் நீ சாப்பிட்டதும் கூட என் செலவிலே…"

அலட்சியமான தோள் குலுக்கலுடன் அவன் போய்விட உறைந்து நின்றாள் ரம்யா.

## 10

நீல வானத்தில் மேகம் வெண் பிசறுகளாய் குலைந்து கிடந்தது. ஒரு பெண் தலை விரித்துக் கோதுவது போன்ற தோற்றம். தன் விரல்களையும் அப்பஞ்சு மேகத்துள் நுழைத்துத் துழாவ வேண்டும் போலிருக்க அவளையும் அறியாமல் முகத்தில் புன்னகை விரிந்தது.

ராஜேந்திரனை *சீண்டி* விட்டதிற்குப் பயன் இருந்தது.

ஒரே வாரத்தில் வீட்டிற்கு டெலிபோன் வந்துவிட்டது.

தேங்காய் விற்ற பணம் அதற்குப் பயன்பட்டது.

முதன் முதலாய் சித்தியுடன் பேசினாள். இவள் உற்சாகமாக பேசினாள் என்றால் சித்தி அதைவிட உல்லாசமாய் பேசியது போலிருந்தது. பேச்சு முழுக்க அவளது 'கைட்' பற்றித்தான்.



இவள் தன் 'தர்பூசணி'களைப் பற்றி விலாவாரியாய் விவரித்தாள். "இது படரும் சித்தி. இலையெல்லாம் வந்தாச்சு. பெரிசானா இலையிலே வெள்ளைக் கோடுங்க தெரியுமாம். காயும் அதே போலத்தானே இருக்கும்… வெள்ளரிக்காய் கூட கொஞ்சமாய் போட்டிருக்கேன். சங்க இலக்கியத்திலே இந்தக் காய்க்கு 'அணில்வரிக் கொடுங்காய்'னு பேராம்…"

"…"

"யார் சொன்னதா? புறநானூறிலே…"

"____"

"ஓஹோ… இங்க நம்ம விவசாயப் பண்ணை ஆபீஸர் சொன்னார்."

"______"

"ஒரு ஏக்கருக்குச் செலவு ஆயிரத்துக்கு உள்ளே தான் சித்தி போன முறை அதிக விளைச்சல் இல்லியாம். இம்முறை பிரமாதப்படுங்கறாங்க. ஆக ஏக்கருக்கு நாப்பதாயிரம் வரை கூட கிடைக்குமாம்… வந்துருங்க சித்தி… முதல் பழம் உங்களுக்குத் தான்…"

"என்ன கோபாலன் விடமாட்டாரா?"

"பின்ன, டாக்டரேட் கிடைக்கற சமயத்துல தர்பூசணி சாப்பிடப் போறேன்னா விடுவாரா?"

பதில் சொன்ன சித்தியின் குரல் ஏக இளமையுடன் துள்ளியது.

டாக்டர் கோபாலன்தான் சித்தி டாக்டரேட் வாங்க உதவும் 'கைட்'.

ஒரே மாதிரியான விருப்பம். சிந்தனைகள், படிப்பு இவையெல்லாம் இருவரையும் ஈர்த்து நெருங்க வைத்து விட்டனவோ?

எது நல்லதோ. சரியோ. அது நடக்கட்டும் என்று நினைத்தவளுக்குக் கூடவே வக்கீலின் நினைப்பும் வந்தது - பேசினாள் -

"எல்லாம் சரியாயிருக்கு நீங்க எப்ப இங்க வர்றீங்க. சில விவரமெல்லாம் பேசணுமே?"

"என் அஸிஸ்டெண்டை முதல்ல அனுப்பறேம்மா. இங்க எங்காத்தில சில குழறுபடிங்க நேர்ந்து போச்சு 'ஆம்' நிறைய விருந்தாள். நேரம் கிடைச்சதும் வந்துடறேன். என்ன?"

சொன்னது போல் ஆள் அனுப்பினாரேத் தவிர வந்தவருக்கு விவரம் ஏதும் சொல்லத் தெரியவில்லை. சிற்சில கையெழுத்துக்களை வாங்கியதோடு தன் வேலை தீர்ந்தது என்பதாய் கிளம்பிவிட்டார்.

அப்போதுதான் சொத்து விவரம் தெரிவித்ததோடு வக்கீலின் வேலை தீர்ந்தது என்பது புரிந்தது. ஏதோ வக்கீல் இதுவரை வீட்டு நிர்வாகத்திற்காக பணமும் தந்து கவனித்திருப்பார் என நினைத்தது முட்டாள்தனம். அவரே தன் குடும்ப குழப்பங்களில் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

"இத்தனை நாள் நீ சாப்பிட்டது என் பணத்திலிருந்துதான்" என்று ராஜேந்திரன் சொன்னதும் விக்கித்தவள் மறுநாளே வர்ணத்திடம் அது பற்றி பேச்செடுத்தாள்.

"இட்லி மிருதுவா பூப்போல வருதே... என்ன அரிசி?"

"தெரியலீங்கம்மா. சின்னவருதான் மொத்தமா வாங்கிப் போடுவாரு... அவரு வந்ததிலிருந்தே வீட்டுச் சாமானு அத்தனையும் மொத்தமா வாங்கிடுவார். சில்லரைச் சாமானுக, கோழி இதுகளை அப்பப்ப எவ்வீட்டுக்காரரு வாங்கிக்குவாக."

"வக்கீல் உங்ககிட்ட செலவுக்கு ஏதும் கொடுத்திருப்பார்னு நினைச்சேன்."

"சின்னய்யா வந்த பிறவு எல்லாப் பொறுப்பும் அவருதாம்மா... வக்கீலு உங்களையே வந்து இன்னும் எட்டிப் பாக்கலியே..."



"பண்ணை வரவும் ராஜேந்திரன் கைக்குத் தானே போகும்?"

மடக்கிவிட்ட திருப்தியுடன் நிமிர்ந்தாள்.

வரும் வருமானத்தில் செலவு செய்கிறான். இதிலென்ன வித்தை?

"அதைத் தனியா வரவு எழுதி முழுக்க பாங்கில போட்டுடுவாங்கம்மா முத்தையா இல்ல இவருதான் கூடப் போறது. குழம்பு ருசியாயிருக்காம்மா? நம்ம தோட்டத்து பிஞ்சு அவரை..."

"ம்ம்... ஆமா..."

"சின்னவரு இல்லீன்னா... நாங்களும் கிளம்பியிருக்க வேண்டியதும்மா..."

"ஏன்? பெரியப்பா நீங்க எப்பவும் இங்க தங்கிக்கலாம்னு சொல்லியிருக்காங்களே... உயில்ல?"

"வாஸ்தவங்க ஆனா வயித்துப் பாடு கழியணுமே? மாசாமாசம் கைக்கு சம்பளத் தொகை வந்தால்ல எங்க கதை ஓடும்? ஐயா எங்களுக்குன்னு விட்டுப் போன காசுல ஒரு குடிசைப் போட்டுட்டு அதுக்குப் பக்கமாவே ஏதேனும் வேலையைத் தேடிட்டிருப்போம்மா..."

"இப்போ சம்பளம்?"

"சின்னவரு முத தேதிக்கே தந்திருவாரும்மா. இது பழகின இடம்... ஆக சந்தோசமா இருந்துகிட்டோம்..."

ஆக வீடு சுமுகமாய் நடப்பது அவனால்!

இவள்தான் தேவையற்றது 'தைய்ய தைய்யா' போட்டிருக்கிறாள்.

வக்கீல் மூலம் அவள் பிற்பாடு தெரிந்து கொண்டது. இறப்பு வரிகளைச் செலுத்தி. உயிலைக் காட்டி வங்கிக் கணக்குகளும் இவள் பேரில் மாற்றப்பட்டால்தான் பணமென்று ஏதும் கைக்கு

வரும் என்று. வெவ்வேறு கணக்குகள் இருப்பதால் மொத்தத் தொகை எவ்வளவு என்பது சரியாக தெரியாது என்று விட்டாளம்மா, தன் கைக்காசில் சமாளித்தாள்.

வேலைக்காரர்களுக்கு இனி சம்பளம் தரவேண்டியது தான்தான். முதலாளியம்மா எனும் ஹோதா தேவையானால் செலவும் செய்தால்தானே ஆகும்? சம்பளம் கூடத் தர தகுதியற்றவளுக்கு 'அம்மா' அந்தஸ்து தகுமா? பெரியப்பாவின் பணம் வந்ததும் கணக்கிட்டு அவனிடம் பட்டுக் கொண்டிருக்கும் கடன்களைத் தீர்க்க வேணும்.

மறுநாள் ராஜேந்திரனைத் தேடிப் போய் நின்ற போது வழக்கமான மிடுக்கைக் காட்ட முடியவில்லை.

தலை கவிழ்ந்திருந்தாள். குரலிலும் தளர்வு.

"என்... எனக்கு மாசம் எவ்வளவு செலவாகுதுன்னு சொன்னா அதை நான் தந்திடுறேன்."

"தன் மானம் உனக்கு மட்டும்தான் இருக்கணுமா?"

புரியாமல் நிமிர்ந்தாள்.

ஊடுருவலாய் பார்த்தவனின் பார்வை தாளவில்லை. முகமெல்லாம் விநோதமாய் ஒரு வெப்பம் பாய்ந்தது.

"நான் வாடகைத் தராம உன் வீட்டிலே குடியிருக்கிறேனே. அதுக்கு உன் சாப்பாட்டு செலவு சரியாப் போச்சு."

ஆக அதுக்கு இது என்று அசையாமல் உட்கார்ந்து விடுவானோ? விழிகளைச் சற்று விரைப்பாக்கினாள்.

"அதுக்காக இங்கயே இருந்திட வேணாம்."

"இருக்கிற வரை கௌரவமாய் இருக்கட்டும்னு மட்டும்தான் கேட்டேன். தோட்ட வேலைகளைப் பாதியிலே விட்டுர முடியாது."

"ம்ம்..." முணங்குவதைத் தவிர வேறேதும் சொல்லத் தோன்றவில்லை.



மறுநாள் காலை சற்று தாமதமாகத்தான் விழித்தாள். அதுவும் கதவு தட்டப்பட்ட சத்தம் கேட்டால்தான் போலும்.

"யாரு?"

"நாந்தாங்கம்மா காபி எடுத்தாந்தேன்."

"தோ... வரேன்."

இவள் கழுவிய முகத்தைத் துடைத்தபடி வர, ப்ளாஸ்கிலிருந்த காபியை ஊற்றி நீட்டினாள் வர்ணம்.

"ஏது இன்னைக்குக் காபி தேடியே வந்திருக்க?"

"நேரமாச்சு. ஏன் அம்மா எழுந்துக்கலைன்னு போயி பாருன்னாரும்மா சின்னவரு."

"ம்ம்."

"தவிர நேத்து சாஸ்தி. பேசிப்புட்டேனோன்ர பதைப்பு. அம்மா மன்னிச்சிரணும்."

"என்ன?"

"இல்ல... வந்துங்க சின்னவரு இல்லாட்டி நாங்க வேற இடம்பாத்து போயிருப்போன்னு."

"உண்மையைச் சொல்றதுக்கு எதுக்கு மன்னிப்பு?"

"நினைச்சதெல்லாம் பேசலாங்களா? சின்னவரு உங்ககிட்ட காசு பணம் பத்தியே பேசக் கூடாதுன்னாரு."

"இப்ப அவர் சொல்லித்தா உங்ககிட்ட விசாரிச்சேன். ஆக தப்பில்லை. அது சரி வர்ணம்... காராஜுலே பளபளன்னு நிக்குதே கார் எல்லாம். அது எப்ப வாங்கினது?"

"ஆங்.. சின்னவரு வரும்போதே அதுலதான வந்தாரு. கூடவே ஒரு ஜீப்பில டிம்மு ஜின்னு வந்ததுங்க. அப்ப அதுங்க அஞ்சாறு மாசக் குட்டி. குழந்தைங்க மாதிரி வீடெங்கும் சுத்தி ஆடுச்சு. ராத்திரி வெளியே விட்டுர்றதா.. பயமே இல்லீங்கம்மா. வீட்டப் பூட்டாட்டி கூட பாதகமில்லை. பெரியப்பாவுக்குக் கூட அதுக விளையாட்டப் பாக்கறதுல சந்தோசம்."

"ராஜேந்திரன் எதுக்கு இங்க வந்தாருங்கறது தெரியுமா?"

"நம்ம பக்கத்து நிலம் பூரா அவருதுதானுங்களே? அவுக அம்மாவோட பூர்வீகச் சொத்தாம். ஒரே அக்கா வெளிநாட்டுல.. அதென்ன காநாடுவா.."

"கனடாவா?"

"அதேதாம்மா.. ஆக இவருதான் ஒண்டி வாரிசு. அத்தனையும் கவனிக்கணுமுல்ல?"

ஆகப் பரம்பரை சொத்துள்ளவன்.

சிறந்த பள்ளி, கல்லூரியில் படித்தவன் என்பதற்கு அவன் பேசிய ஆங்கிலமே சாட்சி. ஒரே அக்கா அயல்நாட்டில்..

பல வாரங்களாக ஒரே வீட்டில் தங்கியும் தனக்கு ராஜேந்திரனைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை என்பது உறைத்தது.

எல்லாம் சரி. ஆனால் இத்தனை இருந்தும் இவன் ஏன் சாக்கில் ஒட்டிய புளிபோல இங்கேயே கிடக்க வேணும்..?

அதுதான் உதைக்கிறது.

## 11

**வீ**டு முழுக்க பாலீஷ் வாசம் மண்டியது.

ரம்யா இடுப்பில் ஒரு கந்தல் துவாலையைக் கட்டிக் கொண்டு தவழ்ந்தபடி தரைக்கு வர்ணம் பூசிக் கொண்டிருந்தாள்.

இடுப்புக் கழன்டு விடும் போலிருந்தாலும், கண்களுக்கு புது மாற்றம் மிக ரசித்தது.

பாதி பூசப்பட்ட தரையில் பவளத்தின் பளபளப்பு.



முதலில் தாழ்வாரத் தரையில்தான் அடித்துப் பார்த்தாள். பெருக்கித் துடைத்த தரையில் அகல 'பிரஷ்' கொண்டு 'ரெட்டாக்ஸைட்' பூச மாயம் போல சிவந்தது தரை.

"அடடே.. ரொம்பப் பிரமாதம்மா."

"மேலே நடந்துராதீங்க வர்ணம். இது ஒரு நாள் முழுக்க காயணும். பாதிப் பாதியாய் பூசுவோம். அப்பாத்தான் புழங்க முடியும்."

"யம்மா... நானும் அடிக்குதேனே?"

"குட். இன்னொரு பிரஷ் இருக்குது. தரேன்."

இரு ஜோடிக் கைகளின் சுறுசுறுப்பில் வேலை ஜரூராய் நடந்தது. இவள் சற்று அயர்ந்தால் அருள் பிடுங்கி அடித்தாள்!

"இத்தனைப் பெரிய ஹாலிலே கூட நாலு 'சேர்' போட்டா அம்சமாயிருக்கும்."

"மேலு ரூம்பப் பாக்கீங்களாம்மா?"

"ஏன்... அங்க என்னயிருக்குது?"

"வேண்டாத தட்டு முட்டு சாமானுங்க. சேரு, சோபா கூட கிடக்குது."

ஏறக்குறைய துள்ளினாள்.

"நிஜமாவா? முன்னமே சொல்றதுக்கென்ன?"

"தேவைன்னு தெரியாதுங்களேம்மா."

"வாங்க. முதல்ல போய் பார்ப்போம். சாவி எங்கேருக்கு? எப்படி இத்தனை நாளு நான் அப்படியொரு ரூமைப் பார்க்கலை?"

பேசியபடி இடுப்புத் துவாலையை கழற்றி வீசியவள் அருளின் பின்னோடு ஓடினாள்!

அந்த அறைக்குள் நுழைந்து அரைமணி நேரமான பிறகும் ரம்யாவின் ஆச்சரியம் அடங்கவில்லை.. ஆனந்தம் தீரவில்லை.

"அடடே.. இது தஞ்சாவூர் ஓவியம். இதெல்லாம் வாங்கிச் சேர்த்திருக்காரே.. ஏன் இங்க அடைஞ்சு கிடக்குது? கரையான் நாசமாக்கியிருந்தா?

"கவனமா தூசு தட்டி வச்சிருப்போம்மா.. சிலது மேல துணி போர்த்தி வுடுவோம். கற்பூர வில்லை. மூலிகையெல்லாம் போட்டு வுட்டுருக்கதால பூச்சி பொட்டு அண்டாது."

"சரி எத்தனை நாளா இப்படிப் பூட்டிக் கிடக்குது. புதையல் போல?"

"அதாச்சம்மா ரெண்டு வருஷத்துக்கு மேல. குடத்து பெரிய வெள்ளி விளக்கு, சைனா செட் எல்லாம் களவு போன பிறவு.. அத்தனையும் இங்கப் போட்டுப் பூட்டியாச்சு. வீடு திறந்தே கிடக்கும். தோட்டத்து ஆளுங்களும் வரப் போவ இருக்குங்களா விஷயம் தெரிஞ்ச எவனோ வந்து ஒவ்வொன்னா தூக்கிட்டு போவ ஆரம்பிச்சுட்டான். ஐயா ஆசையாச் சேத்ததுதான். ஆனா இனி என்னால காபந்து பண்ண முடியாதுரா. உள்ளப் போட்டுப் பூட்டுன்னாரு."

"ராஜேந்திரனுக்கு இது பத்தி தெரியாதா?"

"அவரு கவனமெல்லாம் தோட்டந்தாம்மா. இதில் நோக்கமில்ல. பொம்பளைங்க குணம் தனி. அவுக கால் பட்டாத்தான வீட்டுக்கு களை? இப்ப தாவாரம் மருதாணி தடவிட்ட மாதிரி செக்கச் சிவக்க இருக்கு. காலையில வர்ணம் அதுல கோலம் போட்ட முத்துப் பதக்கமாட்டாம் கிடக்குது. களை மீண்டுருச்சம்மா."

"இதிலே சிலது மட்டும் வெளியே எடுப்போம். நல்ல ரக பாலிஷ் வாங்கி நாமே ஒரு 'கோட்' பூசிட்டோம்னா பிரமாதமாயிடும்."

தர்பூசணியின் வளர்ச்சியோடு போட்டி போட்டு இங்கு பங்களாவும் அழகுபட்டது.

வரவேற்பறையில் அழகிய செம்பு, தாமிர பாத்திரங்களில் மூன்று நாட்களுக்கு ஒரு மறை புது மலர்கள் வைக்கப்பட்டன.



சாதாரண சாமந்தியும் செம்பருத்தியும் என்றாலும் அவை வைக்கப்பட்ட நேர்த்தியில் கண்ணை நிறைத்தன. சுவர்களின் ஓவியம் வீட்டை நளினமாக்கின. நடுவே தொங்கிய கேப்டனின் புகைப்படம் இப்போது புன்னகைப்பது போலத் தோன்றியது!

"ஹலோ ரம்யா" ஆரவாரமாய் நுழைந்த பாஸ்கர் ஸ்தம்பித்தே போனான்.

"இதென்ன ஜீம்பூம்பா மாயம்?"

"எல்லாம் பெரியப்பா சாமான்கதான். திருட்டு பயம் வர அத்தனையையும் பூட்டி வச்சிட்டாங்க."

"பிரமாதப்படுத்திட்டே.. இன்னும் ஒரு மாசத்துல பல லட்சங்களுக்கு அதிபதி வேற..!"

"லாட்டரி சீட்டு வாங்கற பழக்கமில்லியே எனக்கு!..." சிரித்தாள்.

"ஆனாலும் பம்பர் அடிச்சிட்டியேம்மா. இப்ப போட்ட தர்பூசணியும் நல்லாவருதாமே. என் வீட்டைச் சுற்றி கொஞ்சம் போடலாம்னு நினைச்சேன். பருவம் தப்பிடுச்சு. ரம்யா சரியான சமயத்திலே போட்டாங்க. அடுத்த மாசம் அத்தனையும் காசுன்னார் ஆபீஸர்."

"வரட்டும் பாக்கலாம்."

"நினைச்சா முடிச்சுருவே ரம்யா. வீட்டைப் பார்த்தாலே தெரியுதே."

இவள் தந்த இளநீரைக் குடித்தவன் விஷயத்திற்கு வந்தான்.

"இன்னைக்கு உன்னை டின்னருக்கும் கூட்டிப் போலாம்னு வந்தேன்."

"என்ன விசேஷம்?"

"விசேஷ நாளிலேயும் இங்கேயேத்தான் கிடந்தே. புது வருஷம், பொங்கல் எல்லாம் பண்ணையாட்களுக்கு சாப்பாடு போட்டதோட தீர்ந்தது. ஏனிப்படி காட்டில அடைஞ்சு கிடக்கறியேன்னுதான்."

"மொபட் வந்த பிறகு ஒரளவு சுத்தறேன் பாஸ்கர். வேலை சரியாப் போகுது."

"வத்தலகுண்டு அவுட்டர்ல ஒரு புது ரெஸ்ட்டாரண்ட் வந்திருக்கு. சாப்பாடு ஏ-ஒன்னாம். சைனீஸ் மெனு கூட இருக்குது. உன்னைக் கூட்டிட்டு போறுங்கற ஆசையில் ஓடி வந்தேன்."

தலை சாய்த்து, கை நீட்டி அபிநயித்தாள்.

"ராதிகா வருவாளா?"

"இல்லை அவ வேலை அவளுக்கு. மதுரைக்கும் இங்கியுமா அலையறா. நாம ரெண்டு பேருந்தான் அப்படியே வீட்டுக்கு வேறேதும் தேவையான்னு யோசிக்கலாம். எனக்கு நிறைய காண்டாக்ட்ஸ் ரம்யா. கார் எது வேணும்னு சொல்லு புக் பண்ணிடறேன்."

"——"

"என்ன ரம்யா இப்படி யோசிக்கறே. மும்பைப் பொண்ணு நீ?"

"ஏன் மும்பை இந்தியாவிலதான இருக்குது?"

சித்தி அவளை எங்கும் அநாவசியமாய் போக விட்டதில்லை. அதிலும் தனியாய் ஒரு ஆணுடன் சுற்ற வாய்ப்பேயில்லை. ரம்யாவும் அது போன்ற கோரிக்கைகளை வைத்ததில்லை.

ஆனால் பத்தினிபோல தூர்தர்ஷனுடன் மட்டுமிருக்கும் டி.வியின் முன் எத்தனை மாலை இரவுகளைத்தான் கழிப்பது?

ராஜேந்திரனைக் காணவேயில்லை. உன் பாதுகாப்பிற்காகத்தான இங்கு தங்கியிருக்கிறேனாக்கும் என்று தோள் தட்டியவன் இங்கு இருக்கிறானா இல்லையா என்பதே தெரியவில்லை.

ஒரு நாளாவது கரிசனையுடன் வெளியே கூட்டிச் சென்றிருக்கிறானா இல்லை ஏதேனும் தேவையா என்ற விசாரிப்புண்டா?



வீடு இத்தனைப் பொலிவு கூடியிருப்பது பற்றி ஒரு வார்த்தை.. ஹூம்.. பாராட்டாய் ஒரு புன்னகை?

ராஜேந்திரன் மீது எழுந்த எரிச்சலில் பாஸ்கருக்குத் தலையாட்டினாள் ரம்யா.

"சரி.. போகலாம்.. எனக்கும் மாற்றம் தேவைதான்."

மாலை குளித்து பாலிகாட் சேலைக்கு மாறினாள். நல்ல கெட்டிப் புடவை. கண்ணியமாய் தெரியும். மஞ்சள் புடவைக்கும் பொருத்தமாய் பெரிய ஒற்றைச் சிவந்தியைப் பின்னலில் செருகினாள். சற்று அகலமான செஞ்சாந்து.

"அடடே.. ரொம்ப வித்தியாசமாய் தெரியறே ரம்யா.."

"நம்ப ஊருக்குப் பொருத்தமாய்.."

"வேஷமாக்கும்?" அதிரடியாய் சிரித்தான்.

அத்துவானத்தில் பத்து குடில்கள் போட்டு அந்த உணவகத்தை ஆரம்பித்திருந்தார்கள்.

இயற்கை சூழலில் வித்தியாசமாகவே இருந்தது.

வேண்டியதை 'ஆர்டர்' செய்துவிட்டு பேசினார்கள்.

"பெல்ஜியம் கார்பட்ஸ் இம்போர்ட் செய்றான் என் ஸ்கூல் ஃப்ரண்ட் இஸ்மாயில். உனக்குப் பாதி விலைக்குத் தர சொல்றேன். ஆறாயிரம் ரூபாயில உன் ஹாலுக்குப் பொருத்தமாய் கார்பெட் கிடைச்சிரும்."

"பெல்ஜியம் கார்பெட்ஸ் பர்மா பஜாரிலேயே கிடைக்குமே. அதுவும் ரெண்டு, மூவாயிரத்துக்கெல்லாம்?"

"அந்த பஜார் திருச்சில்ல இருக்குது?"

"மதுரை குட்ஸ்ஷெட் தெருவில் இருக்கிறதாச் சொன்னாங்க. அடுத்த தடவைப் போனாப் பார்க்கலாம்னு விசாரிச்சு வச்சேன்."

"உனக்கு மதுரை தெரியுமா?"

"போய் பழகணும்" புன்னகைத்தான்.

"பத்தீக் ஒலியமாவது.."

"இப்போதைக்கு எதுவும் தேவையில்லை பாஸ்கர். வேண்டியதெல்லாம் வீட்டிலேயே இருந்தது.

"அதிலே எதையும் விற்கப் பிரியப்பட்டா சொல்லு ரம்யா. வாங்க பெரும்புள்ளிகளை ஏற்பாடு செய்றேன். ஒரு ரோஸ்வுட் டேபிள் அரை லட்சம்னு பந்தா பண்ணலாம்."

"இப்ப முதல் வேலை பண்ணைக்கு மின்சார வேலி போடறதுதான். எந்நேரம் பணமெல்லாம் அதுக்குத்தான்."

அவள் அதைப் பற்றி மேலும் பேச பாஸ்கர் சோர்ந்து தெரிந்தான்.

"நீ ஒரு பொண்ணு மாதிரியே பேசலை ரம்யா. ஆம்பளைப் பேச்சு பேசறே."

"தாங்க்ஸ். ராஜேந்திரன் என்னைச் செலவழிக்க மட்டுமே தெரிஞ்ச அசட்டுப் பெண் பிள்ளைன்னு நினைக்கறார். அதுக்கு இது தேவலை.."

"ராஜ் உன்னைப் பற்றி நினைக்கறது இருக்கட்டும். நீ அவரைப் பற்றி என்ன நினைக்கறே?"

"நான் உங்களை இதேக் கேள்வியைக் கேட்க இருந்தேன்.."

"நானா.. எனக்கு அவரை அதிகம் தெரியாதே. ராதிகாவைக் கேட்டா அளந்து விடுவா. அவளுக்கு அவரோட அதிகப் பழக்கம். பெண்களை மட்டும்தான் அண்ட விடுவாரு மனுஷன்." விஷமமாய் கண் சிமிட்டினான்.

"நான் வந்த சில காலத்திலேயே என்னைத் தனியா இப்படி கூட்டிட்டு வந்திருக்கீங்க. ரெண்டு வருஷமாய் இருந்த ராஜேந்திரனைப் பரிச்சயமில்லைன்னா எப்படி.. நீங்களும் அதே ரக மனுஷந்தானா?"

கண்களை அப்பாவித்தனமாய் விரித்தாள்.

"ஹிஹிஹி.." பாஸ்கர் நெளிந்தான் பாவமாய்!



## 12

பரோட்டா மிக மிருதுவாக இருந்தது. விதவிதமான வெஞ்சினங்களும் ருசியாகவே இருக்க, இருவரும் ரசித்து சாப்பிடலானார்கள்.

"கொடைக்கானல் போக வர்ற டூரிஸ்டை நம்பித்தான் இந்த பிஸினஸ்" சில குடில்களில் வெளிநாட்டுக்காரர்கள் தெரிந்தார்கள்.

வடநாட்டுக் கும்பலிலிருந்த சில குழந்தைகள் இங்கும் அங்குமாய் ஓடி விளையாட, 'இதர் ஆவோ' என்று முக்காடிட்ட அவற்றின் அம்மாமார் அழைத்து சப்பாத்தி ஊட்ட முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

புல்லாங்குழல் இசை மொத்த இடத்திற்கும் சேர்ந்து இனிமையாய் கசிந்தது.

"வேறெதும் ஆர்டர் பண்ணட்டுமா?"

"ஐயோ போதும். வயிறு ஃபுல்."

"இங்க மசாலா டீ நல்லாயிருக்கும். குடிச்சா வயிறு லேசாகும்."

"சரி!"

தேநீரைப் பருகியபடி பேச்செடுத்தாள்.

"நீங்க... அதாவது ஊரிலே உள்ளவங்க இந்த சொத்து முழுக்க ராஜேந்திரனுக்குப் போகும்னு நினைச்சிருப்பீங்க இல்லியா?"

"ராஜ் கேப்டனுக்கு உறவில்லைங்கறது தெரியும். ஆனா வேற உறவுக்காரங்களையும் இங்கப் பார்த்ததில்லை.

கேப்டனோட கடைசி காரியங்களை எல்லாமும் ராஜ்தான் செய்தார். பதினாறாம் நாள் விருந்து கூட தடபுடலாய் தந்தார்."

"ஓஹோ..?" குற்ற உணர்வுடன் கேட்டுக் கொண்டாள்.

"கேப்டன் தன்னைப் புதைக்கணுங்கறதைக் கூட ராஜ்கிட்ட சொல்லியிருந்தார்..."

"ஓ. எங்கே?"

"உங்க தோட்டத்திலேயேதான். மெயின் கேட்டுக்கு இடது பக்கமாவே போனா.. கடைசி மூலையிலே.."

"ராஜ் எங்கிட்ட சொல்லலியே?"

சற்று காட்டமாகவே கேட்டாள்.

"இப்ப வர்ற டிவி. தொடரெல்லாம் ஆவி, பேய், சமாதின்னு வருது. ஒரே பூச்சுற்றல் வேலை. பாக்கிற பொண்ணுங்க சட்'டுனு பயந்துக்கும்னு சொல்லலைப் போல.."

"நாந்தான் அதெல்லாம் பார்க்கறதில்லையே? சமாதிக்கும் மாலை போட்டு மரியாதை செய்யலாமேன்னு கேட்டேன்."

"சமாதியைக் கூட அட்டகாசமாய் பளிங்கு மண்டபம் மாதிரி கட்டலாம் ரம்யா. அதுக்குரிய ஆட்களைக் கூட்டிட்டு வரவா..?"

"இந்த வருஷம் போகட்டுமே."

"ஆமா.. அப்படி ஒரு முறையிருக்குல்ல? 'பூட் பங்களா' மாதிரி தனியிடத்தில நீ மட்டுமாய் தங்க நேர்ந்து போச்சு.. அதான் உதவியா இருக்கலாமேங்கற ஆசை எனக்கு.."

"தாங்க்ஸ்."

"ராஜ் அங்கேயில்லைன்னா அடிக்கடி வருவேன்.. நாய்ன்னா வேற எனக்கு பயம்."

முதன் முறையாக ராஜேந்திரன் நாய்களுடன் அங்கிருப்பது பெரும் நன்மை எனத் தோன்றியது. அதனால்தான் நிம்மதியாய் பயமின்றி வீட்டில் தங்க முடிந்தது.



"ராஜுக்கும் உன் வீடு பழகிடுச்சு. வெளியேற மனமிருக்காது."

"ம்ம்.."

"நீ வெளியேறக் கேட்டும். மாட்டேங்கறாரோ?"

பாஸ்கர் மெல்ல ஆழம் பார்க்க, இவள் பட்டும் படாமலும் பதில் தந்தாள்.

"தொடர்ந்து இங்கயே தங்கிட முடியாது. உடனே வேற இடமும் கிடைக்காது போல.. சிரமந்தான்."

"சில்லரையிருந்தா எதுவும் சிரமமில்லை. இதுதான் உலகக் கோட்பாடு ரம்யா.."

பெரும் தத்துவம் சொன்னது போல பெருமையாய் சிரித்தான்.

"உடம்பு சரியில்லாம தவிக்கிறோம். அந்த சிரமத்தை எத்தனை சில்லரையிருந்தாலும் நாமதான் அனுபவிக்கணும். அதே போலத்தான் மனநிம்மதியும்.."

"ஆ. ஆ. வந்து இப்ப ராஜேந்திரன் விஷயத்துக்கு வருவோம். அவருக்குள்ள காசுக்கு எங்கேனாலும் வீடு வாங்கலாம். இந்தப் பக்கம் அவர் ஸ்டேட்டஸ்க்குத் தோதான வீடில்லை. அவராக் கட்டினாத்தான். ஆனா வத்தலகுண்டுல நாலைஞ்சு பங்களா காலியாக் கிடக்குது.. கார் இருக்குதே. பிறகென்ன பண்ணைக்கு வந்து போக கால் மணி நேரமாகும். அவ்வளவுதான்."

"ஓஹோ?"

"வர்ணம் அவருக்கு ஏத்தாப்போல சமைக்க பழகிடுச்சு. தவிர மனுஷனுக்கு உன் கம்பெனிய விட மனசிருக்காது!"

நினைத்த மாத்திரத்தில் பங்களா வாங்கக் கூடியவன் ஏன் தன்னிடம் இடி வாங்கியபடி கிடக்கிறான்?

"முதல்ல கேப்டன் தன் பண்ணையை ராஜுக்கு விக்கறதாய் தான் பேச்சு வரிலே.. விற்று பணமாய் உங்கிட்ட தந்திருந்தா்னா எந்த பிரச்சனையுமில்லை."

நல்லவேளை பெரியப்பா அப்படிச் செய்யவில்லை எனத் தோன்றியது. பண்ணையையும் அதன் வேலைகளையும் நேசிக்க, ரசிக்க ஆரம்பித்தாயிற்றே.

"பக்கத்து நிலமும் அவருதாம். அங்கே கிணறு ரெண்டு தோண்டியாச்சு. சீனித்தண்ணி மாதிரி அதுல வர தண்ணி இனிப்பாம். கேட்டன் பண்ணையையும் வாங்கியிருந்தா குறுநில மன்னர் ரேஞ்ச்சில இருந்திருக்கலாம் அந்த ராஜேந்திரன்..."

"ம்ம்.. எது சொந்த ஊர்?"

"அவர் சென்னையிலேருந்து வந்ததாய் சொன்னாள் ராதிகா. பட்டணத்து வாழ்க்கைப் பிடிக்கலையாம். ஏதும் காதல் தோல்வியோ என்னவோ?"

உதடுகளைப் பிதுக்கினாள். "அதான் சதா நாயோட திரியறார்.."

"அப்ப ஏன் இன்னும் வீடு கட்டிக்கலை?"

"வந்தவர் கேப்டனைப் போய் பார்க்க. பெரியவருக்கும் ராஜைப் பிடிச்சுப் போச்சு. வெறிச்சோடின வீட்டில விளக்கேற்ற பொண்ணுதான் வரலை... வந்தவளையாவது பிடிச்சு போடுவோம்னு நினைச்சுட்டார்."

"ஒருத்தருக்கு ஒருத்தர் பிடிக்கலைன்னா சேர்ந்து வசிக்கறது கஷ்டமில்லை.

அப்படின்னா உனக்கும் ராஜைப் பிடிச்சிருக்கு.. ம்ம்..?"

"பேச்சை மாத்தாதீங்க பாஸ்கர் ரெண்டு ஒண்டிக் கட்டைங்களுக்கும் ஒத்து போய்டுச்சன்னேன். ஸிம்பிள்."

"ஆக தனியே வீடு கட்டறதை ஒத்திப் போட்டுட்டு நிலத்தில ஏதோ வேலை செய்திட்டிருக்கார். இருந்தவரை உங்க பெரியப்பாவோட சந்தோஷமாவே இருந்தார்."

இவளுக்குள் குற்றவுணர்வின் குறுகுறுப்பு.

பெரியப்பாவின் ஒரே உறவாய் மிஞ்சியதான் ஒரு முறையேனும் அவரை வந்து பார்த்திருக்க வேண்டும். படத்தில்



முரட்டுத் தோற்றத்துடன் இருந்தாலும் கலாரசனையுடன் பலப் பொருட்களையும் சேகரித்திருக்கிறாரே பெரியவர்? தனிமையை, இயற்கையை விரும்பியிருக்கிறார். அதே விருப்பம்தானே தன்னையும் இங்கு ஈர்த்து வந்தது. பிடித்து வைத்திருக்கிறது.

மனித உறவுகளுக்காகவும் ஏங்கியிருப்பார். அதனால்தான் ராஜேந்திரனைத் தன்னுடன் தங்க வைத்துக் கொண்டார்.

இளைஞன் ஒருவனுடன் இயைந்து வாழ முடிந்தவர் அன்பும் பண்பும் உடையவராய்தான் இருந்திருப்பார்.

ஒருமுறை கூட சந்தித்திராத தன் மூத்த உறவினருக்காய் அந்நேரம் மிக ஏங்கினாள் ரம்யா.

இந்தக் குற்றத்தில் சித்திக்குத்தான் பெரும் பங்கு.

வந்த அழைப்பை நிராகரித்து.. அலட்சியம் பண்ணினது சித்திதான்.

ஆனால் தான் தாயை இழந்து தனியே தவிக்கையில் துணை நின்று தன்னோடு கூட்டிப் போனதும் அவள்தானே..?

அந்நேரம் ஏன் பெரியப்பா வரவேயில்லை..?

"கேப்டன் விலாசத்துக்கு ரெண்டு தந்தி கொடுத்தாச்சும்மா" என்றாரே உதவிக்கு நின்ற பக்கத்து வீட்டுக்காரர்.

தம்பி இறந்தபோதும் அநாதரவாய் நின்ற தம்பி குடும்பத்தை ஏற்றுப் பாதுகாக்கவில்லையே. இதேக் கேள்வியை அம்மாவிடம் கேட்டதுண்டு..

"அவரு ஒண்டி ஆம்பிளை... நினைச்சாப்பல ரெண்டு பெண்பிள்ளைகளைக் கூட்டி சேத்துக்க முடியாதுடி... காசு பணம் தேவையான்னார்... ரெண்டு வாய்க்கும் போதுமானது சம்பாதிக்கறேங்க.. ஒதுங்கிட்டார்."

ஆணும் தனியே வாழ்வதில் பல அசௌகர்யங்கள் உண்டு போலும். என்னயிருந்தாலும் சொத்து முழுவதையும் தனக்காய் விட்டுப் போயிருக்கிறார்.!

"ஒரு நிமிஷம் ரம்யா. 'பில்'லுக்குச் சொல்லிட்றேன்" பார்லர் போக இப்படியெல்லாம் சிந்தித்திருந்தவளுக்கு பத்து நிமிடங்கழிந்து திரும்பியவன் வேறாக தெரிந்தான்.

கண்கள் அதீதமாய் பளபளத்தன.

நாற்காலியை மேலும் இவளருகே இழுத்து அமர்ந்தான்.

நாசி புது வாடையை இனங்கொண்டது. குடித்திருக்கிறானா என்ன?

தவளையை மிதித்தது போல அருவெறுப்பாயிருந்தது.

"போலாமா?" விருட்டென எழுந்தாள்.

"என்ன அவசரம் ரம்யா.. இரேன்" அவளது கைகளைப் பற்றினான்.

ஈரமாய் நடுங்கிய அவன் விரல்கள். உருவிக்கொண்டாள்.

"முழுசா இருட்டிடுச்சி. இனி வீட்டுக்குத்தான்."

"சரி போற வழியிலே ராதிகா வீட்டிலே ஒரே நிமிஷம் இந்த …ப்பர்லை கொடுத்திட்டுப் போயிடலாம்."

"ம்ம்.."

"காமரா ஒன்னு வாங்கினாள் அதுக்குண்டான பேப்பர்ஸ்."

"சரி."

பிரதான சாலையிலிருந்து திரும்பிய ஒரு நிமிடத்தில் ராதிகா … வரும். செப்பு போன்ற வீடு. அன்று அதைப் பார்த்த …ாவின் புருவம் சுருங்கியது.

காரணம் வீட்டு வாசலில் நின்றிருந்தது ராஜேந்திரனின் …கம்!



## 13

தன்னை ராதிகா, பாஸ்கருடன் பழக வேண்டாம் என்று தடுத்தவன் மட்டும் சல்லாபமாய் அவர்களுடன் ஊர் சுற்றலாம் போலும்..

பல்லைக் கடித்தபடி கறுவினாள்.

உள்ளேப் போய் இந்தக் கேள்வி தொனிக்கிறாற்போல அவனை ஒரு பார்வை விட வேணும். 'என்னய்யா ஊருக்குத்தான் உபதேசமா?' என்பது போல! முடிந்தால் ராஜேந்திரனுடனேயே வீடு திரும்பி விடலாம். குடித்திருக்கும் பாஸ்கருடன் பயணிப்பது அத்தனை பத்திரமில்லை.

ஆனால் ஐயா, சின்னவர் எப்போது கிளம்புவாரோ..?

ஆக வந்தவனுடனேயே வீடு போய் சேர்வதுதான் சரி.

பாஸ்கரின் பழைய மாருதி விசித்திரமான குலுக்கல்களுடன் போனதாய் தோன்றியது. வரும் போது இத்தனைக் குலுக்கியதாய் நினைவில்லை. அவன் குடித்திருந்ததால் இந்தப் புதுத் தள்ளாட்டமோ..? சினிமாவில் வரும் குடிகாரர்கள் போல பாஸ்கர் தடுமாறவில்லை என்றாலும் அதிகம் பேசினான்.. பார்வையில் ஒரு நுணுசான மங்கிய மினுமினுப்பு காரணமற்ற இளிப்பு.

ஆக ராஜேந்திரனின் எச்சரிப்பில் உண்மை இல்லாமல் இல்லை.

பாஸ்கருடன் தனியே வந்தது மடத்தனம்.

ஆனால் இங்கு ராஜேந்திரன் ராதிகாவுடன் இருப்பது என்னவாம்..? ஆண் நினைத்தது அத்தனையையும் செய்யலாம்.

பயமில்லை. விமர்சனமில்லை. ச்சே... அநாவசியத்திற்குத் தன்னுள் கோபம் குமுறுவது தெரிந்தது. ஏன், எதனால்?

அதிகமாய் ஆராய புத்தி ஒத்துழைக்கவில்லை.

"நான் காரிலேயே இருக்கேன். நந்துட்டு வாங்க."

"இத்தனை தூரம் வந்துட்டு நீ வீட்டுக்கு வரலைன்னா ராதிகா வருத்தப்படுவா ப்ளீஸ்."

கார் ஜன்னல் வழியே குனிந்து இவள் காதருகே கிசுகிசுத்தான்.

பழக்கப்படாத குடி வாடை குமட்டியது.

அவனை நெட்டித் தள்ளுவதற்காகவே கார் கதவை பலக்கத் திறந்தாள்.

"வரேன். நீங்க சீக்கிரம் வேலைய முடிங்க.."

திறந்திருந்த வீட்டினுள் சுவாதீனமாய் நுழைந்தான் பாஸ்கர்.

இவளும் பின்னோடு போக வேண்டியிருந்தது.

ராஜேந்திரன் ஹாலில் இல்லை. ஸோபா முழுக்க விதவிதமான ப்ளாஸ்டிக் பைகள். சின்னதும் பெரிசுமாய் .

"அட.. ராதிகா ஷாப்பிங்னு மதுரையிலே பாதியை அள்ளிட்டு வந்துட்டா போல.." பாஸ்கர் உள்ளறையின் கதவைத் தட்டினான்.

ஆக ராதிகாவை ஷாப்பிங் கூட்டிப் போயிருக்கிறான் ராஜேந்திரன். ஏதோ வாழைத் தோட்டம் சிக்குப்பட்டதில் இவனும் வாடிக் கிடக்கிறான் என்று நினைத்தது தப்பு. ஐயா குஷாலாய் ஊர் மேய்ந்து, காதலியின் மேல் காசை இறைத்து விட்டு திரும்பியிருக்கிறார்.

இத்தனைச் சாமான்களை வாங்க சில.. ஏன் பல ஆயிரங்கள் செலவாகியிருக்கும். தான் ஸ்கூட்டிக்கு இரண்டு அல்லது மூன்று ஆயிரம் அதிகம் தந்து விட்டதற்காய் எத்தனை அலட்டினான்.. போலித்தனம் மற்றும் போக்கிரித்தனம்!



படுக்கை அறையில் பேச்சுக்குரல்கள் கேட்டன. அதிலும் ராஜேந்திரனின் முரட்டுக் குரல் தொனிப்பாகவே கேட்டது. அறைக்கு வெளியே கிடந்தன அவனது 'ரீபோக்' ஷூக்கள்.

வந்ததும் வராததுமாய் உள்ளேக் குலாவல் வேறா?

உடம்பெல்லாம் உதறியது ரம்யாவிற்கு.

இத்தனை கேவலமான மனிதனுடன் ஒரே வீட்டில் தங்க நேர்ந்தது கொடுமை.

இவன் லீலைகள் பற்றி ஊராருக்குத் தெரியாமல் இருக்குமா?

சாம்பிராணி புகை மணத்தை கையால் பொத்தக் கூடுமா என்ன?

"எனக்குத் தலை வலிக்குது பாஸ்கர் சீக்கிரம்."

"தோ.. ராதிகா.. ஒரே நிமிஷம்."

இவளுக்கு நின்று அடுத்தவனைப் பார்க்கும் துணிவில்லை. அரைகுறை ஆடையில் கலைந்த தலையுடன் வந்து நிற்பாளோ?

மறுபடி காருக்குள் ஏறி அமர்ந்தாள்.

ஆத்திரமாய் அறைந்து சாத்த அக்குட்டி மாருதி குலுங்கியது.

பாஸ்கர் இரண்டு நிமிடங்களில் திரும்பியதும் ஒன்றுதான் நிம்மதி.

ராதிகா எட்டிப் பார்த்துக் கையாட்டினாள் ஏன் இரவு உடையில் இருக்கிறாளோ? அப்படியானால் பாஸ்கர் முன்னே மட்டும் நின்று பேசலாமா?

எப்பேர்பட்ட பெண் இவள்?

எது எப்படியோ இவளுக்கு ராஜேந்திரனுக்கு என்ன வேலை?

"என்ன ரம்யா. முகம் சிவந்திருக்கு. காய்ச்சலா?"

பாஸ்கர் கழுத்தில் கை வைக்கத் தட்டி விட்டாள்.

"சீக்கிரம் வீட்டுக்குப் போகலாம்."

அவள் குரலின் கடுகடுப்பை உணர்ந்தவன் மௌனமாய் ஓட்டினான்.

குளிர்ந்த காற்றில் ரம்யாவின் அனல் மூச்சு கலந்தது.

வீட்டிற்குப் போன பின்னும் அனல் அடங்கவில்லை.

வர்ணத்தின் விசாரிப்புகள் எரிச்சலூட்டின.

"தலைவலின்னா தைலம் தடவட்டுமாம்மா..?"

"தனியே விட்டால் போதும்."

"சின்னவரும் இன்னைக்கு இங்க சமைக்க வேண்டானுட்டாரும்மா."

"ஆம்மா அவருக்கு வேறிடத்துல செம தீனி."

ராதிகாவுடன் இத்தனை இழைபவன் ஏனிங்கு கிடக்க வேண்டும். அங்கேயே போய் ஒழிவதுதானே?

அன்று தூக்கத்தில் வினோதமான கனவுகள் கண்டாள்.

தர்பூசணிகள் கோடில்லாமல் வெற்றுப் பச்சையாய் காய்த்திருக்கின்றன.

தோட்டம் முழுக்க தனிப் பச்சையில் பெரும் பந்துகளாய்.

ராஜேந்தர் வந்து உட்கார்ந்து ஒவ்வொன்றாய் நீவ, சுவற்றில் வெண் கோடுகள் தோன்றுகின்றன.

விழித்தவள் கனவை நினைவுபடுத்திப் பொருமினாள்.

'ஹூம் இவரு ராமன்.. விரல் பட்டதும் அழியாக் கோடு விழ சண்டி ராவணன் அல்லவா?'

அடிக்கடி விழிப்பு தட்டிப் புரண்டவள், ஓரளவு கண்ணசந்தது அதிகாலையில்தான்.

"தாமஸ் வந்திருக்காரும்மா."



குளித்து தலைத்துவட்டியவளுக்குத் தகவல் சொன்னாள் வர்ணம்.

"அது யாரு?"

"ஆசாரிங்கம்மா. மர பீரோவில ரிப்பேரு வேலையிருக்குன்னீங்களாம். பாலிஷ் வேலையும் செய்து தருவாரு."

"இதோ வரேன்."

வேலைகளை விளக்க, தாமஸ் அதிகம் பேசாமல் வேலையில் இறங்கினார். வேலை நறுவிசாய் நடப்பதைப் பார்த்த திருப்தியில் ரம்யா தோட்டத்திற்குப் போனாள். திரண்ட காய்களைப் பார்க்க சந்தோஷமாயிருந்தது. ஊடே முந்தின இரவின் கனவும் நினைவிற்கு வந்து அலைக்கழித்தது.

வேலை எண்ணியது போல நடக்கிறது. அப்புறம் ஏன் அநாவசியமாய் ராஜேந்திரன் விவகாரங்களில் மூக்கை நுழைத்துக் குழப்ப வேண்டும்.

இரண்டு நாட்கள் முன்பு நடந்த சின்ன சம்பவம் ஏனென்று தெரியாமல் இப்போதும் தெளிவாய் மனதுள் நின்றது.

அதிகாலமே விழிப்பு வந்துவிட ஜன்னல் பக்கமாய் நின்றிருந்தாள்.

சூரியன் இன்னும் முழுதாய் கலைக்காத அதிகாலைப் பொழுது.

கிழக்கின் நிறத்தில் தோட்டமும் சிவந்திருந்தது. வித்தியாசமான மாய அழகு... அதில் குதித்து ஓடிய உருவங்கள். நாய்கள் தாம்.

அவற்றின் அதீத உற்சாகத்தின் காரணம் உடன் நடந்த ராஜேந்திரன்தான்.

அவன் சின்ன குச்சை எடுத்து வீச, நாய்கள் எம்பிப் பிடித்தன. என்னிடமிருந்து வாங்கு பார்க்கலாம் என்பதாய் போக்கு காட்டின.

பிப்ரவரியின் பனிக்காற்றுக்காய் அவன் கழுத்தில் மஃப்ளர் சுற்றியிருந்தான். கரி ஓவியம் போல அத்தனையும் தெரியவும் இவளுக்குள் இனம் தெரியாத பரபரப்பு. ஓடிப்போய் அவர்களோடு சேர்ந்து காலார நடந்து வரவேணும் போன்ற ஏக்கம்.

'வீட்டைக் காலி பண்ணுகிறாயா இல்லையா?' என மிரட்ட வேண்டியது தான் இவர்களோடு சேர்ந்து சுற்றினால் சரிதானா என்று ஏனோ அப்போது தோன்றவில்லை.

தயக்கமாய் 'டிம். ஜின்' என்று குரல் கொடுத்தாள்.

'திடும்' மென உறைந்து காதுகளை விறைத்த நாய்கள் சுற்றும் முற்றும் பார்த்தன.

"தோ இங்கேயிருக்கேன்."

மேலே பார்த்து வாலாட்டின.

"நானும் வரட்டா?" குழைந்து கேட்டாள்.

'வாயேன்' என்பதாய் செல்லமாய் குரைத்தன.

ஆனால் ராஜேந்திரன் சட்டையே செய்யாமல், நடந்து போனான். இத்தனை அமைதியான பொழுதில் கேட்காது போக வாய்ப்பில்லை. நாய்கள் இவளைக் கண்டு எம்பிக் குதித்ததைக் கூடவா கவனிக்கவில்லை?

ஆக அசட்டை செய்கிறான்.

அவர்களுடன் சேர்ந்து நடக்க மாட்டோமா என்ற ஏக்கம் மறுநொடி துக்கமாகிப் போனது. தன்னை நேசிக்க இங்கு யாருமில்லையோ என்கிற துன்பம்.

அன்று தன் பெற்றோர்களின் படத்தையும் மெல்லிய வெள்ளிச் சட்டத்தினுள் பொருத்தி ஹாலில் பார்வைப்படும் டமாய் வைத்தாள். அதன் இருமருங்கும் மணம் பரப்பும் வண்சாமந்திகள். இனி இப்படம் பார்த்துதான் ஆறுதல் தேட ணும். சித்தி வாரந்தோறும் போனில் பேசுகிறாள் என்றாலும்,



படிப்பும் படிப்பில் வழிநடத்தும் டாக்டர் கோபாலனும்தான் அவளது பிரதான நோக்கம் போலத் தெரிகிறது.

தினம் மும்பையின் ஜனத்திரளில் நீந்தியவளுக்கு பல சமயங்களில் இந்தத் தனிமை மூச்சடைத்தது. அப்போதுதான் பாஸ்கர் பெரியப்பாவின் சமாதி பற்றி சொன்னது வர. தோட்டத்தின் சில வாச மலர்களைக் கட்டிச் சென்டாக்கினாள்.

"வர்ணம்... பெரியப்பா சமாதி போகணுமே."

"பத்து நிமிச நடையம்மா. வரட்டுமா கூட?"

"ம்ம்."

வர்ணம் கைவேலைகளை முடித்து வரும் வரைக் காத்திருந்தாள்.

"ஏம் பெரியப்பா புதைக்கணும்னு கேட்டுட்டாங்க? நம்மதிலே அந்த வழக்கமில்லியே?"

"எரிச்சாங்கம்மா. அந்த அஸ்திய ஒரு கலசத்துல வச்சு இங்க புதைக்கச் சொன்னாங்களாம். ஐயாவ சதா அந்த அரிப்புப் பிடுங்கறப்போவெல்லாம். 'என்னைய எரிக்கையிலதான் இது தீரும்போல'ன்னு புலம்புவாக."

"எது ... எந்த அரிப்பு?"

"உங்களுக்கு அது பத்தி ஏதும் தெரியாதாம்மா?"

சொல்லக் கூடாததைச் சொன்ன பரிதாப முழியோடு கேட்டாள் வர்ணம்.

"யாரும் சொன்னாத்தானேத் தெரியும்? நான் தப்பு செய்துட்டதாய் நினைச்சு ஒதுங்கறீங்க போல... இதுவரை நான் இங்க வராதது தப்புதான் . ஆனா பெரியப்பா 'வா'ன்னும் அழைக்கலியே? அதாவது சமீபம் வரை..."

"அதுக்குக் காரணமிருக்கும்மா..."

"அதெல்லாம் தெரிஞ்சுக்க நா நினைக்கறது தப்பா?"

ரம்யாவின் குரல் கெஞ்சியது.

"வேற யாரும் சொல்லாதப்ப நானு எப்படிம்மா..?"

"சொல்ல வேற யாரு இங்கிருக்கா? ராஜேந்திரனுக்கு என்னோட சண்டைப் போடவே நேரம் போதலை..."

சொல்லும்போதே தனக்கும் அவனுடன் மல்லுக்கு நிற்பதே முக்கிய வேலையோ எனப்பட்டது.

"பெரியவருக்கு தோலு வியாதிம்மா. ஏதோ சொரியாஸ"ன்னு சொல்லுவாக.

"சொரையாஸிஸ்னு ஒரு சரும வியாதி உண்டு."

"அதுதாம் போல அங்கங்க திட்டு திட்டா இருக்கும். அரிச்செடுக்கும் போல. சதா சொரிஞ்சுட்டேயிருப்பாரு. செதிளு செதிளா உதிரும். அதிலேயும் மனஞ் சங்கடப்பட்டா ரொம்ப பரவிரும். தவிச்சுப் போவாரு ஐயா."

"அதனாலத்தான் பெரியப்பா கல்யாணம் செய்துக் கலியோ?"

"டாக்டருங்க இந்த நோயி பரவாதுன்னு சொல்லியும் ஐயாவுக்கு பயம். மீனு செதுளு கணக்கா புழங்கின இடமெல்லாம் உதிந்து கிடக்கேன்னு தானே தினசரி டெட்டாலு போட்டு துடைச்செடுப்பாரு. அது பரம்பறையா வர்றதுன்னு தெரிஞ்சதும் 'எங்காத்து பட்டாக்கூட தம்பிப் பொண்ணுக்கு மறைஞ்சு கிடக்கற வியாதி 'பக்'குனு படர்ந்திரும்'னு ஒரு தடவைச் சொல்லிக் கேட்டிருக்கேன்."

ரம்யா நெகிழ்ந்தாள்.

ஆக பெரியப்பா ஒதுங்கி நின்ற காரணம் இதுதானா?



## 14

"உங்கப்பா இறந்ததுக்கு பிறகு ஒரேத் தம்பியும் போன துக்கத்துல அரிப்பு சாஸ்தியாயி.. உடனே கிளம்பி வந்துட்டாரு.. யாரு கூடவே சாஸ்தி பழகறதில்ல. எப்பவும் கோட்டு. சூட்டுதான் வியாதி தெரியாதிருக்கன்னு.."

"அப்ப ராஜேந்திரன் எப்படி இங்கேத் தங்கினார்?"

"அதுதானுங்களே ஆச்சரியம். தம்பி அருமையாப் பேசிப் பழகிட்டாக. இந்த வியாதி பத்தி நிறைய படிச்சுச் சொல்லி ஐயா பயத்தைக் குறைச்சுட்டாக. இது பரவாதுங்கரப்ப ஏன் நீங்க ஒதுங்கணும்னு விடாம வந்து போவ இருந்தாக. சித்தா மருந்தெல்லாம் வாங்கித் தர பெரியவருக்குக் கொஞ்சம் குணம் தெரிஞ்சது. அந்த சமயந்தான் உங்களப் பத்திக் கூடப் பேச்செடுப்பாக.."

"எங்கம்மாவுக்குக் கூட இது தெரியாது போலியே வர்ணம். தெரிஞ்சாத் சொல்லியிருப்பாங்க."

"பெரியவருதான் குன்னிக் குறுகிக் கிடந்தாங்களேம்மா. இது இப்படின்னு நாமச் சொன்னாத்தானே யாருக்கும் விவரந் தெரியும்."

உண்மை. மனதுக்குள்ளே போட்டு மறுகுபவர்களுக்கு நோய்தான் மிஞ்சும்.

'பாடப்பாட ராகம்.

மூட மூட ரோகம்' என்றிருக்கிறதே.

பெரியப்பா மீது மேலும் பாசம் சுரந்தது.

அவரது மறுகல் புரிந்து உதவிய ராஜேந்திரன் மீதும் புது மதிப்பு வந்தது.

"என்ன மூலை பக்கமாப் வந்துட்டோம். ஏதும் காணலை?"

"நாலு செங்கலு நட்டு வச்சிருக்கதுதாம்மா சமாதி. வருஷங்க கழியவும் எடுத்துக் காட்டணும்னாரு சின்னய்யா."

இருமருங்கும் பவளமல்லி மரம் போல வளர்ந்து நின்றதை வாகான இடமாய்த்தான் தேர்ந்தெடுத்திருக்கிறான்.

காற்று பவளமல்லியின் மணத்தை சுமந்திருந்தது.

கொண்டு போயிருந்த மலர் செண்டை மண்டியிட்டு வைத்தாள். சுற்றிலும் சுத்தமாகவே இருந்தது பவளமல்லி சிதறல்களைத் தவிர.

ஏதோ நினைவுகள் மூண்ட அப்படியே அமர்ந்திருந்தாள்.

"பாலு கறக்கற நேரமாச்சும்மா. போவலாமா?"

"நீங்க போங்க வர்ணம். நா பத்து நிமிஷம் இருந்துட்டு வரேன்."

"தனியா.. பரவாயீங்களா?"

"பத்து நிமிஷ நடையிலதான் வீடு...?"

"சரிங்கம்மா."

மதியமும் மாலையும் முயங்கும் நேரம் அலாதியாய் மயக்கியது. சூரியன் உக்கிரம் தணிந்திருந்தான். அந்த உற்சாகத்தில் ஊஞ்சலாடியது. தென்றல். அழுத்தமான மணம் பரப்பிய மலர்கள் முத்தும் பவளமும் கலந்து கட்டிய கம்மல்கள் போல ஆங்காங்கே கிடந்தன.

ஆழ்ந்த அமைதி வேறு.

தன் சிந்தனைகளில் ஊறியவளை அவன் குரல் கலைத்தது.

"என்ன இப்பவாவது பெரியப்பா கூட இருக்கலாமேன்று நல்லவண்ணமா?"



திருப்பாமலே புரிந்தது. இந்த நக்கல் பேச்சு ராஜேந்திரனிடமிருந்து மட்டும்தானே வரும்.

ஏனோ இன்று பதிலடிக்கத் தோன்றவில்லை.

அவன் நக்கலில் உண்மை இல்லாமலும் இல்லையே.

"இத்தனைச் சொத்துள்ளவர்றது தெரிஞ்சிருந்தா முன்னமே வந்திருப்பே இல்லையா ரம்யா?"

இப்போது குரலில் சீண்டல் குறைந்து கசப்பிருந்தது.

"நினைச்சபடியெல்லாம் பேச வேணாம்."

"சொத்து உன் கையிலேங்கறது தெரிஞ்ச உடனேயே வந்திட்டே.. அதனால நினைக்க, கேட்க நேர்ந்தது..."

பொறுக்கி சேர்த்திருந்த பவளமல்லிகளையே பார்த்திருந்தாள்.

"ஒன்னு எனக்குப் புரியலை.. மித்ததோடு பொருத்தலை.."

என்ன என்பதாய் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

சிவப்பு கருநீலமுமான டீ-ஷர்ட்டில் வெகு கவர்ச்சியாய் தெரிந்தான். காற்று கலைத்த கேசம் அவனை வெகு இளையவனாக்கிக் காட்டியது.

"வந்த நீ அத்தனையையும் விற்றுத் தொலைச்சுட்டு கிளம்பிடுவேன்னு நினைச்சேன். ஆக பெரியவர் நினைச்சது சரி."

ஆவலாய் கவனித்தாள்.

ஒரு வழியாய் இப்போதுதான் வாய் திறக்கிறான்.

"ரம்யா வந்து பார்க்கட்டும். பார்த்து முடிவெடுக்கட்டும்னார்."

"இல்லைன்னா இத்தனையையும் நீங்களே வாங்கியிருப்பீங்க."

"எனக்கு ஆட்சேபணையில்லை. அதுக்காக ஆசையில் பறக்கவுமில்லை. பெரியவர் இப்படி 'சட்டு'னு இறந்திடுவார்னு

யாரும் எதிர்பார்க்காதது. ஆனா அவர் மனசிலே அப்படி பட்டிடுச்சு. அப்ப உன்னைப் பற்றியும் பேசினார்."

"என்ன சொன்னாங்க..?"

"அப்பா இல்லாத உன்னைக் கூடுதலாய் கவனிச்சிருக்கணு மேங்கற கவலை. குடும்பத்துக்கு ஒரே வாரிச நீதானே. ஆக அவர் உடம்பு கொஞ்சம் தேறினதும் உன்னை வரச் சொல்லலாமேன்னு சொன்னேன்..."

"ஓ... அது... நீங்க... உங்க..." தடுமாறினாள்.

"என் 'ஐடியா' தான் முட்டாள்தனமான 'ஐடியா'. ஏன்னா நீ அவர் அழைச்சதும் ஓடி வருவேன்னு தப்பா கணிச்சுட்டேன்."

'அந்த அழைப்பை என்னை எட்டவே இல்லை' என்று சொல்ல ரம்யாவால் முடியவில்லை.

அப்படிச் சொன்னால் அது சித்தி மீது புகார் போலாகி விடுமே! சித்தியை விட்டுத்தர மனமில்லை.

ஆக ராஜேந்திரன் பெரியப்பாவின் மனதிற்கு தைரியமூட்டி இவளை வரவழைக்கச் செய்திருக்கிறான். ஆனால் சித்தி அப்போதிருந்த மனநிலையில் உறவைப் புதுப்பிக்கும் எண்ணமின்றி விட்டு விட்டாள்.

இப்போது அதைத் தன் குற்றமாக எண்ணுகிறான்.

பதிலுக்கு பதிலடிப்பவள் மௌனமாய் விலகி நடப்பதைக் குழப்பத்துடன் பார்த்திருந்தான் ராஜேந்திரன்.

மும்பை சிநேகிதிகளுக்குக் கடிதங்கள் எழுதி ஒட்டிக் கொண்டிருந்த போது போன் அழைத்தது.

இத்தனை ஆண்டுகளாய் இல்லாத சாதனம் வீடு வந்ததில் வர்ணத்திற்கு ஒரே ஆனந்தம். டெலிபோன் கிணுகிணுக்கையில் ஓடி வந்து வாயெல்லாம் பல்லாய் எட்டிப் பார்ப்பாள்.

"எடுங்களேன் வர்ணம்."



என்றால், "அச்சச்ச... எடுத்து என்னாங்கறது? வாய் குளறுதுங்கம்மா" என்று வரும் ஒரு வெட்கச் சிரிப்பு!

இந்த அளவு தொடர்பைக் கூட வெளியுலகோடு பெரியப்பா வைக்கப் பிரியப்படவில்லை போலும்.

கருநீல போனை எடுத்தாள்.

தூங்கியதும் அடங்கும் கைக்குழந்தை போலானது அது.

"ஹலோ?"

"ஹலோ ரம்யா. ராதிகா பேசறேன்."

வழக்கமான நலம் விசாரிப்புகளுக்குப் பிறகு அழைப்பு வந்தது.

"ரொம்ப நாளாச்சு பார்த்து இன்னைக்கு வாயேன். லஞ்ச் சாப்பிட்டுட்டுப் போலாம். புது ரெசிப்பி ஒன்று செய்தேன். நல்லா வந்திருக்கு."

"ஓ.கே. வர்றேன்." ரம்யாவுக்கும் மாறுதல் தேவை என்றிருந்தது.

ராதிகா வீட்டில் விருந்து முடிந்து வீட்டிற்கு திரும்பினாள். உதறியடித்தாலும் இவளை வீடு கொண்டு சேர்த்து விட்டது அவளது வாகனம். சாவியை வழக்கமான கொக்கியில் மாட்டியவளை நாய்கள் குதூகலத்துடன் வரவேற்றன.

ராஜேந்திரன் மூலையிலிருந்த ஒற்றை ஸோபாவில் அமர்ந்திருந்ததை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

கண்டு கொள்ளாதது போல நழுவ முடிவெடுத்த நேரம் பேசினான்.

"இப்பவும் பாஸ்கர், ராதிகாவைப் போய் பார்த்துட் வர்றாப்போல?"

குரல் குத்தியது.

திரும்பி முழுக்க அவன் முகம் பார்த்தாள்.

"என்னை யாரும் வேவு பார்க்க வேணாம். அது எனக்குப் பிடிக்காது."

"இது கிராமம். உன் தவளை வாகனத்திலே தத்தி தத்தி நீ போறதை ஊர் மொத்தமும் பார்க்கும்."

"உடனே உங்ககிட்ட ஓடி வந்து தகவல் தந்தா சன்மானமும் உண்டோ?"

"உன் நல்லதுக்குச் சொல்றேன். தர்பூசணியை இத்தனைக் கவனமாய் வளர்க்கிற பெண். தன்னை அதிபத்திரமாய் கவனிச்சுக்க வேணாமா?"

"அதுவே சாட்சி. நா அத்தனை முட்டாள் இல்லைங்கறதுக்கு. போட்ட பயிரைக் காப்பாத்தரவளுக்குத் தன்னைப் பார்த்துக்கத் தெரியாதா? உங்க... வாழை ரொம்ப நாசமாயிடுச்சு போல? போய் பார்த்தேன். பாதிக்குப் பாதி கூட பிழைக்கலை. லாபம் வராது. ஆனா கையையும் கடிக்காது."

வழக்கமாய் கம்பீரமும், கன்னக்குழி தெறிக்கும் கவர்ச்சியான சிரிப்பும் காட்டும் அவன் முகம் இன்று கறுத்து இறுகியிருந்தது.

அளவுக்கு மீறி மட்டந் தட்டி விட்டோமோ?

"தோட்டம் மட்டுமில்லை ரம்யா. வீடும் நீ வந்த பிறகு செழிப்பா தெரியுது. சின்ன கீறலை, ஒழுகலையும் நான் சரி செய்தேன்... ஆனா அப்ப இது வீடு மாதிரி இல்லை.."

"பொம்பளை இல்லைன்னா வெறும் கட்டிடந்தான். இருந்தால், இல்லம்!"

சற்று மென்மையாக பேச முயன்றாள்.

"முழு உண்மை! தவிர வெளி வேலையிலும் நீ திறமைசாலி தான். ஒத்துக்கறேன். இப்ப நான் சொல்ல வந்த விஷயம். நான் வாழற வீடு... இல்லை கட்டிடத்திற்குப் போகப் போறேன் ரம்யா."

இவள் விழிப்பதைப் பார்த்தவன் விளக்கினான்.



'அங்க பெண் யாருமில்லை. ஆக வெற்று கட்டிடம்தான். பார்த்து பேசி அட்வான்ஸ் தந்தாச்சு. சமையல் ஆளுக்கும் சொல்லி வச்சிருக்கேன். அமையற வரை நளன் பாகம்தான்."

இவள் நெஞ்செழும்பை யாரோ உருவியெடுத்துவிட்டாற் போலிருந்தது.

உடல் தொய்ந்து துவண்ட பிரமை.

"போ... எப்பப் போற?' என்ற ரீதியில் மிரட்டியவளுக்கு இந்த தகவல் வெற்றிக் களிப்பு தந்திருக்க வேண்டும். ஆனால் அப்படியில்லை.

'ஒழிஞ்சியா' என்று ஏன் எக்காளமிடத் தோன்றவில்லை? காய்ச்சல்காரியின் நாக்காய் ஏன் மனசு மரத்துக் கிடக்கிறது?

"சந்தோஷம்" இயந்திரத்தனமாய் சொன்னாள்.

"சந்தோஷப்படுவேன்னு தெரியும். ரெண்டு மாசத்துக்கு மேலே இதற்காகக் காத்திருந்தே இல்லையா?"

நாய்களைத் தடவும் சாக்கில் குனிந்தாள் கண்கள் ஏன் கலங்குகின்றன?

## 15

"என்ன வருத்தமா இருக்குதா?"

அவசரமான மறுப்பில் தலையாட்டினாள். 'ஏன்... எதுக்கு?"

"டிம், ஜின்னைப் பிடிக்குமே.... அதுகளைப் பிரியற வருத்தமில்லை?"

"எங்கப் போறீங்க."

"பக்கத்து ஊரிலே வீடு அமைஞ்சது. நீ ஷாப்பிங் போகும் போது வந்து இதுகளைப் பாத்துட்டுப் போலாம்."

"ம்ம்.. கண்டிப்பாக"

"மறுமாசம் தர்பூசணி விலை போயிடும். அப்புறம் மும்பை போவே இல்லையா?"

கேள்வி உலுக்கியது.

பக்கத்து ஊர் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. மும்பை ஆயிரம் மைலுக்கப்பால் சின்னப் பிரிவிற்கே குலையும் நெஞ்சம் நீண்டப் பிரிவை எப்படித் தாங்கும்? இவன் பிரிவு தன்னை ஏன் பாதிக்கின்றது?

"எட்.. எப்ப போறீங்க?"

"நாள் நட்சத்திரமெல்லாம் நமக்குக் கிடையாது. அடுத்த வாரம் ஏதோ ஒருநாள்.."

"அப்ப முதல் தர்பூசணியை ருசிக்க நீங்களும் இருக்க மாட்டீங்க."

"நீங்களும்னா?"

"சித்தி வருவாங்கன்னு நினைச்சேன். வரலை. எனக்கு வேண்டிய யாராவது இருக்கணுங்கற ஆசை.. இப்ப நீங்களும்."

அவன் பார்வை... 'நான் உனக்கு வேண்டியவளா பெண்ணே?' என்று குடைகிறதோ?

"சித்தி ஏன் வரலை?"

"அவங்க தீஸிஸ் முடியற தருவாயில இருக்குது. தவிர அவங்களுக்கு உதவற டாக்டர் கோபால் பற்றி அவங்க பேசறதைப் பார்த்தா அவ கல்யாணம் வரைப் போகக் கூடும்னு நினைக்கிறேன்.."

"ம்ம். க்ரேட்! மும்பையில எல்லாம் சகஜம்தான் போல."

"நாற்பது வரை கல்யாணம் செய்துக்காதவங்க அதன் பிறகும் பண்ணிக்கக்கூடாதா? கிராமத்தில அறுத்தே கட்டறாங்க.."

"ஆங்.. இந்தச் சீற்றமில்லாத ரம்யா புலியைப் பார்க்க சகிக்கலை. அதான் கொஞ்சம் சீண்டினேன்." சிரித்தான்.



கன்னத்தின் குழி 'படக்'கென சுழிந்தது.

"நீங்களும்தான் சிரிக்கலை.. இந்நேரம் வரை 'உம்'னு இருந்தீங்க.."

"வருத்தம்தான்.."

"தோட்டத்து வண்ணத்துப் பூச்சிகள் அனைத்தும் வயிற்றுக்குள் பறப்பது போலிருந்தது. இன்பமான இம்சை.

"ஏன்?"

"மன்னிக்கணும் ரம்யா. நல்லது நினைச்சுதான் வாழை போட்டேன். நீ சொன்னது போல ஒன்னுக்கு ஐஞ்சா லாபம் கண்டிருக்கணும். இல்லாமப் போச்சு."

ஆக வருத்தம் இந்தப் பிரிவில் இல்லை.

வண்ணத்துப் பூச்சிகள் ஓய்ந்து சரிந்தன.

"நா... நான் அப்படிப் பேசினதும் சரியில்லை ராஜ்."

பிறர் போல சுருக்கமாய் 'ராஜ்' என்று அழைத்து இயல்பாக வந்துவிட்டாலும் கூச்சமாய் இருந்தது.

"நிலம் பல சமயம் அள்ளித் தரும். சில சமயம் கிள்ளியும் விடும். மொத்தத்தில் பண்ணையைச் சீராய் பராமரிச்சிருக்கீங்க. எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல்... அதுக்கு நான் நன்றிதான் சொல்லணும்."

"பெரியவருக்காய் செய்தேன். தனியாய் இருந்தவர் மேல எனக்கு ஏனோ பிடித்தம் ஏற்பட்டிருச்சு.. நானும் அப்ப தனியாள் என்பதால போல.."

"உங்களுக்கு ஒரு அக்கா இருக்கிறதாய் சொன்னாங்க?"

சற்று ஆச்சரியமாய் பார்த்தவன்.

"அஞ்சு வருஷத்துக்கு ஒரு முறை இந்தியா வருவாங்க. போய் ரெண்டு வருஷந்தான் முடிஞ்சிருக்கு" குரலில் சற்று கசப்பிருந்தது.

"போர்... அடிச்சதுன்னா நீங்க இங்க வரலாம்."

"ம்ம்... அடுத்த வாரத்திலிருந்து உபத்திரவமேயில்லாம ராணியாய் இருப்ப..." என்ன சொல்வதென்று புரியாமல் மௌனமாயிருந்தாள்.

குழப்பமாய் பார்த்து நின்றவனை ஒதுக்கியவள் மாடிப்படிகளில் ஓடலானாள்.

வக்கீல்கள் இப்படி ஒரு 'தொளதொள' கோட் அவசியம் போட வேண்டுமா என்ன?

திருநீறும் குங்குமம் முகத்திற்குப் போதிய நிறம் சேர்க்காதது போல் வாய் நிறைய வெற்றிலையும் மென்று கொண்டிருந்தார் ராமானுஜம்.

குதப்பலை வெளியே துப்பிட்டு வந்தவர்.

"இப்படி கெட்டிக்காரப் பொண்ணா இருப்பேன்னு நினைக்கலம்மா... கேப்டன் ஸார் பார்த்து பழகியிருந்தா பெருமைப்பட்டிருப்பார்..." சிலாகித்தார்.

"உங்க குடும்ப விவகாரமெல்லாம் சரியாப் போச்சா?"

"வெக்கக் கேடு. ஊர் விவகாரமெல்லாம் நூல் நூலாய் பிரிச்சவச்சிடுவன். இங்க எம் பேச்சை ஒருத்தரும் கேக்கறதில்லை. ஆக முடிச்சு மேலும் இறுகின்டேப் போயிடுத்து. அதான்... சொன்ன தேதிக்கு நா வர முடியலை."

குரலைத் தணித்தார்.

"ராஜேந்திரன்னு ஒரு பையன் இங்க தங்கியிருந்தன். காப்டன் ஸாருக்கு ஸ்நேகம். 'உரியவா வரப்போறா நீ காலி செய்திடுண்டேன் கட் அன் ரைட்டா... அதாஞ் சொன்னேனே வீட்டிலதான் நா வெத்து வேட்டு... வெளியில அதிர்வேட்டு. பய டனே காலி பண்ணிட்டன்..."

ரம்யாவின் ஒரு தினுசான புன்னகையைப் பார்த்து தன் ரிப்பைச் சுருக்கினார்.



"என்ன... ஏதாவது ப்ராப்ளம் க்ரியேட் பண்ணினானா?"

"இல்லை... அவர் இங்கேதான் இருக்கார். இன்னும் ரெண்டு நாளிலே வேற வீட்டுக்குப் போறார்."

சற்றே விரிந்த உதடுகள் வழியே வெற்றிலைச் சாறு ஒழுக பரிதாபமாய் முழித்தார் வக்கீல்.

"யூ மீன்... ஹி லிவ்ஸ் ஹியர்?"

"வெரி மச்... அவர் இருந்து வர்ணம். அருளுக்கு சம்பளம் தந்து வீட்டுக்குத் தேவையான அரிசி பருப்பெல்லாம் வாங்கிப் போட்டிருக்கார்..."

"ஓ...?"

மேலும் வடிந்த வெற்றிலைச் சாறை உறிஞ்சி விழுங்கினார்.

"நீங்க வரச்சொல்லித்தான் வந்து இறங்கினேன். ஆனா அப்ப ராஜேந்திரன் இங்க இல்லைன்னா ரொம்ப சிரமப் பட்டிருப்பேன்..."

தன் வேலையில் மூழ்கி இவளை சுத்தமாய் மறந்து போன வக்கீலைக் குத்துவதற்காகவே ரம்யா இப்படிச் சொன்னாலும்... சொல்லும் போதே சொன்னதின் உண்மை உறைத்தது.

ஒரு ட்ரக் வந்து ராஜேந்திரனது பொருட்களை ஏற்றிச் சென்றது. நாய்கள் விவரம் புரியாமல் குரைத்துத் தீர்த்தன.

ரம்யாவிற்கு தொண்டையில் ஏதோ அடைத்தாற் போலிருக்க, அடிக்கடி செருமிக் கொண்டாள்.

அன்றிரவு அவளைத் தூக்கம் நெருங்கவில்லை.

இத்தனைப் பெரிய வீட்டில் நாளையிலிருந்து தான் மட்டுமே என்ற நினைப்பே மருட்டியது. இனி எலி சுரண்டினாலும் பயம் முட்டும்.

எந்தத் திருட்டுப் பயலோ என்ற கிலியில் இரவு முழுக்க விழித்துக் கிடக்க நேரம். ஒரு ஜோடி நாய்களை உடனடியாக

தேடி வாங்க வேண்டும். இல்லையேல் தனிமை பிய்த்து தின்று விடும்.

வாழ்நாள் முழுக்க இதே போன்ற தனிமையில் கழித்த பெரியப்பாவை நினைத்தவள் பிடி சாம்பலாய் ஒரு மூலையில் பவளமல்லி மரத்தடியில் கிடப்பது வேறு.

உயிரோடு, உபாதைத் தரும் உடலோடு தனித்திருந்தது கொடுமைதான்... கண்ணீர் வழிய படுத்திருந்தாள்.

## 16

**தி**ண்டுக்கல் போய் கையெழுத்து போட்டு வங்கி வேலைகளை முடிப்பதற்கே ஒரு முழு நாள் போனது.

இப்போது பல லட்சம் ரூபாய்களுக்கும் தான் அதிபதி என்பதை ரம்யாவால் நம்ப முடியவில்லை.

ஆனந்தமாய் துள்ளுவதை விட மனம் பொறுப்பில் பிரமித்திருந்தது. இது தெரிந்துதான் பாஸ்கர் இவளை ஏமாற்ற முயன்றிருக்கிறான். ராதிகாவின் சிநேகம் கூட பணத்திற்காகத் தானோ?

செல்வம் கூடவே சந்தேகத்தையும் அழைத்து வந்து விடுகிறது!

"எல்லாம் செவ்வனே முடிஞ்சதும்மா..."

ஃபேன் அடியில் கோட்டைக் கழற்றிவிட்டு அமர்ந்தார் வக்கீல்.

"நன்றி ஸார். ராஜீக்கும் நன்றி சொல்லணும். இது முடியற வரை தன் வீட்டுக்குப் பால் காய்ச்சறதைத் தள்ளிப் போட்டாரே.."

"பின்னே... நீதானேம்மா போய் காய்ச்சித் தரணும்? அதான் ஃப்ரீ ஆகக் காத்துண்டிருக்கார்."



இவளுக்குப் பெருமையாய் இருந்தது.

ராதிகாவை விட்டுவிட்டு தன்னைப் பால் காய்ச்சித் தர அழைத்ததில் ஒரு அசட்டு ஜம்பம் கூட.

அதிலும் ராஜேந்திரன் ஒரு பட்டுப் புடவையை நீட்டிய போது அசந்து போனாள்.

அம்மாவின் கல்யாணப் பட்டு மட்டும் இன்னும் இவள் பெட்டியில் உண்டு. ஓரம் நைந்து ஜரிகை மங்கிய பட்டு. மற்றபடி மும்பையில் பட்டு கட்டும் வைபவங்கள் அமையாததால், வாங்கவும் நேர்ந்ததில்லை.

அரக்கில் அடுக்கடுக்காய் தங்கக் காசுகளை அடுக்கினாற் போன்ற கரையிட்ட பட்டுச் சேலை.

"இதிலேயே ரவிக்கை இருக்காம். வெட்டித் தச்சுக்கலாம்னார் ஜவுளிக்கடையிலே."

"ஓ... தாங்க்ஸ்.. ஆனா எனக்கெதுக்கு ராஜ்?"

"கௌரவிக்க... சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள. மற்றபடி வர்ணம்தான் பால் காய்ச்சியிருந்திருக்கணும். கேப்டனுக்கு மகள்னனதும் எனக்கும் நீ உறவு போல ஒரு உணர்வு... அழைப்பை ஏத்துக்கிட்டதில சந்தோஷம் ரம்யா.. இதையும் கட்டிட்டு வந்திடு."

வக்கீல் போகும்போது மறுபடி கேட்டார்.

"தனியா இங்க இருந்திடுவியாம்மா?"

"பழகிடும் - பொறுப்புகளும் இருக்கும்."

"நல்லவேளை, தட்டிக் கழிக்கக் கூடாதில்லை?"

"உங்க சித்தி என்ன சொல்றாங்க?"

"முடிவை எங்கிட்ட விட்டுட்டாங்க."

"இல்ல... முன்னே உன்னே இங்க அனுப்ப முடியாதுன்னாங்க.."

"அது- அப்போ.."

"உன் விருப்பம் போலாகட்டும்."

வக்கீல் எழுந்து கொண்டார். அவர் வேலை முடிந்தது. கிடைத்ததை வைத்து இவள் என்ன செய்யப் போகிறாள் என்பது அவர் தலைவலி இல்லைதான்.

தையல் கடை பற்றி ஏதும் தெரியாததால் பட்டுத் துணியுடன் ராதிகாவிடம் தான் ஓட வேண்டியிருந்தது.

"பிரமாதமான கலர், டிசைன் எங்க வாங்கின ரம்யா?"

புரட்டி பார்த்தபடி கேட்டாள்.

"தெரியலை.. இது ராஜேந்திரன் வாங்கித் தந்தார்."

மறுகணம் ராதிகாவின் முகம் சற்று நிறம் தப்பியது.

"அவரே போய் வாங்கினாரா.. எங்க?"

"தெரியலை அவர் வீட்டுல பால் காய்ச்சித் தர அன்பளிப்பு போல.."

"பக்கத்தூரு தான் போகணும். அதுவும் ஒரே நாளில யார் தைச்சுத் தருவா?" சுரத்தில்லாமல் கூட்டிப் போனாள்.

தையல்காரனின் கண்களில் ரம்யாவிற்கு தயவு கிடைக்க, இவள் வெட்டி உதவ, இரண்டே மணி நேரத்தில் ரவிக்கை தயாராகி விட்டது.

புதுப்பட்டு கட்டும் உல்லாசத்தை மிக ரசித்தாள்.

வலதுகை நிறைய அரக்கு வர்ண கண்ணாடி வளையல்களும், நீளப் பின்னலில் வாச நிலாவாக ஜாதிமல்லிக் கட்டும்தான் உபரி அலங்காரம். இருந்த சில நகைகளும் பம்பையில் இருந்தன.

ஆனால் அந்த எளிமையே அவள் அழகை எடுத்துக் காட்டியது.

தேன் மெழுகில் வார்த்து நிறுத்தியது போலிருந்த உடலின் அழகைப் பிரதானமாக்கியது.



பண்ணைத் தொழிலாளிகள் அத்தனைப் பேரும் அழைக்கப்பட்டிருந்ததால் ராஜேந்திரன் ஒரு வேன் அனுப்பியிருந்தான். அருளும் வர்ணமும் 'புஸுபுஸு'வென்ற புது உடைகளில் அட்டகாசமாய் தெரிந்தனர்.

போய் இறங்க, அங்கிருந்தவர்களின் பார்வையும் ரம்யாவையே மொய்த்ததும். "எம்புட்டு அம்சமா இருக்கீம்மா.. வீட்டுக்குப் போனதும் சுத்திப் போடணும்" வர்ணம் பூரித்துப் பாராட்டினாள்.

சந்தனத்தை குழைத்து கதவு, நிலைப் படிகளில் பூசிய வர்ணம், குங்குமச் சிமிழை ரம்யா கையில் தந்து பொட்டிடச் செய்தாள்.

ஆளாளுக்கு ஒன்றை இழுத்துப் போட்டுச் செய்ய, ரம்யா தான் எடுத்து வந்திருந்த மாவிலைத் தோரணத்தைக் கட்டினாள்.

"ரொம்ப அழகாயிருக்கு.."

"மங்களகரமாயிருக்கணும் இல்லியா.. அதான்."

"பட்டுச் சேலை அதுவுந்தான்.."

"ஓ.. ஓ.." தடுமாறி புன்னகைத்தாள். "தாங்க்ஸ்.. இப்படி ஒரு பரிசை எதிர்பார்க்கலை.. குடும்பத்துக்குள்ளே இப்படி புடவை தர்ற சம்பிரதாயம் உண்டுன்னு கேள்விப்பட்டிருக்கேன்... அதனால பெருமையாயிருக்குது."

"ஒரே கூரையின் கீழிருந்த உறவுதான்."

சிரிக்க, அவன் கன்னம் ஆழக் குழிந்தது. ஒரு பட்டாணியை உருட்டிவிட, அதில் கச்சிதமாய் பொருந்தி நிற்கும்.

அவள் பார்வை பதிந்த இடத்தைக் கவனித்தவன் மேலும் சிரிக்க, இவள் வெட்கத்துடன் நழுவினாள்.

மனம் உல்லாசமாய் சிறகடித்தது. இப்பரிசினால் இதுவரை அவர்களிடையே படர்ந்த கசப்பெல்லாம் துடைக்கப்பட்ட ஆசுவாசம். இடம் மாறினாலும் மனங்கள் மேலும் ஒன்றிவிட்ட இறுமாப்பு.

வர்ணம். வேண்டியதை செய்துவிட்டு.

'அடுப்பைப் பத்த வைங்கம்மா' என்று தீப்பெட்டியை நீட்ட பாங்காய் பற்ற வைத்தாள்.

"எல்லோருக்கும் பால் தர்ற போதுமான டம்ளர்கள் இருக்குதா வர்ணம்?"

"ஆறுதாம்மா இருக்குது. இவரு பக்கத்து டீக்கடையில் பத்து க்ளாஸ் வாங்கிட்டு வரப் போயிருக்காரு."

பால் பதமாய் பொங்கியது.

இனிப்பு சேர்த்து நுரைக்க ஆற்றினார்கள்.

"டீக்கடை க்ளாஸை ஒரு அலக அலசிடலாம்" என்று பின்புறம் போன ரம்யா, தன் பெயர் சொல்லப்படுவது கேட்டு நின்றாள்.

"மலாவட்சுமியாட்டம் பாலு காச்சன பொண்ணுதானே?"

"ஆமடா.. அவுக பேருதான் ரம்யா."

"அதான் செட்டியாரு விக்குதேன்னும் சொல்லியும் சின்னவரு இந்த வூட்டை வாடகைக்கு எடுத்துக் கிட்டாராக்கும்?"

"பின்னே? ரெண்டு தென்னம்பிள்ளை கூட நட இடமில்லை. ராசப்படியத் தாண்டுனா ரோடுதான். ராசா மாதிரி இருக்க வேண்டியவரு இங்க இருப்பாரா?"

"அப்ப பெரியவரு வீட்டு மேலத்தான் கண்ணுங்கற?"

"அதுக்காக பொண்ணு மேலியும் கண்ணு வச்சாச்சு.. கையும் பிடிக்கிறதுக்கு அச்சாரந்தான் புடவை."

"கட்டிக்கறவன் தர்ற அச்சாரந்தான்."

"ஒரே சேலையில மொத்த சொத்தையும் வீட்டோட சேத்து வச்சுபுட்டாரு.. சின்னவரு சாமர்த்தியமுல்ல..?"

இவள் உடம்பு சில்லிட்டது.



"என்னம்மா க்ளாஸோட இப்படி நிக்குதீங்க? தாங்க இப்ப" ட்ரேயை வர்ணம் வாங்கி நகர்ந்தது கூட உறைக்காமல் நின்றாள்.

சுற்றியிருந்த சேலையை உரித்து எறிந்து விட்டாலென்ன என்ற உக்ரம் பிடித்தாட்டியது.

யார் பேசினார்கள் என்று தெரியாவிட்டாலும் ஊர் பேச்சு இப்படித்தான் என்பது புரிந்து விட்டது.

நெருப்பில்லாமல் ஏது புகை?

புடவை பரிசளித்தது முதற்கொண்டு தெரிந்தே பேசுகிறார்கள்.

ஆக சொத்து மீதுள்ள மோகத்தில்தான் குழைகிறான். வெளியே வீடெடுத்து போவது கூட பாவ்லாதான். நான் யோக்யன் பார் என்ற நாடகந்தான்.

விடுவிடுவென்று நடந்தாள்.

வர்ணம் பால் டம்ளரோடு தேடியபோது அவள் அங்கில்லை!

## 17

**சா**லைக் கொள்ளாத போக்குவரத்தில் தான் மீனாய் துழாவி தேற முடியாதென்பது ரம்யாவிற்கு தெரிந்து விட்டது.

ராதிகா சொன்னது போல இங்கிருக்கும் பெட்ரோல் பாங்க் ஒன்றில் தன் டூவீலரை நிறுத்திப் போவதுதான் புத்திசாலித்தனம் என்பது புரிய, சற்று பெரிதாய் தெரிந்த பங்க்கினுள் போய் பெட்ரோல் நிரப்பியவள் நயந்து பேசி வேண்டியதைச் சாதித்தும் கொண்டாள்.

ஆட்டோ ஒன்றில் ஏறி அமர்ந்த பிறகுதான் அக்கம் பக்கம் பார்க்க முடிந்தது.

அவர் எதிர்பார்த்த சகாய விலையில் இல்லாவிட்டாலும் எதிர்பார்த்த பொருட்கள் அனைத்தும் கிடைக்க, ஆர்வமாய் சுற்றி வந்தாள். திரைச்சீலைகளுக்கு பல மீட்டர் துணிகள் கிழித்து சுற்றப்பட்டன. தரைக் கம்பளங்களும் அங்கேயே வேறொரு தளத்தில் அமைந்துவிட, வாங்கிக் கொண்டாள்.

"காரிலே ஏத்திட்டாங்கம்மா?"

"வெளியே ஆட்டோ நிக்கிது" நம்பர் குறிப்பிட்டாள்.

பல கடைகள் ஏறி இறங்கி திண்டாடாமல் வேலை முடிந்து விட்டது. கடைச் சிப்பந்தியிடம்.

"டெரகோட்டா ஜாடி. தொட்டியெல்லாம் எங்க கிடைக்கும்?" விசாரித்தாள்.

"ஹோட்டல் மயூரில இப்ப அந்தக் கண்காட்சி நடக்குதும்மா."

"ட்ரைவர் உனக்கந்த இடம் தெரியுமா?"

"பெரும்புள்ளிங்க வந்து போற இடமுங்க. ஏறங்க போலாம்."

ஏழாவது தளத்திற்குப் பதிலாக எட்டாவது போய் அவள் இறங்கியது திறந்த வெளி உணவகம்.

மேலிருந்து பார்க்க மதுரை அம்மன் கோயிலின் நான்கு கோபுரங்களும் மிக கம்பீரமாய் தெரிந்தன. இத்தனை உயரத்திலிருந்து நகரின் தூசு, குப்பை, ஏதும் தென்படவில்லை. தென்னை மரங்கள், கோபுரங்கள்; செப்பு போன்ற வீடுகள், எறும்பாய் ஊறும் மனிதர்கள் என்று ஒரு மாயத் தோற்றம்.

மனிதர்களையும் கூட நெருங்கிப் பழகத்தானே அவர்களது குறைகள் புலனாகின்றன. எட்ட நின்றால் பல உறவுகள் சுமுகந்தான். ராஜேந்திரன் அழைத்ததும் அவள் அந்தப் புடவையைக் கட்டிக் கொண்டு வாயெல்லாம் பல்லாக அவன் வீட்டிற்கு மாவிலைத் தோரணம் கட்ட ஓடியது தப்பு.

உலகம் அறியாத பேதைத்தனம். அனுபவப்பட்டு அடிபட்டுத்தானே பல விஷயங்களைக் கற்று தேறுகிறோம்.



அன்று ராஜேந்திரன் வீட்டிலிருந்து சொல்லாமல் வெளியேறியவள் டாக்ஸி பிடித்து வீடு வந்து சேர்ந்தால் வீடு பூட்டிக் கிடந்தது. சாவி, வீட்டைப் பூட்டிய அருளிடம் இருக்கும்.

தன் அவசர புத்தியை நொந்தபடி தாழ்வாரத்தில் கிடந்த நாற்காலியில் சரிந்தாள். புடவையை அவிழ்த்தெறிய முடியாத ஆத்திரம் வேறு. கண்மூடிக் கிடந்த பதினைந்தாம் நிமிடம் ராஜேந்திரனின் எஸ்டீம் சன்ன உறுமலுடன் வந்து நின்றது.

இறங்கி கதவை அடைந்த வேகத்தில் அவனது கோபமும் புரிந்தது.

நிமிராமல் இறுகிக் கிடந்தாள்.

இவள் எதிரே வந்து நின்றவனின் சற்றே அகற்றி கால்களும் பாக்கெட்டுக்குள் திணித்த கைகளும் தெரிந்தன.

"என்னாச்சு?"

"__________"

"என்னாச்சு ரம்யா?"

"பால் காய்ச்சச் சொன்னீங்க.. செய்துட்டு வந்துட்டேன்"

"ஓ? அப்ப காய்ச்சினதை ஒரு வாய் குடிக்கத் தனியா அழைப்பு தரணும். அதுக்கப்புறம் சாப்பிட்டுப் போக வேறொரு அழைப்பா?"

மௌனமாய் வெறித்தாள்.

"அழைச்சவங்ககிட்ட சொல்லிட்டு போகணுங்கறதைக் கூட சொல்லித் தரணுமா?"

"அத்தனைப் பேரை அழைச்சிட்டு. இப்ப இங்க ஏன் ஓடி வரணும்?"

"தப்பு தான். திடீர்னு உன்னைக் காணலைன்னதும் பதறி ஓடி வந்தேன். இங்க அம்மா 'ஹாய்யா' உட்கார்ந்திருக்கதைப் பார்த்ததும்தான் விஷயம் வேறெங்கறது புரியுது.."

"எல்லா விஷயங்களையும் உங்ககிட்ட சொல்லணும்னு இல்லை. உங்க நினைப்பு.. திட்டமெல்லாம் எனக்கும் தெரிஞ்சிடுச்சு.. அவ்வளவுதான்."

நிமிர்ந்து பார்க்கத் திராணியில்லை.

ஆனால் அவன் முகம் குழப்பமும் ஆத்திரமுமாயும் இருக்கும் என்பது புரிந்தது. இப்படி தன் குட்டு அம்பலமாகும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டான்.

இவள் வந்த புதிதில் சற்று அடாவடித்தனம் காட்டினால் மிரண்டு ஓடிவிடுவாள் என்று கணித்திருப்பான்.

நேர்மாறாக இவள் தோட்டம், வீடு என்று வேலையில் இறங்கிவிட, இவளை வளைத்துப் போட்டால் செலவின்றி பண்ணையோடு பங்களா என்று வேறு கணக்குப் போட ஆரம்பித்திருப்பான்.

ஆக இப்போது விலகுவது போல விலகி, பிறகு ஒரேயடியாய் ஒட்டிக் கொள்ளலாம் என்ற கள்ளத்திட்டம்.

தன் மனமும் அவனிடம் எப்படி ஓடிப் போய் ஈஷ ஆரம்பித்திருந்தது. திரும்பி நடந்த கால்களின் வேகத்தில் ரௌத்திரம் தெரிந்தது. அதன் பிறகு ராஜேந்திரன் இவளைத் தேடி வரவில்லை.

குட்டுதான் வெளியாகி விட்டதே!

ஆனால் நாட்கள் வெறிச்சிட்டன. அசாத்திய அமைதி அச்சுறுத்தியது. வாசல் மணி ஒலித்தால் 'திடுக்'கென்றது.

இதுவரை அம்மணி ஒலித்து அவள் கேட்டதில்லை.

அந்நிய வாடை பட்டதுமே நாய்கள் குரைக்க ஆரம்பித்து விட, வர்ணம் விசாரிக்க வாசலுக்குப் போய்விடுவாள்.

வர்ணத்தின் முகம் கூட சுரத்தாயில்லை.

ஆனால் எதையும் வாய் திறந்து சொல்ல பயந்து கிடந்தாள்.



வீட்டுச் சூழல் மூச்சை அடக்கவேதான் இன்று மதுரை கிளம்பினாள். அதுவும் தன் 'லொடலொட' வாகனத்திலேயே கிளம்பி விட்டாள்.

போகவா.. வேண்டாமா என்ற தயக்கத்தில் கிளம்ப நேரமாகி விட்டது. இனி அறுப்பு வேலை ஆரம்பமாகி விட்டால் கிளம்ப முடியாது.

வேற்றூர் பார்ப்பது மனதிற்கு இதமாயிருந்தது.

மாலைக்கட்டு போல நெருங்கத் தொடுத்த மதுரை மல்லிகை மயக்க, ஒரு பந்து வாங்கினாள். ஹோட்டலில் தலை சீவி அதைச் சூடிய போது அதன் மணம் ஏதோ ஒரு மலர்ச்சி தந்தது.

நினைவுகளிலிருந்து மீண்டவளை மறுபடி கீழே விரிந்து கிடந்த மதுரை மாநகர் ஈர்த்தது.

"தாங்க்ஸ் ராஜ்.. நீங்க சுற்றிக் காட்டியதால்தான் நகரை நாங்கள் இவ்வளவு ரசிக்க முடிந்தது." ஒரு ஆங்கிலேய குரல் சொல்ல,

"நானும் உங்களுக்கு நன்றி சொல்லணும். ஒரு நாளை அருமையான துணையோடு கழிக்க நேர்ந்ததற்கு."

பதிலளித்த குரல் இவளை இடித்தது.

இவன்... ராஜேந்திரன் எங்கே இங்கே வந்தான்?

மெள்ள வலப்புறமாய் நகர்ந்தவள் தூணுக்கு அப்பால் நோட்டமிட்டாள். ஒரு வெள்ளைக்கார ஜோடி. அவர்களைப் பார்த்து இவளுக்கு முதுகு காட்டியபடி ராஜேந்திரன் தானா? எப்போதும் தரமான ஆடையில் இருப்பவன் என்றாலும் இப்போதிருந்தது கருநீல ஸூட்டில், கை விளிம்பில் சட்டையில் இள நீலம் தெரிந்தது. கட்டியிருக்கும் 'டை' என்ன நிறமாயிருக்கும்?

தறிகெட்ட சிந்தனையைத் தட்டி அடக்கினாள்.

அவன் உள்ளான நிறம், நோக்கம் என்னவென்று தெரிந்த பிறகு உடையின் நிறம் என்னவாயிருந்தால் என்ன?

படியிறங்கி கண்காட்சிக்குள் நுழைந்தான்.

கருத்து வேறெங்கோ கிடந்தது.

தூக்கிப் போக முடிந்த அளவிலிருந்த இரு சட்டிகளை மட்டும் வாங்கிக் கொண்டு கிளம்பினாள். "நான் ஏறின இடத்துக்கே போப்பா."

ஏறி அமர்ந்தவளுக்கு ஆயாசம் மிகுந்தது. கண்களை மூடினாள். மறக்க நினைத்தவனையே மீண்டும் பார்த்த சலிப்பு. சஞ்சலம்.

'டங்'கென்று ஏதோ மோதிய சத்தத்தில் விதிர்த்து விழித்தாள்.

"என்ன... என்னாச்சு?"

"ஐயோ... ஏதோ ஊர்வலம்மா... கல்லெறிஞ்சு ரவுசு பண்றாங்க... இனி போவ முடியாது. இறங்கிடுங்க..."

அதற்குள் மற்றொரு கல் ஆட்டோவில் மோதிப் பறந்தது.

## 18

"**சா**திக் கலவரமாம்."

"நத்தம் ரோடுல கொலையாயிடுச்சாமே?"

"அந்தப் பயலுவள வுடக்கூடாது மாமு."

"வெட்டிட்டாப் போச்சு."

"சீக்கிரம் வீட்டுக்குப் போயிரனும்ங்க."

கலவையான பேச்சுக் குரல்களிடையே இவள் குழம்பினாள்.

இத்தனை சாமான்களோடு எப்படி இறங்க?

"இதுதாம்மா ரூட்டு?"



இவள் திகைக்க, ஏம்ப்பா விளக்குத்தூண் போவனும் வருமில்லை" என்றொரு குடும்பம் ஆட்டோக்காரனைப் பிடிக்க,

அவன் ரம்யாவை உதறினான்.

இவள் சாமான்களை இறக்கி சாலையோரமாய் வைக்க, தன் முட்டாள்தனம் மேலும் தெளிவானது.

மதுரை பஸ் நிலையம் குச்சியிட்ட தேனடை போல கலவரமடைந்திருந்தது. மக்கள் அலைபாய்ந்தனர்.

இதில் நாலுக்கு ஆறடி பெரிய கம்பளம், பல ரோல் திரைச்சீலைகள் போதாக்குறைக்கு பானைகளுடன் இவள் திகைத்து நின்றாள்.

இருபுறமும் வாகனங்கள் சீறிப் போயின.

"இந்தா ஓரமா நில்லும்மா... ரோதனை..." ஒருவன் சலிக்க, தூக்கமாட்டாமல் அத்தனையையும் அள்ளினாள். ஓரமாய் போக முனைய, இவள் பிடியிலிருந்த கம்பளத்தை யாரோ உருவுவதை உணர்ந்தாள்.

முழுசாய் நாலாயிரம் தந்து வாங்கிய பொருள்... அலறினாள்.

"ஐயையோ..."

"ஷ்... ரம்யா.. நாந்தான் கொடு."

ஒருத்தரைப் பார்த்தால் இத்தனை சந்தோஷம் ஏற்படுமா? நிம்மதியான மகிழ்வில் கண்களில் நீர் துளிர்த்தது. அத்தனையையும் கச்சிதமாய் காரின் பின்புறம் அடுக்கியவன் காரை லாவகமாக செலுத்தினான்.

ஜனத்திரள் குறைந்த சாலையை அடைந்து வேகமெடுத்தது கார்.

"இப்ப எங்க போறோம்?"

"வீட்டுக்குத்தான்."

"ரோட்ல மறியல்... கலாட்டா..."

"வேற பாதையிருக்குது. கொஞ்சம் சுற்று வழி.."

வெகு நிம்மதியாய் உணர்ந்தாள்.

"ரொ.. ரொம்ப பயந்துட்டேன்."

"தெரிஞ்சது.. வீரமெல்லாம் எங்கிட்ட மட்டும்தான்னு." இவள் பேசவில்லை.

"எப்படி மதுரைக்கு வந்தே?"

"ஸ்கூட்டிலதான்.."

இப்போது அவன் மௌனமாயிருந்தான். டிக்கி நிறைய ஏற்றிய லக்கேஜை நினைத்துதான் இந்த மௌனம் என்பது புரிய புழுங்கினாள்.

"சரி.. ஸ்கூட்டி எங்கே?"

"மதுரை, திண்டுக்கல் ரோடில ஒரு பெரிய பெட்ரோல் பங்க்கில நிறுத்தினேன்."

"எது பி. ஆர். எஸ்.ஸா?"

"பெயர்.. பெயர் தெரியலை.. பெரிய வேப்ப மரம் ரெண்டு நின்னுது."

சொன்னவளுக்குத் தன் தலையில் தானே குட்டிக் கொள்ளலாம் போலிருந்தது. எத்தனை 'அச்சு-பிச்சு' செயல்கள்.. ஞாபக மறதி..!

கார் அலுங்காமல் விரைந்தது.

வழியில் சிறு உணவகத்தில் இறங்கினான்.

"என்ன?" பாதி உறக்கத்தில் கேட்டாள்.

"ஏதேனும் சாப்பிடலாம். உனக்குப் பசிக்குதுல்ல?"

வயிறு சிள்ளியதுதான்.

வீட்டில் இறக்கி விட்டவனிடம் நன்றி பொங்கியது.

உடம்பு களைத்திருந்தும் உறக்கம் பிடிக்கவில்லை. புரண்டு தவித்தாள். அவன் சொன்னது உண்மை.



வாழ்வு நிறைய, வீடு நிறைய அலங்காரப் பொருட்கள் போதாது. அதில் இணைந்து வாழ நல்ல துணை வேணும்.

குதூகலமாய் கும்மாளமிடக் குழந்தைகள் வேணும்.

அதில்தான் மனித வாழ்வு நிறையும். மேன்மை காணும். அதுவரை இந்த வெறுமை நீடிக்குமோ?

அதிகாலை அப்படி ஒரு போன் வரும் என்று ரம்யா எதிர்பார்த்திருக்கவில்லை.

நேற்றைய தவிப்பு மறந்து விட கால் பாவாமல் வீடு முழுக்கச் சுற்றித் திரிந்தாள்.

பத்து மணிக்கு மேல் பரிச்சயமான சத்தம் கேட்டு வாசலுக்கு ஓடினாள்.

ஓய்ந்து அலுத்து நின்றது அவளது ஸ்கூட்டி!

"அடடே... ரொம்ப.. ரொம்ப தாங்க்ஸ்."

"நேத்து உன்னை பத்திரமாய் வீடு வந்து சேர்த்ததுக்குக் கூட நன்றியில்லை. ஸ்கூட்டி கொண்டு வந்ததுக்குக் கிடைக்குது." சிரித்தான் ராஜேந்திரன்.

"ஸாரி. நேத்து ஒரு மாதிரி திகைப்பிலிருந்தேன். நீங்க வரலைன்னா நிலைமை ரொம்ப சிரமமாயிருந்திருக்கும்.. ரொம்ப தாங்க்ஸ்."

"பரவால்ல."

"இதுக்காக மதுரை வரைப் போனீங்களா?"

"தெரிஞ்ச பங்க். ஒரு போன் போட்டு எடுத்துட்டு வரச் சொன்னேன்."

"நிறைய சிரமந் தந்துட்டேன்.."

"முகம் சந்தோஷமாத் தெரியுது?"

"ஆமா சித்தி ரெண்டு நாளிலே வர்றாங்க."

"நல்லது. ஏதும் உதவி தேவைன்னா சொல்லு. வரட்டா?"

"கண்டிப்பா சித்தி வந்ததும் நீங்களும் வரணும். விருந்துக்கு.."

மின்னிய அவள் விழிகளைப் பார்த்தவன் வறண்ட குரலில் சொன்னான்.

"இதில காலவாசிப் பாசத்தை உன் பெரியப்பாட்டேயும் காட்டியிருக்கலாம் ரம்யா.. நீ. அவர் திருப்தியாய் போயிருப்பார்.."

## 19

குளித்து சாப்பிட்டுவிட்டு படுத்திருந்தனர் இரு பெண்களும்.

"ரொம்பப் பெருமையாயிருக்கு ரம்யா.."

"முத பழத்தைச் சாப்பிட வந்துட்டீங்களே... எனக்கு சந்தோஷம் தாங்கலைச் சித்தி."

"சாப்பிடும் போது எனக்கும் அப்படித்தானிருந்தது. இது ரம்யாவே போட்டெடுத்ததுன்னு. இத்தனை லாபம் வரும்னு நீயே எதிர்பார்த்திருக்கமாட்டே.."

"இல்லை சித்தி. ஆனால் இந்த நிலம் கிடைச்சதும் ஏதேனும் சாதிக்கணுங்கற ஆசை. கைல வில்லும் அம்பும் கிடைச்சது போல."

"அதை வளமாய் வளைச்சிட்டே.."

"துதி சரியா இருக்கணுமே. ஆண்டவன் கிருபையில எல்லாம் படி வந்தது. இது செய்தேன்ங்கற கர்வம் இருந்தாத்தானே வாழ்க்கை ருசிக்கும்?"

"ம்ம்.. ஆனா அடிப்படை அன்பான குடும்பந்தான்டி.. கோபாலனைப் பத்தி மூச்சு விடலியே நீ?"

"எதிர்பார்க்காத திருப்பமில்லியா.. நீங்க பதறுவீங்கன்னு... எனக்கே நிறைய குழப்பம் எரிச்சல்."



"ரொம்ப நல்ல பையன். ஸ்டேஷனுக்குக் காரோட வந்துட்டாரே?"

"முதல்ல இடத்தைக் காலி பண்ணாமல் ஒரே அழிம்பு.. னரில் எப்படி பேசுவாங்களோன்னு பயந்தேன்."

"நம்ப மனசாட்சிக்குத்தாம்மா பயப்படணும். கோபாலனைப் பற்றி சொன்னேனே.

'கல்யாணம் பண்ணிக்கிறியா'ன்னு கேட்டவர் வேற ஜாதி. பழக்க வழக்கமெல்லாம் வித்தியாசம். ஒத்து வராதுன்னு நினைச்சேன்.. அது புரிஞ்சவர் ஒரு வரி சொன்னார்.

'மனவீட்டைத் திறப்பாய் சாதி மரக்கதவை உடைத்து'ன்னு" பாரதிதாசன் கவிதையாம்."

"அடடே.. கவிதையும் பிடிக்குமா சித்தப்பாக்கு?"

சித்தி முகம் ஒரேயடியாய் சிவந்தது.

"நீயுந்தான் சங்க இலக்கியம் பற்றிப் பேசினே.."

"நானா?"

"ம்ம்.. வெள்ளரிக்காய் முன்னே 'அணில்வரிக் கொடுங்காய்'னு வழங்கப்பட்டது. சொல்லலை?" சிரித்தார்கள்.

பல நாட்கள் கழித்து உவகையுடன் பொங்கிய சிரிப்பு. மனதை இலகுவாக்கியது.

"எனக்குன்னு உள்ளவரை சந்திக்காத வரைக்கும் மனக்கதவுகள் மூடித்தான் கிடந்தது ரம்யா. கோபாலன்ட்ட பழகப்பழக இயல்பாய் திறந்திடுச்சு?"

"அந்த ஈர்ப்பு உண்மையா, கற்பனையான்னு எப்படி புரிஞ்சுக்கறது?"

சித்தி இளையவளை ஆச்சர்யத்துடன் பார்த்தாள்.

"நானும் இதே போல கோபலன்ட்ட கேட்டேன்-

"வாழ்க்கைங்க ஓராயிரம் கற்பனைகளும் ஒன்றிரண்டு உண்மைகளும் கொண்டது. வீணான கற்பனையில உண்மையை நழுவ விட்டுறக் கூடாதுன்னார்."

"இப்படிக் கவிதையாய்ப் பேசி பேசியே உங்களை மடக்கிட்டார்!"

ஆனால் அதிலிருந்த உண்மை அவளை சிந்திக்கச் சொன்னது. உள்ளங்கையில் இட்ட சூடான அல்வா போல... அச்சிந்தனையில் நெய் மணத்தது— ஆனால் உள்ளங்கையும் கூட குழம்பினாள்.

இதுவரை தன் மனதை ஆராய்ந்தவளுக்கு ராஜேந்திரன் மீது தனக்கு பெரும் ஈர்ப்பு இருப்பது புரிந்தது.

அவன் குணம், பண்பு, தோற்றம், கம்பீரம் அத்தனையும் காந்தமாய் ஈர்த்தன. சதா அவன் நினைப்பு நிழலாய்.

சில சமயங்களில் மற்ற அத்தனையும் பின்தள்ளி விட்டுப் பிரதானமாய்!

"ராஜ் தம்பியை ஒரு நாள் சாப்பிடக் கூப்பிடணும் ரம்யா."

"ம்ம்... சொன்னேன். சித்தி. கடைசியாய் இப்ப உதவி செய்தார்னு சொன்னேனே அப்பவும் சொன்னேன்."

அன்று ரம்யாவே பார்த்து பார்த்து சமைத்தாள்.

"பொண்ணுங்க தங்களுக்குன்னு வீடு அமைஞ்சதும் தேறிடுவாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். நிஜந்தான் ...பாகமாய் சமைச்சிருக்கே..."

மறுபடி ராஜேந்திரன் நினைப்பு வந்தது.

"நீங்கக் கூட கலகலன்னு பேசறீங்க சித்தி. முன்னே ...ப்படியில்லையே."

"ஆமால்ல? அப்படீன்னா காதலும் ஆட்களை ...டுதே?"

...விருந்துக்கு வந்த ராஜேந்திரன் இயல்பாய் பேசினான். ...து சாப்பிட்டான்.



"பிரமாதம். ஆனால் வயிறு முட்டுது. கொஞ்சம் சுக்கு டீ கிடைக்குமா?"

"தோ..."

"நீ இரு ரம்யா. நா போட்டு அனுப்பறேன். சாப்பிடப் போன உங்க நாய்களையும் பாத்துட்டு வரேன்."

சித்தி எழுந்து உள்ளே போய்விட இருவரும் அன்றுதான் புதிதாய் சந்திப்பவர்கள் போல தயங்கி பார்த்தார்கள்.

அவஸ்தையான பிசுபிசுப்பில் மௌனம்.

"நீ... நீ ராதிகாவையும் அழைப்பேன்னு நினைச்சேன்."

"தோணலை.. உங்களுக்கு நன்றி சொல்லத்தான் இந்த விருந்து."

எழுந்தவன் இவள் அருகே வந்து நின்றான். குரல் தாழ்ந்தது.

"சாப்பாடு போட்டுத்தான் நன்றியைத் தெரிவிக்கணும்னு இல்லை. வேற மாதிரியும் காட்டலாம்."

இருதயம் படபடக்க இறுகி அமர்ந்தாள்.

"எதுக்கு பால் காய்ச்சின கையோட அன்னைக்கு சொல்லிக்காம கிளம்பிட்ட ரம்யா? அது சொன்னாப் போதும். நூறு நன்றி சொன்ன மாதிரி."

இவளுக்கு தொண்டை அடைத்தது.

ஆனால் பேசி தீர்க்க இனி இதுபோலொரு சந்தர்ப்பம் வாய்க்குமா?

"ரெ.. ரெண்டு பேர் பேசறதைக் கேட்டேன்."

"யாரது?"

"தெரியலை... பார்க்கலை. ஆனா தெரியாத குரல்."

"ஆக ஒட்டுக் கேட்ட?"

"ச்சே... டம்ளர் கழுவ பின்பக்கம் போக, அவங்க பேச்சு காதில விழுந்தது. எம்பேரைச் சொன்னாங்க. பிறகு நீங்க

என்னை பால் காய்ச்சச் சொன்னது. புடவை தந்தது எல்லாம் இந்த வீட்டுக்காக. சொத்துக்காகன்னு.

"புரியலை."

"என்னைக் கல்யாணம் செய்தா அத்தனையும் உங்களுடையதாயிடும்னு."

"யாரோ பேசறதை நம்பிடறதா? நான் அப்படிப்பட்டவன்னு தோணுதா?"

அமர்ந்திருந்தவளின் முகவாயைத் தொட்டுத் தூக்கினான். அவனைப் பார்த்த கண்கள் கலங்கின.

"என் சொத்து விவரங்களை முன்னமே சொல்லியிருந்தா இந்தச் சந்தேகம் வந்திருக்காது.. ஆனா நீ என்னை நம்புவேன்னு நினைச்சேன்."

அழ மூச்செடுத்தவன் தொடர்ந்தான்.

"உன் நிலத்தை விட என்னுது ரெண்டு மடங்கு அதிகம் ரம்யா. பூர்வீகமாய் வந்தது ஐம்பது ஏக்கர். வந்து தங்கின எனக்கு இந்த வாழ்க்கைப் பிடிக்கப் போக கூட எழுவது ஏக்கர் வரை வாங்கினேன்.. இப்ப நீ தர்பூசணி போட்டெடுத்த நிலம். அதுகூட என்னுடையது."

'விலுக்'கென நிமிர்ந்தாள்.

விழிகள் கேள்வியுடன் விரிந்தன.

"மரம் இல்லாத வெட்ட வெளி கேட்ட சமீபமாய் வாங்கிப் போட்ட இடந்தான் அப்படிக் கிடந்தது. ஆக பயன்படுத்தச் சொன்னேன். அது என்னுடையதுங்கறதைச் சொல்லாமல்."

"ஸாரி.. அப்ப லாபத்தில் ஒரு பங்கை."

"திட்டமிட்ட உழைச்ச உனக்குத்தான் அந்த வருமானம் . இப்ப நாம பேசற விஷயம் வேற. இது போக எனக்கு னையில ரெண்டு வீடிருக்குது. இத்தனையும் போதாதுன்னு பண்ணைக்காய்.. இல்ல வீட்டுக்காய் நான் ஏன் உன்னை றும் கல்யாணம் செய்துக்கணும்?"



விழித்தபடி இருந்தாள்.

"அப்ப வர்ணம் சொன்னது சரிதான். "கழுவாம டம்ளரோட திகைச்சு நின்னாங்க அம்மா. பின்னால ரெண்டு பசங்க ஏதோ பேசிட்டிருந்தாங்க. கழுவினபடி அவனுங்களை நான் அதட்டி விசாரிக்கவும் விஷயம் வெளியானது - ராதிகா சொன்னதைத் தான் நாங்க பேசிக்கிறோம்னாங்களாம். ராதிகா சொன்னதா இல்லை அவங்களை உன் காதுபட அப்படிப் பேச ஏவினாளாங்கறது தெரியலை. ஆனா நான் யாரோ பேசினதைக் கேட்டு நீ ஓடியிருப்பேங்கறதை நம்பலை. நீ கெட்டிக்காரின்னு ஒரு நினைப்பு.." சற்று கசப்புடன் தலையாட்டினான்.

"போட்ட விதை நல்லபடி முளைச்சது எங்கெட்டிக்காரத்தனமில்லை.. இப்ப புரியுது."

"வந்ததை துணிஞ்சு இழுத்து போட்டு சாதிச்சதிலே நீ கெட்டிக்காரி. ஒத்துக்கறேன். ஆனா உம்மனசை உனக்கேப் புரிய முடியாததுன்னு ஏன்னுதான் புரியலை.."

தயங்கி நிமிர்ந்தாள்.

"நான் ஏமாத்தினதாய் நினைச்சது உனக்கு அத்தனை வேதனையாயிருந்ததின் காரணம் என்ன.. காதல் தானா? உம்மனசில நான் இருக்கேன் ரம்யா.. ஏன் அதை ஒத்துக்க மாட்டேங்கற?"

மிருதுவாய் அவள் தோள்களைப் பற்றி எழுப்பினான்.

பொம்மைப் போல எழுந்தவளைத் தன் பக்கமாய் இழுத்தான்.

"ம்க்கும்" கனைத்த சித்தி தேநீர் ட்ரேயுடன் நின்றிருந்தாள்!

## 20

ராஜேந்திரன் அலட்டவில்லை.

இவள் தோள் மீதிருந்த கைகளை விலக்கவுமில்லை.

ரம்யாதான் திணறினாள்.

"சில விஷயங்களைத் தெளிவுபடுத்திட்டிருக்கோம்..." புன்னகைத்தான்.

"நல்லது. நான் தெளிவுபடுத்த வேண்டிய விஷயமும் ஒன்னிருக்கு. ரம்யா இதுவரை பெரியப்பாவைப் பார்க்க வரலியேங்கற வருத்தம் உங்களுக்கு இருந்திருக்கும். வர்ணம் நீங்க பெரியவரோட ரொம்ப நெருக்கம்னதும் அதைப் புரிஞ்சுக்கிட்டேன். அதுவும் பெரியவர் அழைச்சும் வரலியேங்கற காட்டம் இருக்கும்.. அதுக்குக் காரணம் நாந்தாங்க ரம்யாவை.. எனக்கிருந்த ஒரே உறவை விட்டுத் தர மனசில்லை. தவிர சின்னப் பொண்ணு ஒரு வசதியில்லாத கிராமத்துல போய் சமாளிப்பாளாங்கற கரிசனை.. என்னால தான் அவளை நல்லவிதமாக கவனுக்கக்க முடியுங்கற கர்வம்."

"அப்ப பெரியப்பா அழைச்சதே ரம்யாவுக்குத் தெரியாதா?"

"அப்ப சொல்லலை.. இப்பக் கிளம்பும் போதுதான் சொன்னேன். அவள் விரும்பினா வரட்டும்னாராம். வக்கீல்தான் பெரியவர் சார்பிலே அழைச்சார்னு நினைக்கிறேன்."

"ம்ம்."

ராஜேந்திரனின் பார்வை ரம்யாவை,

'எங்கிட்ட இதை ஏன் சொல்லலை' என்ற கேள்வியுடன் வருடியது!



"தவிர எனக்கொரு வருத்தம். எங்கக்கா அதான் ரம்யாவோட அம்மா இறந்த சமயம் பெரியத்தான் வரலை. அந்தக் கோபங்கூட..."

"காப்டன் அந்த சமயம் இந்தியாவில் இல்லியாம். பிறகு எங்கிட்ட கூட சொல்லி வருத்தப்பட்டார். ஆனா சிலோன்ல இருந்து வந்து ரம்யா மும்பையில உங்க கூடத்தான் இருக்காங்கறது தெரிஞ்ச பிறகு விட்டுட்டார்."

"சிலோன்னுல யாரிருந்தா?"

"ஒரு டெர்மடாலஜிஸ்ட் ஃப்ரெண்ட். தன் தோல் நோய்க்கு ஏதேனும் குணம் கிடைக்குமான்னு தேடப் போயிருந்தாராம்."

"என்ன வியாதி அவருக்கு?"

"சொரயாஸின்னு சரும வியாதி. சிறு வயசு முதலே இருந்ததைச் சரியா கவனிக்காததில உடம்பெல்லாம் பரவிடுச்சு. அதனாலியே கேப்டன் வெளியே சகஜமாய் வரதில்லை. யாரோடேயும் பழகறதில்லை. கல்யாணம் செய்துக்காததுக்கும் அதான் காரணம். வர்ரவ அருவெறுப்பாளோ.. தன் குழந்தைகளுக்கும் வந்திடுமோன்ற பயம். இது ஒட்டாதுன்னு தெளிவு படுத்தி ஓரளவு நெருங்கிப் பழகினது நான்தான். எங்கம்மா குடும்பம் ஓரளவு அவருக்கு பரிச்சயம். ஆக ஒண்டியாய் வந்த எனக்கு தங்க இடந் தந்தார். அப்படியே தொடர்பு தொடர்ந்திடுச்சு.. அப்புறம் ஓரளவு மனசு மாறி ரம்யாவை வரச் சொன்னார். இப்ப யோசிச்சு பார்த்தா எங்களை ஜோடி சேர்க்கிற திட்டமோ அதுன்னு தோணுது.. என்ன நினைக்கறீங்க அத்தை? எனக்கும் ரம்யாவைப் பார்க்க ஆசைதான்" கண்சிமிட்டினான் குறும்பாய்.

"ரம்யா இத்தனை அழகாய் இருப்பான்னு உங்களுக்கு அப்போ தெரிஞ்சிருக்காதே."

சித்தியும் சீண்டினாள்.

"பழைய ஃபோட்டோ ஒன்னு. ரம்யாவோட அம்மா அனுப்பியிருந்ததைப் பார்த்தேன்.. அப்ப புடலங்காய்க்கு கவுன் போட்டது போல நின்னா.. ஆனா முகம் இதே அழகு! அப்பவே கண்ணு வச்சிட்டேன்."

"கண்ணு வைக்கலாம்.. ஆனா எத்தனை அழகு இருந்தாலும் குணமில்லாத பெண்ணை மனசு விரும்பாது ராஜ்."

"வாஸ்தவம். ரம்யா காரம், மணம், குணமெல்லாம் நிறைஞ்ச பட்டணத்துக் குட்டி!"

"என்ன சித்தி இது. ரெண்டு பேருமா ஏதேதோ பேசறீங்க?"

"எந்தப்பை ஒத்துக்கணும்னு நினைச்சேன்... இதோ கிளம்பிட்டேன்."

சித்தி அவசரமாய் கிளம்பினாள்.

"ஆக உனக்கும் உன் பெரியப்பாக்கும் சந்திச்சுக்கற பிராப்தம் இல்லையம்..?"

தனிமையில் மறுபடி அவள் தோளில் கை போட்டு, தன் பக்கமாய் திருப்பி நிறுத்தினான்.

ஏதோ அளரக் கிறக்கமாய்.

"நாம சந்திக்கணும்ங்கற பிராப்தம் இருந்திருக்கு" முணங்கினாள்.

"பெரியவருக்கு நன்றி சொல்லணும் ரம்யா. இந்தத் திட்டத்தோடதான் உனக்கு சொத்து தந்து உன்னை இங்கே வரவழைச்சிருக்கார்... சந்திச்சிட்டோம் இப்போ கல்யாண ப்ராப்தம் இருக்கான்னு சொல்லணும் நீ.."

அவனது அண்மையும், ஆண் வாசனையும் மீறி யோசிக்க முயன்றாள். இன்னும் ஓரடி எடுத்து வைத்தால் அவன் அணைப்பிற்குள் அடங்கி விடலாம்.. ஆனால் அதற்கு முன்..

"ம்ம்.. அப்ப ராதிகா?"

"அவளுக்கென்ன இப்போ?"



"அத்தனைப் பணம் அவளுக்கு எப்படி வந்ததுன்னு யோசிச்சிருக்கேன். யாரோ அவளுக்குக் காசு தர்ரதாய்... அதாவது அவளை வச்சிருக்கதாய்.. ஊரில் பேச்சு."

"ஆஹா.. என்னைப் பற்றி வேறென்ன உயர்ந்த அபிப்ராய மெல்லாம் வச்சிருக்கேம்மா?"

மதுரையிலுள்ள ஒரு அரசியல் பெரும்புள்ளியின் பெயரைச் சொன்னான்.

"அவரோட ஆள் ராதிகா. அடிப்படையில நல்ல பொண்ணு. ஆனா இந்தத் தொடர்பால கசந்து போயிட்டா. அந்தப் பொறாமையிலேதான் உம் மனசைக் கலைக்க முயற்சி பண்ணியிருக்கா."

"உங்களை அன்னைக்கு அவ வீட்டிலே ரூமிலே பார்த்தேன்."

"ம்..? டாக்ஸி ப்ரேக் டவுன் ஆனதால அவளை வீட்டில வந்து இறக்கி விட்டேன். காபி தந்தா உபசாரமா.. அது சிந்திட கழுவ பாத்ரூம் போனேன். அதிலேயும் சந்தேகமா?"

"உரிமையில்லாத இடத்தில சந்தேகம் வராது."

"ஓ..? முழுக்க தெரிந்த அவள் முகம் வெகு அழகாய் தெரிந்தது. இன்னும் அவளைச் சீண்ட வேணும் போலிருந்தது.

"இப்ப கல்யாணம்ங்கறீங்க. வந்தது முதல் என்னை எத்தனை சீண்டியிருக்கீங்க."

"அது.. பெரியவரை நீ பார்க்க வரலியேங்கற ஆத்திரம் கொஞ்சம் இருந்ததுதான். சொத்து கிடைச்சதும் ஓடின வந்தியோங்கற ஆதங்கம்.. ஆனா பழகி உன் குணம் புரிய உன்னை நேசிச்சேன் ரம்யா.. மதிச்சேன்."

"இப்ப சித்தி சொன்னதுல முழுக்க கோபம் தெளிஞ்சிருச் சாக்கும்..?"

"மதிப்பும் கூடியிருச்சு. உங்க சித்தியை ஒரு வார்த்தை விட்டுக் கொடுக்கலியே நீ?"

அவன் கைகள் அவள் முதுகை ஆதரவாய் நீவின நீண்டப் பின்னலைச் சீண்டின.

"ம்ப்ச்." சிணுங்கினாள்.

"அப்ப வீடு எனக்குத்தானே?"

"ம்ம்?"

"பயப்படாத. உன் மனவீட்டைச் சொல்றேன்."

சிரித்த அவள் கன்னம் குழிந்தது.

தன்னை மீறிய தாபத்துடன் எம்பி அதில் மெல்லிய முத்தமிட்டான்.

ஆர்வமாய் அவளை மேலும் தன் பிடிக்குள் இறுக்கினான். மனக்கதவுகள் சத்தமில்லாமல் திறந்து கொண்டன.

---